www.padippakam.com



# காலம்

ஆகஸ்ட் 1991

3 & 4

ஜி. நாகராஜன் ○ 'குறுமலை சுந்தரம்' ○ சரண்யா
குமார் மூர்த்தி ○ செ. லோகநாதன் ○ கார்கோடன்
சமயவேல் ○ ந. ஜயபாஸ்கரன் ○ ஜெயமோகன்
ஹம்சத்வனி ○ மகரந்தன் ○ ஆனந்த பிரசாத்
பா. அ. ஜயகரன் ○ அ. கந்தசாமி

படிப்பகம்

www.padippakam.com

இதழ் : மூன்று—நான்கு
ஆகஸ்ட் 1991

○ ○ ○

ஆசிரியர் :

செல்வம்

இணையாசிரியர் :

ஆனந்த பிரசாத்

○ ○ ○

வெளியிடுபவர் :

K.V. Moorth[illegible]
711 Kenned[illegible]
Scarboro
Toronto
CANADA

KAALAM
P.O. Box [illegible]31
2376 Eglinton Ave., East
Scarborough, Ont., M1K 5K3
Canada

○ ○ ○

பிரான்ஸ் தொடர்பு முகவரி :

S. Sabalingam
3 Alle Paul Leautaud
95200 Sarcelles
FRANCE

○ ○ ○

இலங்கை தொடர்பு முகவரி :

Parthasarathy
40 Hamden Lane
Colombo-6.
Sri Lanka

○ ○ ○

இந்தியா தொடர்பு முகவரி :

VAYAL
*Publishers & Book Sellers*
5 Kutchery Lane
Mylapore
Madras-600 004
S.India

# காலம் 3 & 4

இந்த இதழ் அதிக பக்கங்களுடன் இரு இதழ் இணைப்பாக (3 & 4) வெளி வருகிறது.

அடுத்த இதழ் தயாராகிக் கொண்டிருக்கிறது. அடுத்த மாதம் வெளிவரும்.

இதழ் பற்றிய அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

எழுதுங்கள்.

தங்கள்—
செல்வம்

www.padippakam.com

# குறத்தி முடுக்கு

*ஜி. நாகராஜன்*

குறத்தி முடுக்கின் வீடுகள் தோறும் பெண்கள் நின்று கொண்டிருக்கின்றனர். தெருவில் விளக்கொளி மங்கலாக உள்ளது. காரணம், பல மின் சார விளக்குகளின் பல்புகள் உடைந்திருப்பதே. சிறிது பேச்சொலி மட்டும் கேட்கின்றது. தெருவில் அதிகப்படியான நடமாட்டம் இல்லை. அடுத்த, பக்கத்துத் தெருக்களிலெல்லாம் அதிகப்படியான வெளிச்சம். அதிகப்படியான மனித நடமாட்டம்.

ஒரு வாலிபன் தெருவின் இருபுறங்களையும் பார்த்தவண்ணம் வேகமாக நடந்து வருகிறான். வீட்டு வாயிற்படிகளில் நிற்கும் பெண்கள் அவனைக் கண்டதும் அசைந்து கொடுக்கின்றனர்; இலேசாக ஏதோ முணுமுணுக்கின்றனர்; மெல்லச்சிரித்து அவனை உற்று நோக்குகின்றனர். வாலிபன் குறத்தி முடுக்கைக் கடந்து வெளியே வருகிறான். ஒரு வெற்றிலைப் பாக்குக் கடைக்குச்சென்று சிகரெட்டு வாங்கி பற்ற வைத்துக் கொள்கிறான். மீண்டும் குறத்தி முடுக்கினுள் பிரவேசிக்கின்றான். இப்பொழுது அவன் வீதியின் நடுவில் நடந்து வரவில்லை; ஒரு ஓரமாக வருகின்றான். ஒரு வீட்டை அடைந்ததும் வாயிற்படியில் உட்கார்ந்திருக்கும் சிறுமி, எழுந்து உள்ளே சென்று, அவனையும் உள்ளே வருமாறு சமிக்கை செய்கிறாள். அவன் உள்ளே நுழைகிறான். கதவு தாளிடப்படுகிறது.

அறையினுள் மங்கலான விளக்கு. ஒரு பாய் விரித்துக்கிடக்கிறது. சுவரோரமாகக் கட்டப் பட்டிருக்கும் கயிற்றில் சில சேலைகளும், ஜம்பர்களும் தொங்குகின்றன. சுவரில் அங்குமிங்குமாக சில சினிமாப் படங்கள் கத்தரித்து ஒட்டப் பட்டிருக்கின்றன.

''என்ன கேக்கிறே?''

''அஞ்சு ரூபாய் தா''

''உம்......ஒரு ரூபாய் தரேன்''

''ஒரு ரூபாய்க்கு வரத்துக்கு இங்கு ஒருத்தரும் இல்லை; அதற்கு கொஞ்ச காலம் கழிச்சு வாங்க.'' அவள் கதவருகே செல்கிறாள்; அவனும் செல்கிறான், அவளைவிட வேகமாக. அவன் இருட்டில் தடுமாறுகிறான்.

''சரி, மூணு ரூபாய் தா''

''உம், ஒரு ரூபாய்க்கு மேலே கிடையாது; நீ ஒழுங்கா நடந்துக்கிட்டா கூட எட்டணா தருவேன்.''

அவள் சேலையைத் திருத்திக்கொள்ளும் பாவனையில் அவளது மார்பகத்தைக் காட்டுகிறாள். அவன் அவளை ஏறயிறங்கப் பார்க்கிறான்.

''சரி, இரண்டு ரூபாய் வச்சுக்க.''

''சரி எடுங்க'' என்கிறாள்.

''வா, முடிச்சிட்டுத் தரேன்'' என்று கூறிக் கொண்டே, அவன் அவளது முதுகின் மேல் கையை வைக்கின்றான்.

''சு, இங்கே ஒண்ணும் தகராறு பண்ணாதீங்க. முன்னாலே ரூபாயை எடுங்க.''

அவன் இரண்டு ரூபாயை எடுத்து அவள் கையில் தருகிறான். அதை அவள் வாங்கி, நிறுத்தி நிதானமாக அவளது இடுப்பில் முடிந்து கொள்கிறாள். அவன் அவளது அழகை ரசித்த வண்ணம் நிற்கிறான். அவள் பாயைச் சரிப்படுத்தி விட்டு, தலை மயிரை விலக்கி, பாயில் படுத்துக் கொண்டு, ஜம்பர் முடிச்சை அவிழ்த்துவிடுகிறாள். அவன் அவளருகே உட்கார்ந்து கொண்டு, அவளது உதடுகளிலும், கன்னத்திலும், கழுத்திலும், முத்துகிறான். அவன் முத்திய ஒவ்வொரு இடத்தையும் அவள் துடைத்துக் கொள்கிறாள்.

''உன் பெயரென்ன?''

''மரகதம்''

www.padippakam.com



"வயசு?"

''பதினாறு"

''நீ இங்கே வந்து எவ்வளவு காலமாச்சு?"

''ஒரு மாசமா''

"உம், பொய் சொல்றே"

அவளது வலது கை அவனது வயிற்றுக்கு அருகே செல்கின்றது. அவன் அவளது கையைத் தடுத்து நிறுத்துகின்றான். அவளது முகம் மாறுகின்றது.

''உம், சீக்கிரம். நேரமாகுது"

"என்ன நேரமாகுது? இப்பத்தானே வந்தேன்." அவன் அசட்டுச் சிரிப்புடன் அவளை முத்த முயலுகிறான். அவள் வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள். அவளை முறைத்துப் பார்த்துக் கொண்டே அவன் எழுந்து வருகின்றான்.

ஐந்து நிமிடங்கள் ஆகின்றன. அவள் அவனைப் பார்த்து புன்முறுவல் பூக்கிறாள். அரை மனதோடு அவன் சிரிக்கின்றான். இருவரும் எழுந்து ஜலசுத்தி செய்து கொள்கின்றனர். அவள் ஆடையை சரி செய்து கொள்கிறாள்.

"காப்பிக்கு எதுவும் தாங்க".

''உம், உம், கதவைத் திற", என்று சொல்லிக் கொண்டே, அவன் அவள் கன்னத்தைத் தட்டுகிறான். அவள் கதவைத் திறக்கிறாள். அவன் வெளியேறுகிறான். அடுத்த வீட்டு வாசலிலே நின்று கொண்டிருக்கும் ஒரு ''பெரிசு'' பெருமூச்சு விடுகிறது. மரகதம் அதிர்ஷ்டக்காரி; அவள் ''பொடிசு".

ப ப ப

குறத்திமுடுக்குக்கு அடுத்து ஒரு பெரிய தெரு. அங்கு டீக்கடையில் நான் உட்கார்ந்திருந்தேன். மூன்றாவது சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டே மற்றுமொரு கப் டீக்கு உத்தரவிட்டேன். செர்வர் ''ஒரு கப் ஸ்ட்ராங் டீ" என பறையறிவித்தான். டீக்கடை கிராமபோன் அடுத்த கடை, எதிர்த்த கடை கிராமபோன்களோடு போட்டி போட்டுக்கொண்டு அலறிக் கொண்டிருந்தது. எனக்கு எதிரே உட்கார்ந்திருந்த கூட்டம் ஒன்று, ஒரு கப் டீயைக் குடித்துவிட்டு, இரைச்சலும், நகைப்பும் போட்டுக் கொண்டு ஒட்டலைவிட்டுக் கிளம்பியது. கடிகாரத்தைப் பார்த்தேன். மணி இரண்டரை. இன்னும் சிறிது நேரத்தில் இரண்டாவது காட்சி முடிவடைந்து அவிழ்த்து விடப்பட்ட மந்தை சிறிது, சிறிதாக சின்னா பின்னமாகச் சிதறி தொழுவங்களிலே அடைந்துவிடும். ஓட்டல் கிராமபோன்கள் சர்க்கஸ் விளையாடிக் களைத்த சிறுமிகளைப்போல, தொண்டை கனத்து, தலை கவிழ்த்து சிறிது நேர ஓய்வுக்குள் ஆழ்ந்துவிடும். ஓட்டல் வேலையாட்கள் பாத்திரம் கழுவும் சத்தத்தைத் தவிர வெறொரு சத்தம் இருக்காது. பகட்டான மெர்குரி விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருக்கும்.

ஓட்டல் முதலாளி ஒரு பத்திரிகையை அவர் முன் விரித்துப் பிடித்து வாசித்துக் கொண்டிருந்தார். என் பார்வை பத்திரிகையின் மீது விழுந்தது. நான் இரண்டு தினங்களுக்கு முன் அனுப்பிய செய்தியின் தலைப்பு என் கண்களிலே பட்டது. ''குழந்தை பெற்றால் தாயின் அழகு குறையுமா?" என்ற கேள்வியே அந்தத்தலைப்பு. நான் அனுப்பிய செய்திக்கு காரியாலயத்தில் இருந்த ஆசிரியர் கொடுத்திருந்த தலைப்பை வாசிக்கவும் எனக்குச் சிரிப்பு வந்தது. எங்கள் பத்திரிகை தமிழ் நாட்டில் பிரபலமான ஒரு பத்திரிகை. தமிழ் நாட்டில் மெத்தப் படித்தவரும், சிறிது படித்தவரும், படிக்க மட்டும் தெரிந்தவரும், எல்லாருமே அதை வாங்கியோ, வாங்காமலோ வாசித்தனர். முதலிரண்டு சாரர் மட்டும் அதைக் குறை கூறிக்கொண்டே வாசித்தனர். எங்கள் பத்திரிகை மட்ட ரக செய்திகளை பிரசுரித்தது என்பது அவர்கள் குற்றச்சாட்டு. ஆனால் எங்கள் பத்திரிகையின் ஆசிரியர் இந்தக் குற்றச்சாட்டைப் பொருட்படுத்தவில்லை. ''தெருக்கோடியில் இட்டிலி விற்கும் பாட்டிக்கும் எனது பத்திரிகையில் செய்தி இருக்க வேண்டும்", என்று அவர் பெருமையுடன் கூறிக்கொள்வார். நானும் அவர் கொள்கையை ஏற்றுக் கொண்டவனே. ஐ. நா. சபையில் க்யூபாபற்றி அமெரிக்கப் பிரதிநிதி ஆற்றிய சொற்பொழிவை பத்திபத்தியாக ஏன் ஒரு தமிழ்ப் பத்திரிகை வெளியிட வேண்டும்? கிரிகெட் என்றால் என்னவென்று தெரியாத நாட்

www.padippakam.com



டில் எந்த டெஸ்ட் பந்தயத்துக்கு யார் நடுவர் என்ற செய்தியைத் தெரிவிக்க என்ன அவசியம்? புற்று நோயை அறியாத நாட்டில், அந்நோயை அறிந்திருந்தாலும், அதன் நிவாரணத்தைப் பற்றிக் கவலைப்படாத நாட்டில், புற்று நோய்க்கு புதிய சிகிச்சை முறை கண்டு பிடிக்கப் பட்டதற்கு ஏன் முக்கியத்துவம் தரவேண்டும்? எங்கள் பத்திரிகை தமிழில் வெளிவருவது; தமிழ் நாட்டு மக்களுக்காகவே வெளியிடப்படு வது. எனவே தமிழ் நாட்டின் செய்திகளுக்குத் தானே முதலிடம் தரவேண்டும்! இதுதான் எங் கள் பத்திரிகை ஆசிரியரின் கொள்கை; எனது கொள்கையுங்கூட. இந்தக் கொள்கையின் விளைவாக எங்கள் பத்திரிகையின் தமிழ் நாட்டு நிருபர்களுக்கு ஓய்வு ஒழிச்சலில்லாத வேலை. தூக்கு, சாவு, குத்து வெட்டு, ஆண்-பெண் ஓடி விடுவது, ஜிஞ்சரினால் மரணம், கையைப் பிடித்து இழுத்தது, ஜம்பர் காணாமற்போனது, அலங்காரம் கலைந்தது, கிழவன்—குமரி கல்யா ணம்—இத்தனைச் செய்திகளையும் திரட்டித் தருவது எங்கள் பத்திரிகை நிருபர்களின் வேலை.

நான் இந்த வேலையைத் திறம்படச் செய் தேன் என்றுதான் சொல்ல வேண்டும். எனக்கு இந்த வேலை பிடித்ததா, இல்லையா என்று கேட்காதீர்கள். எந்த வேலையைப் பற்றியும் அந்தக் கேள்வியைக் கேட்காத அளவுக்குத்தான் ஒருவன் அந்த வேலையை நன்கு செய்ய முடி யும். மேலும் சுதந்திரம் வந்துவிட்ட காலம். தேசபக்தர்கள் சிறை வாழ்க்கையையும், அகிம்சா போராட்டங்களையும் மறந்துவிட்டு தத்தம் தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். ஒவ் வொரு இந்தியனும் தனது தொழிலைத் திறம் படச் செய்வதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும் என்று தலைவர்கள் போதித்து வந்தனர். நானும் காலத்துக்கு ஏற்ற வாறு மாறியிருந்தேன். நண்பன் ஒருவனுக்கு இரவலாகக் கொடுத்திருந்த ''பாரதி பாடல் களை''க்கூட திரும்பக் கேட்க மறந்துவிட்டேன். போலீசிடத்தும், அரசாங்க அதிகாரிகளிடத்தும் எனது தகப்பனாரிடத்தும் எனக்கிருந்த வெறுப் பெல்லாம் படிப்படியாக மறைந்து விட்டது. சிக ரெட்டு, பாப்ளின் ஷர்ட்டு, அழகிய மோட்டார் கார்கள்—இவையெல்லாம் என் மோகத்துக்கு இலக்காயின. சிரித்துப் பேசுவதில் அவமானப் பட வேண்டியது ஒன்றுமில்லை என உணர்ந் தேன். இவற்றுக்கெல்லாம் மேலாக மற்றொரு மாற்றம். மக்கள் கூட்டத்தை தேச பக்தர்கள், தேசத் துரோகிகள் என்ற இரண்டே வகுப்பாகப் பிரிக்காமல், ஒவ்வொரு ஆணும், பெண்ணும் ஒரு ரகம் என்று ஒத்துக் கொண்டேன். யாரை யும் நல்லவன்-கெட்டவன், உலோபி-தாராளக் காரன், பெரிய புத்திக்காரன்—சிறிய புத்திக் காரன், யோக்கியன் — அயோக்கியன், என்ற முறையில் பார்க்காது, அவனது தேவைகள் என்ன, அவற்றை நான் எந்த முறையில் பூர்த்தி செய்து அவனிடத்திலிருந்து என்ன பிரதி உப காரத்தை எதிர்பார்க்க முடியும் என்ற முறை யில் சிந்திக்கலானேன். இத்தகைய மனப் பான்மை ஒன்றை நான் புதிய கண்டுபிடிப்பா கவே கருதினேன். மனிதர்களைப் பற்றிய கண்ணோட்டம் மாறும் பொழுது வாழ்க்கை யைப் பற்றிய கண்ணோட்டமே மாறுகின்றது. வாழ்க்கையில் பல பிரச்சனைகளை புதிய ஒளி யில் கண்டு புதிய தீர்வுகளுக்கு வந்தேன். உதா ரணமாக: குடும்ப வாழ்க்கையைப் பற்றி—நான் மணமாகாத நிலையில் — சற்றுப் புதிய கண் ணோட்டத்துக்கு வந்திருந்தேன். காதல் தூண்டி ஏற்படும் நிலையாகவோ, காதல் நிலை நிறுத்தி வைத்திருக்கும் நிலையாகவோ, என் னால் குடும்ப வாழ்க்கையைப் பார்க்க முடிய வில்லை. காதல் என்பதன் உள்ளர்த்தமே எனக்கு வேறு விதமாகப் பட்டது.

ஆணுக்குப் பெண் தேவை; பெண்ணுக்கு ஆண் தேவை. இதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. ஒரு ஆணும், ஒரு பெண்ணும் தங் கள் வாழ்நாள் முழுவதும் இணைந்து வாழச் சம்மதிப்பது — இதையும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. இது லட்சிய அமைப்பு என்று சொல்ல முடியாவிட்டாலும், குழந்தை வளர்ப்பு என்ற தொல்லைக்கு வேறொரு தீர்வு இருக்க முடியாது. குழந்தை வளர்ப்புத் தொல்லை இல்லாதிருந்தாலும், ஒரு ஆணும், ஒரு பெண்ணும் கூடி வாழ்வதில் பல அனுகூலங் கள் உள்ளன. என் நண்பன் ஒருவன் கூறியது போல, தினம் தினம் சைக்கிள் ஒன்றை வாட கைக்கு எடுப்பதைவிட, முடியுமென்றால் ஒரு சைக்கிளை வாங்கிவிடுவதுதான் சிறந்தது. இதில் பல வசதிகள் உண்டு. இந்த வசதிகளை நாம் எந்த அளவுக்கு உணர்ந்திருக்கிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டுதான், நாம் ஒரு குறிப்பிட்ட ஆண், பெண் சேர்க்கையை ஒரு தெய்வீக நிகழ்ச்சியாக, காதலின் மகத்தான வெளிப்பாடாகக் கருதுவதெல்லாம். இதைப்

www.padippakam.com



புரிந்து கொள்ளாது காதலுக்கு மணவாழ்க்கையின் அனுகூலங்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு அர்த்தத்தைக் கற்பிப்பது என்னால் புரிந்து கொள்ள முடியாத விஷயம். என்னைப் பொறுத்தமட்டில் என் காமத்தை நான் விலை மாதர்களிடமிருந்து தீர்த்துக்கொள்ள முடியும் வரை திருமணத்தைப் பற்றி நினைக்க மாட்டேன். குடும்ப வாழ்க்கையின் சௌகரியங்கள் எல்லாம் எனக்கு வேண்டாம்; காதல் என்ற பைத்தியமெல்லாம் எனக்கில்லை. மற்றவர்கள் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும்; பிதற்றட்டும். என்னுடைய உணர்வுதான் மனிதனுக்கு இயற்கையான உணர்வு. அந்த இயற்கை உணர்வோடுதான் நான் அன்று வெளிக்கிளம்பி இருந்தேன்; ஓட்டலில் காத்துக் கிடந்தேன்.

நான் எதிர்பார்த்துக் கிடந்த ஆசாமி வந்து சேர்ந்தான். ஒரு கப் டீ குடித்தான். இருவருமாக வெளியேறினோம். எங்கள் இருவருக்கும் இடையில் அதிகம் பேச்சு இல்லை. என்னை ஒரு புதிய 'சரக்கிட'ம் கொண்டு செல்வதாக வாக்குறுதி கொடுத்திருந்தான். இருவரும் குறத்திமுடுக்கின் வழியாகச் சென்றோம். தெருவில் அதிகம் சந்தடி இல்லை. மணி மூன்றாகிவிட்டதல்லவா? ஓரிரண்டு வீடுகள் மட்டும் திறந்திருந்தன. அவ்வீடுகளின் வாயிற்படிகளில் அரைத் தூக்கத்தில் பெண்ணின் பெருமையை பறைசாற்றிக் கொண்டு ஒரு சில பூங்கொடிகள் நின்று கொண்டிருந்தன. இரவு ஏழு அல்லது எட்டு மணிக்கு வந்திருந்தால் தெருவே வேறு முறையில் காட்சியளித்திருக்கும். மல்லிகையும், செம்பங்கியும், குட்டிகுராவும், குளவிமாவும், வாணவில்லின் வர்ண ஜாலங்களும், சிரிப்பும், நகைப்பும், வாயடியும், வசைப்பாட்டும் என் முன்னால் துள்ளி விளையாடியிருக்கும் என்று நினைத்துக் கொண்டேன். பொடிசுகளும், பெருசுகளும் நிற்கும் நிலையிலே, பார்க்கும் பார்வையிலே, ''வா, வா'', என்று பிசாசின் குரலில் வரவேற்பும் கொடுத்து நிற்கும். நல்ல வேளையாக குறத்திமுடுக்கினுள் நான் தனியாக நுழையவில்லை! என்னை முடுக்குள் இட்டுச் சென்றவன் யார் என்பதை அறிந்து கொண்ட வனிதையர்கள் என்னைப் பொறாமையுடன் பார்த்தனர். எனக்கு காவலுக்கு மட்டும் ஆள் இல்லாதிருந்தால் என்னை ஆளுக்கு ஒரு புறமாக பிய்த்துக்கொண்டே போயிருப்பார்கள்.

''சரி, நீ போய் வெளியே நில்லு'', என்று அவள் உத்திரவிட்டாள். என்னுடன் வந்த ஆசாமி ஒன்றும் கூறாமல் வெளியேறினான். அவள் கதவை தாளிட்டுவிட்டு, ''இப்படி வாங்க'', என்று கூறிக்கொண்டே, உள்ளுக்கு அழைத்துச் சென்று, என்னை ஒரு பழைய நாற்காலியில் அமரவைத்துவிட்டு, அடுத்த அறைக்குச் சென்றாள். நான் இருந்த அறையை சுற்று முற்றும் நோக்கினேன். நான் வேறு எங்கும் பார்த்ததைவிட சுத்தமான அறைதான். சுவரில் சிவன்-பார்வதி நடனக் காட்சிப் படம் ஒன்றும், ராமர்-சீதை படம் ஒன்றும் பக்கம் பக்கமாக மாட்டப்பட்டிருந்தன. படங்களுக்குக் கீழே தரையில் ஒரு அணைந்த குத்துவிளக்கு.

''இரண்டு நாளா தொடர்ந்து சினிமா போயிட்டிருந்தேன்'', என்று கூறிக் கொண்டே, முகத்திலிருந்த வியர்வையை முந்தானையில் துடைத்த வண்ணம் அவள் வந்து என் முன்பிருந்த ஒரு பழைய பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

''உன் பெயரென்ன?'' என்று கேட்டுக் கொண்டே, நான் எனது நாற்காலியை அவளருகில் நகர்த்திப் போட்டுக் கொண்டேன்.

''தங்கம். உண்மைப் பெயர் லட்சுமி; இங்கு வந்த பிறகு மாற்றிக்கொண்டேன்,'' என்றாள். நான் என்னுள் சிரித்துக் கொண்டேன். இந்த விளக்கம் எல்லாம் எதற்கு?

''நீ இங்கே எவ்வளவு காலமா இருக்கே?''

''இங்கே வந்து அஞ்சு வருஷமாகிறது. எங்க சொந்தவூர் மதுரை. உங்களுக்கு இந்த ஊரா? அப்படித் தெரியலேயே?'' என்றாள்.

நான் எந்த ஊரா இருந்தா இவளுக்கு என்ன என்று நினைத்துக் கொண்டே,

''நான் அடிக்கடி இந்தப்புறம் வரேனே, உன்னைப் பார்த்ததில்லையே?'' என்றேன்.

''நான் உங்களை இரண்டு மூணு தரம் பார்த்திருக்கேனே. மைனர் மாதிரி ஜோராப் போவீங்களே'', என்றாள் அவள்.

ஏது புது தினுசா இருக்கு என்று நினைத்துக் கொண்டே, அவள் கழுத்தில் கை வைத்து கன்னத்தில் முத்தமிட்டேன்.

''நீங்க படிச்சவர் தானே, உதட்டிலே முத்தக் கூடாது என்று சொல்கிறார்களே, அது ஏன்'' என்று அவள் கேட்டாள். எனக்கு மீண்டும் சிரிப்பு வந்தது.

''ஏன் யார் சொன்னது?'' என்று கேட்டுக் கொண்டே, அவளை நிறுத்திவைத்து, நானும் நின்று கொண்டு, கட்டியணைத்து, உதடுகளில் முத்தினேன். அவள் லேசாகப் பெருமுச்செறித்து என் கண்களை உற்று நோக்கினாள்.

''என்ன பாக்கறே?'' என்றேன்.

''நீங்க தங்கமானவரு'', என்றாள்.

''உஹூம், அதுக்குள்ளார கண்டுபிடிச்சிட்டியே?''

''ஆமாம், அப்படித்தான். அதுக்குள்ளார கண்டுபிடிச்சிட்டேன்,'' என்று கூறிவிட்டு, படுக்கையை விரித்து, தட்டித் தலையணையைப் போட்டுக் கொண்டிருந்தாள். நான் சற்று சங்கோசத்தோடு அவளையே பார்த்து நின்றேன். அவள் படுக்கையைச் சரிப்படுத்தவும் நான் அதில் சென்று அமர்ந்தேன். அவளும் அமர்ந்து கொண்டு என் தலையை அவளது மடியில் வைத்து என்னைப் படுக்க வைத்தாள். புது விதமான உபசாரமாக இருக்கின்றதே, எதுவும் பத்து, பதினஞ்சு எதிர்பார்க்கிறாளா என்ன என்று எனக்குள் நினைத்துக் கொண்டே, அவள் மடியில் படுத்தவண்ணமே, அவளது மார்பகத்தை வருடினேன். அவள் அதைக் கவனியாது, என் முடியை கோதிய வண்ணம், ''ஏன் முடியை இவ்வளவு நீளமாக வச்சிருக்கீங்க?'' என்றாள். அவள் கேள்விக்கு பதிலளிக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. யாரும் என்னைத் தாஜா செய்வது எனக்குப் பிடிக்காது. அவளது மார்பகத்திலிருந்து என் கையை எடுத்து பையில் பர்ஸ் பத்திரமாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டேன். அதை அவள் கவனித்தாள். ஆனாலும் கவனியாது போல, என் முகத்தில் முத்திவிட்டு, மெள்ள என்னை அவள் மடியிலிருந்து எழுப்பி மல்லாந்து படுத்துக் கொண்டாள்.

மணி நான்குக்கு அவள் எனக்குத் கதவைத் திறந்துவிட்டு, வாசற்படியில் நின்று கொண்டு, ''சந்தோஷம் தானே?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள். எனக்கு என்ன சொல்லுவது என்று புரியவில்லை; சங்கோசப்பட்டவாறே, தலையை அசைத்துக் கொண்டு, படிகளில் இறங்கி நடந்தேன். நான் நான்கு அடி நடந்ததும் பின்புறம் அவள் கதவை அடைக்கும் சப்தம் கேட்டது. எண்ணினாற்போல மூன்று ரூபாய் கொடுத்ததற்குப் பதில் கூடக் கொஞ்சம் கொடுத்திருக்கலாம். அவள் என்ன எதிர்பார்த்தாளோ? அவள் இந்த தடவை அதிகம் எதிர்பார்த்திருந்தால் அடுத்த முறை அவளிடம் சென்றால் அதிக மரியாதை எதிர்பார்க்க முடியாது. அதனால் என்ன? எடுத்த எடுப்பில் அடுத்த தடவை கொஞ்சம் அதிகமாகக் கொடுத்துவிட்டால் ஒழுங்காக நடந்து கொள்கிறாள் என்று எனக்குள் சிந்தித்துக் கொண்டே குறத்திமுடுக்கை விட்டு வெளியேறி வந்தேன். ஆசாமி எனக்காக காத்துக் கொண்டிருந்தான். அவன் கையில் எட்டணாவைத் திணித்து விட்டு, வேகமாக எனது அறையை நோக்கி நடந்தேன்.

○ ○ ○

மணி மத்தியானம் மூன்று இருக்கும். குறத்தி முடுக்கில் மரகதத்தின் வீடு. மரகதமும், எதிர்த்த வீட்டு செண்பகமும் தாயமாடிக் கொண்டிருக்கின்றனர். இருவர் முகங்களும் கருத்துச் சுருங்கி இருக்கின்றன. மரகதம்-முகத்திற்கு ஒரே அழகாக இருக்கட்டும் என்று-கண்களில் மையை அப்பிக்கொண்டிருக்கிறாள். மை அவளது கண்கள் குழி விழுந்து இருப்பதை மறைக்கவில்லை. இருவரும் சாதாரண உடையில், தலை மயிரை இஷ்டம் போல் அள்ளிச் சொருகி, ஆளுக்கு ஒரு புறமாக கால்களை நீட்டிக் கொண்டு உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருக்கின்றனர். செண்பகம் கர்ப்பவதியாகையால் பக்கவட்டாக சாய்ந்து படுத்திருக்கிறாள். ஒரு இளைஞன் வீட்டினுள் நுழைந்து அவர்கள் இருவரையும் பார்த்துச் சிரித்துவிட்டு, அவர்கள் பக்கத்தில் உட்காருகிறான்.

''வா, தம்பி, வா, மரகதம் உன்னைப்பற்றித் தான் ஏதோ சொல்லிக்கிட்டிருந்தா,'' என்று செண்பகம் பெரிய மனுஷி பாவனையில் கூறுகிறாள்.

''அக்கா வயத்தை இப்படி ஏன் வளத்துக்கிட்டுப் போறே? வட்டத்தெரு வைத்தியர்கிட்டே போறதுதானே?'' எவ்வளவு உண்டாயிருந்தாலும் கரைச்சிடுவாரே!'' என்று சிரித்துக் கொண்டு இளைஞன் கூறுகிறான்.

''ஏண்டா, தம்பி! உன் சோலியைப் பார்த்துக் கீனு இருக்க மாட்டே?'' என்று கூறிவிட்டு செண்பகம் ஆட்டத்தைக் கவனிக்கிறாள்.

''அக்காவுக்கு ஒரு பெண் குழந்தை வேணு மாம்,'' என்று மரகதம் விளக்குகிறாள். இளை ஞன் மரகதத்தைப் பார்த்துக் கண் சிமிட்டு கிறான். மரகதம் மீண்டும் ஆட்டத்தைக் கவ னிக்கிறாள். சிறிது நேரத்தில், ''அக்கா, போதுமக்கா ஆட்டம், எனக்குக் கொஞ்சம் சோலி இருக்கு.'' என்று கூறிக்கொண்டே கைகளை நீட்டி, சோம்பல் முறித்த வண்ணம் மரகதம் தரையில் சாய்கிறாள். பிறகு கைகளைச் சுழற்றியவண்ணம் தாயக் காய் களைக் கலைக்கிறாள். ''இந்தா, உனக்கு விளையாடணும்னா மட்டும் நான் இங்கே வர ணும். ராணியம்மா நிறுத்தச் சொல்லிட்டா நிறுத்திரணும், இல்லையா? இனிமே விளை யாடக் கூப்பிடு சொல்றேன்.'' என்று கூறிக் கொண்டே, செண்பகம் சிரமப்பட்டு எழுந்திருக் கிறாள். மரகதமும், இளைஞனும் எழுந்து அறையில் சுவரோரமாகக் கிடக்கும் கட்டில் ஒன்றில் அமர்ந்து கொள்கின்றனர். செண்பகம், ''வரனேடி, மரகதம்,'' என்று கூறிக் கொண்டே, ஆடியசைந்தபடி இறங்குகின்றாள்.

''மரகதம் முதல்லே எனக்கு ஒரு ரூபாய் தா. இன்னிக்குச் சினிமாப் போகணும்'', என்று இளைஞன் சொல்லுகிறான்.

''ஆமாம், எப்ப பார்த்தாலும் பணம், பணம். எங்கிட்டே ஒரு தம்பிடி இல்லை.'' என்று கூறி விட்டு, மரகதம் இளைஞனின் முகத்தைப் பார்க் கிறாள். இளைஞன் ஏமாற்றம் அடைந்த சிறு குழந்தையைப் போல அவளைப் பார்க்கிறான்.

''கோவப்படாதே, ராசா. ஆறு, ஆறரை மணிக்கு வா. இல்லாட்டி உன் வாலை அனுப்பு; கொடுத்து விடறேன்'', என்று சொல்லிக் கொண்டே, மரகதம் இளைஞனின் கன்னங் களை இரு கைகளாலும் பற்றி, அவனது உதடு களில் முத்துகிறாள். பிறகு அவனது முகத்தை தனது மார்பகத்தில் வைத்து அணைத்து ஆட்டு கிறாள். அவள் கண்களில் நீர் ததும்புகிறது. இளைஞன் தனது இரு கைகளையும் அவளது இடுப்பில் போட்டு, எதுவும் காசு கிடைக்குமா என்று துளாவுகிறான்.

''நான் சொன்னா உனக்கு நம்பிக்கை இல்லை?'', என்று கேட்டுக்கொண்டே, மரகதம் மேலும் அவனது முகத்தை தன் மார்பகத்தில் வைத்து அழுத்துகிறாள். இந்த நேரத் தில் சுமார் நாற்பது வயதான ஒரு ஆசாமி வீட்டின் பின்புறத்திலிருந்து அவர்கள் இருக்கும் அறைக்குள் பிரவேசிக்கிறான். ஆசாமி வந்ததும் காதலர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிகின்றனர். மரகதம் எழுந்து நிற்கி றாள். ஆசாமி உட்கார்ந்திருக்கும் இளைஞனை முறைத்துப் பார்க்கிறான். இளைஞன் சிரிக்கி றான்; ஆசாமி சிரிக்கவில்லை. ஆசாமி இளை ஞனை நோக்கி மெல்ல நடந்து வருகிறான். அவன் முகத்தில் கடுகடுப்பு தென்படுகிறது. தக்க சமயம் பார்த்து இளைஞன் தாவிக் குதித்து, வீட்டை விட்டு ஓடி, நடுத்தெருவில் நின்றுகொண்டு திரும்பிப் பார்க்கிறான். ஆசாமி ஓங்கிய கையுடன் வாசலருகே ஓடி, படிகளின் மீது குதித்து தொடர்ந்து ஓடுவதாக பாவனை செய்கிறான். இளைஞன் கொஞ்சம் ஓடிவிட்டு, சிரித்துக் கொண்டே, திரும்பிப் பார்த்த வண் ணம் நடைபோடுகிறான்.

''இந்தா, மரகதம், அவன் சாகவாசத்தை விட் டிரு, சீக்குக்காரப்பயல்'', என்று ஆசாமி எச்ச ரிக்கிறான். மரகதம் அவனைக் கவனியாது, தலை மயிரைச் சரிப்படுத்திய வண்ணம் நிற்கி றாள்.

''அத்தான் இன்னைக்குச் சினிமாவுக்கு'', என்று மரகதம் இழுக்கிறாள்.

''சரி, போய்த் தொலை. ஆனா சினிமாவுக்கு, போயிட்டு வந்து வாசப்படிலே தூங்கிட்டு கிடந்தே, உம் கொன்னுப் போடுவேன், கொன்னு'' என்று ஆசாமி எரிந்து விழுகிறான்.

ஆசாமி துண்டைப் போட்டுக் கொண்டு வெளிக் கிளம்புகிறான். ஏதோ பாட்டை முணுமுணுத் துக் கொண்டிருந்த மரகதம் ''அத்தான் சில் லரை கொடுத்துட்டுப் போங்க,'' என்கிறாள். ஆசாமி எட்டணாக் காசை அவள் கையிலே தரு கின்றான்.

''இன்னும் எட்டணாத் தாங்க; ஏதாச்சும் வாங் கித் தின்னணும்,'' என்கிறாள் மரகதம்.

www.padippakam.com



''என்னத்தை வாங்கித் தின்னனும்? உங்க ஆத்தாகிட்டே இருக்கச்சே ஏதாச்சிம் வாங்கித்தின்னுக்கிட்டா இருந்தே,'' என்று முணுமுணுத்துக் கொண்டே, ஆசாமி அவள் கையில் நாலணாக் காசை வீசியெறிந்துவிட்டு வெளிக்கிளம்புகிறான். பத்து நிமிஷம் ஆகிறது. இளைஞன் மீண்டும் வருகிறான். அவளிட மிருந்து பனிரெண்டனாவையும் பெற்றுக் கொண்டு திரும்பி ஓட எத்தனிக்கிறான். அவள் அவனை அணைத்து முத்தமிடுகிறாள். இளை ஞன் ஒருவாறாக விடுதலை அடைந்து வெளியே ஓடி மறைகின்றான்.

○ ○ ○

எனது பட்டியலில் நான் தங்கத்தையும் சேர்த் துக் கொண்டேன். அவள் நடத்தை எனக்குப் பிடித்திருந்தது. என் குறத்திமுடுக்கில் இருந்த எல்லாப் பெண்களும் தங்கத்தைப் போலவே நடந்து கொள்ளக்கூடாது? உம், தொழில் தெரி யாத அபலைகள்! யார் கண்டது, தங்கம் போன்ற ஒரு சிலருக்குத்தான் அதிகக் காம உணர்ச்சி உண்டு போலும்! அவர்கள்தான் சோர்வில்லாமல் தொழிலில் ஈடுபடமுடிகின்றது. தங்கம் சிறந்த தொழில்காரி என்பதில் சந்தேக மில்லை. இருந்தாலும், நான் எழுந்திருப் பதற்கு முன்னால், அவளைப் ''போதுமா?'' என்று கேட்டது, அவள் குறும்புத்தனமாக, ''போதாது'', என்று கூறி தலையை ஆட்டியது, இறுதியில் ''நீங்க பெரிய ஆளுங்க'', என்று சர்டிபிகேட் கொடுத்தது — இவையெல்லாம் எனக்கு சாதாரணமாகத் தென்படவில்லை. என் னிடம் நடந்து கொண்டது போலவேதான் தங் கம் மற்றவர்களிடமும் நடந்து கொள்வாள் என்று நம்ப வேண்டும் என்று தோன்றியது; அதே நேரத்தில் தங்கம் என்னிடம் மட்டும் ஏதோ விசேட முறையில் நடந்து கொண்டாள் என்று நம்ப வேண்டும் என்றும் விரும்பினேன். கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை.

அடுத்த முறை நான் தங்கத்திடம் சென்ற பொழுது, வெகுநாள் பழகியவளைப் போல் அவள் முக மலர்ச்சியோடு என்னை வரவேற் றாள். நானும் வழக்கமான பதட்டம் இல்லா மல் சகஜமாக என்னிஷ்டப்படி அவளிடம் நடந்து கொண்டேன். அவளும் சகஜமாக அவள் இஷ்டப்படி நடந்து கொண்டாள். அவள் எப்பொழுதும் எனக்கு ஒருபடி மேலே போகத் தயாராக இருந்தாள். நான் உரத்துச் சிரிக்க வும் அவள் இன்னும் உரத்துச் சிரித்தாள். நான் காதல் நாடகத்தில் கதாநாயகனாக விளையாட் டுப் பாவனையில் பேசவும், அவளும் கதாநாயகி பாவனையில் கேலியோடு பேசினாள். அவளது விம்மிப் புடைத்த தனங்கள், மெல்லிய இடை, அழகாக இரு பகுதிகளாகப் பிரிந்த முதுகு, வாழைத் தண்டு போன்ற கழுத்து, மலர்ந்த ஆனால் ஊசி போன்ற கண்கள்—இவற்றில் சிறி தும் கட்டுப்பாடோ, தட்டுத் தடங்கலோ இல்லா மல் லயித்தேன். அவள் சிறிதும் அசங்கிய உணர்ச்சி என்னிலோ, அவளிடத்தோ வெளித் தோன்றாத வகையில் எதிலும் ஈடுபட்டாள்; என்னையும் ஈடுபடுத்தினாள். அவள் எனக்குப் பால் இன்பத்தின் வற்றாத ஊற்றாகப்பட்டாள். நான் அவளிடத்து இரவு மூன்று மணிக்குப் பிறகே செல்வேன். ஆதலால் எனக்கு அவளது 'அத்தானின்' கெடுபிடி தொல்லை கிடையாது. அன்று வீட்டின் புழக்கடையில் இருந்த துணி துவைக்கும் கல்லில் உட்கார்ந்து கொண்டு வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தோம். பட்டப் பகல் போல சந்திரன் பிரகாசித்துக் கொண்டி ருந்தான். குளிர்ந்த மெல்லிய அதிகாலைக் காற்று எங்களைப் பரவசத்தில் ஆழ்த்தியது. மெல்ல மெல்ல சேவலின் கொக்கரக்கோவும், குருவிகளின் கிசுகிசுப்பும், ஆடு மாடுகளின் மணியோசையும் நரநரப்பும், மனித நடமாட் டத்தின் சரசரப்பும் எங்கள் கனவிலே நுழைந் தன.

அன்று காலையில் அறைக்கு வந்ததும் ஒரு மணி நேரம் தூங்கியிருப்பேன். பாடிக் கொண்டே குளிர்ந்த தண்ணீரில் வேண்டுமள வுக்குக் குளித்தேன். காலைப் பலகாரங்களைப் புதிய பசியோடு தின்றுவிட்டு, சிகரெட்டைப் புகைத்துக் கொண்டிருந்த நேரத்தில், வாழ்க் கைக்கே புதிய அர்த்தம் கண்டு கொண்டது போல் இருந்தது. ''எல்லாம் உடலைப்பற்றிய விஷயம்'', என்று எனக்கு நானே கூறிக் கொண்டு, எனது அன்றாட வேலைகளில் கவ னம் செலுத்த ஆரம்பித்தேன்.

○ ○ ○

குறத்திமுடுக்கில் ஒரு சாதாரண நிகழ்ச்சி. இரவு ஒன்பது மணி இருக்கும். நாற்பது வயதான ஒருவன் தெருவின் வழியே வந்து கொண்டிருக் கிறான்; தள்ளாடும் நடை. எதிரே வேட்டியும், துண்டும் அணிந்த ஒருவன் அவனைச் சந்திக்கி றான். சற்று இருவரும் நின்று பேசுகின்றனர்.

''ஏது இப்படி?''

''யாரு? நீயா, ஒரு சோலியிரா வந்தேன்,''

''வீட்டிலே எல்லோரும் சுகமா?''

''சுகம்தான். அவ பொறந்த வூட்டுக்குப் போயிருக்கா. வேறு ஒண்ணும் விசேடமில்லையே?''

''இல்லை. நான் அப்ப வரட்டுங்களா?''

''உம். செய்''

நாற்பது வயதானவன் நடையைத் தொடருகிறான். நின்று நிதானமாக ஒவ்வொரு வீட்டையும் பார்த்துச் செல்கிறான். ஒரு வீட்டிற்குள் நுழைகிறான், அவன் நுழையவும், வாசற்படியில் நின்று கொண்டிருந்த செண்பகமும், மீனாட்சியும் வீட்டுக்குள் செல்கின்றனர். கதவு தாளிடப்படுகிறது. உள்ளே படுத்திருந்த சற்று வயதான செல்லம் வந்தவனை வரவேற்கின்றாள். வந்தவன் சரக்குகள் இரண்டையும் உற்று நோக்கிவிட்டு, செண்பகத்திடம், ''சரி, நீ வா'' என்று கையை நீட்டி அழைக்கின்றான்.

''என்ன தருவீங்க?'' என்று செல்லம் கேட்கிறாள்.

''என்னத்தைத் தரது? வழக்கமானது தான்'', என்று மனிதன் அலட்சியமாக பதில் கூறிவிட்டு, மடியிலிருந்து ஒரு ரூபாய்த் தாளை எடுத்து செல்லத்திடம் நீட்டுகிறான். செல்லம் அவனை முறைத்துப் பார்க்கிறாள். ''இந்தா கலாட்டா, கிலாட்டா பண்ணாம மரியாதையா இருந்துட்டுப் போகணும், தெரியுதா?'' என்று செல்லம் எச்சரிக்கிறாள். 'அதெல்லாம் ஒண்ணும் பயப்படாதே, கலாட்டாப் பண்ற காலமெல்லாம் எப்பவோ போச்சு,'' என்று கூறிக்கொண்டே மனிதன் செண்பகத்தைத் தனி அறைக்கு அழைத்துச் செல்கிறான். கதவு சாத்தப்படுகிறது.

''இந்தா மீனாட்சி, அய்யாச்சாமியைக் கடையிலே சித்த இருக்கச்சொல்லு; எங்கேயும் போயிடப் போறான்,'' என்று செல்லம் உத்தரவிடுகிறாள். ஏதோ பாட்டை முணு முணுத்துக் கொண்டே, மீனாட்சி படியில் இறங்குகின்றாள். பக்கத்து அறையிலிருந்து கெட்ட வாடை குப் குப் என்று வருகிறது.

உள் அறையில் ஒரு சிறிய நாடகம். ''நீங்க நல்லா இருப்பீங்க, வயத்திலே கொளந்தை இருக்கு, பதவானமா இருங்க'', என்கிறது ஒரு பெண் குரல். மனிதன் பெருமூச்சு விடுகிறான்; முக்குகின்றான். ''சிறுக்கி முண்டை! கண்ணைப் பாரு, கண்ணை. முக்கைப் பாரு முக்கை ......—''—இன்னும் எழுதக்கூடாத வார்த்தைகள். அவன் கை வலி, கால் வலி, மனவலி எல்லாவற்றுக்கும் ஐந்து நிமிடங்களில் நிவாரணம் காண முயலுகிறான். அவன் உடலை வளைத்து, கால்களையும் கைகளையும் திருக்கி கழுத்தை நீட்டி தன் அயர்வைப் போக்கிக் கொள்ளத் திண்டாடுகின்றான். அவன் முகத்தில் ஒரு பெண்ணின் பிரசவ வேதனை தாண்டவமாடுகின்றது. அவள் அசையாது கண்களை மூடி, பற்களை நெறித்துக் கிடக்கின்றாள். அவளது நெஞ்சு ஒரு அடி உயர்ந்து தாழ்கின்றது. சிறிது நேரத்தில் அவன் வந்த வழியைப் பார்த்துக் கொண்டு போய்விடுகிறான். இனி அவனுக்கு நல்ல தூக்கம் வரும்.

செண்பகத்துக்கு தூக்கம் வரவில்லை. ஆனால் அரை மயக்கத்தில் கிடக்கின்றாள். அவள் முகத்தில் வியர்வை வழிந்தோடுகிறது. பெருமூச்சு விடுகிறாள். வயிற்று வலி தாங்காமல் பல்லை நெறிக்கிறாள். அவள் கண்களிலிருந்து நீர் கொட்டுகின்றது. செல்லம் அறையில் நுழையும்போது அவள் தனது ஆடைகளையும் சரிப்படுத்திக் கொள்ளாமல் கிடக்கின்றாள். உதவிக்கு ஆட்கள் வருகின்றனர். செண்பகம் மாடியில் இருக்கும் இருட்டறைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு கிடத்தப்படுகிறாள். ஒரு விளக்கு மினுக்கு மினுக்கென்று எரிந்து கொண்டிருக்கிறது. அவளுக்கு முதலில் சோடாவும், பிறகு பலகாரம் காப்பியும் கொடுக்கப்படுகின்றன. செல்லத்தின் முகத்தில் கலக்கம் தோன்றுகிறது. அவள் அதை அடக்கிக் கொண்டு, ''அந்த மூதி சொன்னபடி கேட்டாத்தானே! கொளந்தை வேணுமாம் கொளந்தை! ராசத்தூக்கு கொளந்தை இருக்கேன்னா அவளுக்கு சோறு போட ஆளிருக்கு,'' என்று இரைந்து கூறி மீனாட்சிக்கு எச்சரிக்கை செய்யும் பாவனையில் பேசுகிறாள். ஆழ்ந்த சிந்தனையில் இருப்பது போல மீனாட்சி நின்று கொண்டிருக்கிறாள்.

○ ○ ○

www.padippakam.com



எனக்குத் தங்கத்திடம் ஆசை ஏற்படவில்லை. ஆனால் நான் வேறு எந்தப் பெண்ணிடமும் பெற்றிராத பெறமுடியாத இன்பத்தை அவள் எனக்குக் கொடுத்தாள். நான் அந்த இன்பத்தைத் தொடர்ந்து நிலை பெற்றிருக்க வைக்கவும், இன்னும் அதிகப்படுத்தவும் முயன்றேன். அதே நேரத்தில் அதிலிருந்து விடுபடவும் துடித்தேன். எனக்கு அவளிடத்து ஆசை ஏற்பட்டு இருந்தாலோ, நானும் அவளும் மணக்க விரும்பியிருந்தாலோ, மண முயற்சியும், அதில் ஏற்படும் தடங்கல்களும், தடங்கல்களை எதிர்த்த போராட்டமும் எங்கள் ஆசையை பத்து மடங்கு பெரிதாக்கியிருக்கும். ஆனால் அதற்கெல்லாம் இடமில்லை. அவள் எனக்கே உரியவள் என்ற பிரமையை சிறிது காலமாவது அனுபவிக்க என் உள்ளம் துடித்தது. அவள் எதுவும் கேட்பதுதான் அபூர்வம். ''ஆண்களைப் பெண்கள் கெடுப்பதே அப்படித்தான்,'' என்று அதற்கு விளக்கம் கூறுவாள். அவளது அத்தானைச் சரிக்கட்டி இரண்டு மூன்று இரவுகள் தொடர்ந்து அவளோடு கழித்தேன். என் கையிலிருந்த பணத்தைச் செலவழித்து அவளது வீட்டின் உட்தோற்றத்தையே மாற்றியமைத்தேன். அவளது உள்ளத்தைத் துருவித் துருவி ஆராய்ந்து, அதில் ஒரு மூலையில் அவள் ஒளித்து வைத்திருந்த வெறுப்புணர்ச்சியைக் கண்டுபிடித்து அதன் மூலம் எனது விடுதலையைப் பெற்றுவிட முடியாதா என்று தவித்தேன். அவளுக்கு என் மேல் ஆசையில்லை, என் பணத்தின் மீதுதான் என்று நிரூபிக்கப் பல சோதனைகள் நடத்தினேன். என் பரிசோதனைகள் தோற்றன. ''அனாவசியமாக பணத்தை வீசி யெறியாதீங்க. நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன், பிறகு ஒங்கபாடு,'' என்று என்னைத் தடை செய்யாமலும், அதே நேரத்தில் ஊக்குவிக்காமலும் பேசினாள்.

''நீ வாழ்க்கையிலே என்னதான் எதிர்பாக்கறே?'' என்று ஒரு நாள் பொறுமையற்றுக் கேட்டேன்.

''ஒண்ணுமில்லை'' என்றாள்.

''ஒண்ணுமே இல்லையா?''

''உஹூம்...ஆனா ஒண்ணு இருக்கு''

''அது என்ன?''

''சொன்னா உங்களுக்குப் புரியுங்களா?''

எனக்குச் சிரிப்பு வந்தது. இவள் சொல்வது எனக்குப் புரியாதா?

''புரியும், புரியும் சொல்லு'',என்றேன்.

''நடந்தது நடக்காம இருந்திருக்கணுங்க''.

''இனிமே நடக்காம இருக்கணுங்கறீயா?''

''இல்லே, இல்லே நடக்காம இருந்திருக்கணும்.''

''நடந்தது இனிமே நடக்காம இருந்திருக்கணுங்கிறே, இல்லையா?'' எனக் கூறிவிட்டு நான் சிரித்தேன். அவளும் சிரித்தாள். அவளது சென்ற கால வாழ்க்கையைப் பற்றி அவள் எனக்குக் கூறியதை எல்லாம் நினைத்துப் பார்த்தேன்.

தங்கத்துக்கு கலியாணமாகி இருந்தது. அவள் கணவன் நடராஜன் ஒரு தினுசான பேர்வழி. முதலில் எங்கோ ஒரு ஆபீஸில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். ஆபீஸ் பணத்தை கையாடல் செய்ததற்காக வேலையிலிருந்து நீக்கப்பட்டான். அதற்குப் பிறகு எந்த வேலையும் பார்க்காமல் முதலில்லா வியாபாரங்கள் ஆரம்பித்தான். அவனது முதல் இல்லா வியாபாரங்களில் ஓரிரண்டைப்பற்றி எனக்குத் தங்கம் விரிவாகச் சொன்னாள்.

ஒரு சமயம் நடராஜன் பித்தளையில் ஒரு சங்கிலியைச் செய்து கொண்டான். அதற்கு நன்றாக மெருகு ஏற்றி, சங்கிலியின் மதிப்பு ரூபாய் இருநூற்றைம்பது எனக் காட்டும் ஒரு பழைய நகைக்கடை பில் ஒன்றையும் சம்பாதித்துக் கொண்டான். சங்கிலியையும் பில்லையும் ஒரு வண்ணக் காகிதத்தில் சுற்றிக்கொண்டு, இரவு மூன்று மணிக்கு நகைப் பொட்டலத்தோடு மதுரையில் ஒரு பிரதான தெருவுக்குச் சென்றான். பொட்டலத்தை தெரு நடுவில் போட்டுவிட்டு பக்கத்தில் அடைத்துக் கிடந்த ஒரு கடையில் உட்கார்ந்து கொண்டான். ஒரு மணி நேரம் கழித்து, அவசர அவசரமாக ரயிலடிக்கோ, பஸ்ஸ்டாண்டுக்கோ சென்று கொண்டிருந்த ஒரு மனிதர் தெரு வழியாக வந்தார். அவர் பொட்டலத்துக்கு அருகே வரவும், நடராஜன் அவர்

www.padippakam.com



அருகே ஓடி பீடி பற்ற வைக்க நெருப்புக் கேட்டான். மனிதர் நெருப்புப் பெட்டியை அவன் கையில் கொடுத்து நின்று கொண்டிருக்கும் பொழுது, அவரது கண்கள் பொட்டலத்தில் விழுந்தது. இயற்கையாகவே பொட்டலத்தை எடுத்தார். ''என்ன அது?'' என்று கேட்டுக் கொண்டே, நடராஜன் மனிதரை இன்னும் நெருங்கினான். மனிதர் பொட்டலத்தைத் திறந்தார். உள்ளே பளபளவென்று மின்னும் சங்கிலி. கூடவே பில். சங்கிலியின் விலை இருநூற்று நாற்பத்திரெண்டு ரூபாய்! இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''நீங்க அதிர்ஷ்டக்காரருங்க'', என்றான் நடராஜன்.

''எனக்கு என்ன அதிர்ஷ்டம்? காணாமப் போட்டவர் அதிர்ஷ்டக்காரருன்னு சொல்லுங்க,'' என்றார் மனிதர்.

''அவரைத் தெரியுங்களா?'' என்றான் நடராஜன்.

''அவரைத் தெரியாட்டி? போலீசிலே கொடுத்து காணாமப் போட்டவர் கையிலே சேர்த்துடனும்,'' என்றார் மனிதர்.

''அப்படியா? அப்ப நீங்களும் அதிர்ஷ்டக்காரரில்லை; காணாமப் போட்டவரும் அதிர்ஷ்டக்காரரில்லை. ஏதோ போலீசுக்காரருக்கு அதிர்ஷ்டம் அடிக்கும்'', என்றான் நடராஜன் நக்கலாக. பிறகு மனிதர் முகத்தை உற்று நோக்கிவிட்டு, ''இங்கே பாருங்க, நம்ம பிள்ளை குட்டிங்க ரொம்பக் கஷ்டப்படுது. நம்ம கையிலே பாதி சங்கிலியை நொடிச்சுத் தாங்க. பத்து நாளைக்குக் கவலைப் படாமே கஞ்சி சாப்பிடுறேன்'' என்று யோசனை சொன்னான் நடராஜன். மனிதர் நடராஜனின் யோசனைக்கு ஆமோதிப்பு தராமலேயே,

''ஆமாம். இதை எப்படி ஒடிக்கிறது?'' என்றார்.

இந்த நேரத்தில் யாரோ வருவது மாதிரி தெரிந்ததும் இருவரும் பேசிக் கொண்டே நடையைக் கட்டினர்.

''நீங்க இப்ப எங்கே போகணும்?'' என்றான் நடராஜன்.

''ரயிலடிக்கு''

''உடனே போகணுமா?''

''ஆமா ரயில் வர நேரமாச்சு.''

''அடுத்த வண்டிக்குப் போங்களேன். சங்கிலியை ஏன் ஒடிக்கணும்? ஏழு மணி சுமாருக்கு நான் உங்களுக்கு ஒரு இடத்திலே நூறு ரூபாய் வாங்கித் தரேன். சாமானத்தை நம்ம கையிலே கொடுத்திடுங்க'', என்றான் நடராஜன்.

''நான் இங்கே காத்திருக்க முடியாது. அவசரமாப் போகணும். ஒண்ணு வேணா செய். என் கூட ரயிலடிக்கு வா. எங்கிட்டே எழுபது, எண்பது இருக்கும். அதைத் தரேன் வாங்கிட்டுப் போ. சங்கிலி கண்டெடுத்தவர் கையிலேயே இருக்கட்டும்,'' என்று மனிதர் யோசனை சொன்னார். நடராஜன் இஷ்டமில்லாது சம்மதித்தான். இருவரும் ரயிலடிக்குச் சென்றனர். அதிக தாவாச் செய்து நடராஜன் எண்பத்தைந்து ரூபாய் பெற்றுக் கொண்டு வந்து சேர்ந்தான்.

மற்றொரு சமயம் ஒரு பெரிய மனிதரை நடராஜன் வீட்டுக்குக் கூட்டி வந்தான். இருவரும் வீட்டில் உட்கார்ந்து சிறிது நேரம் பேசினர். பிறகு நடராஜன் தங்கத்தைக் கூப்பிட்டு, ''தங்கம் இன்னிக்கு ராத்திரி வீட்டுக்கு வரமாட்டேன். அண்ணாச்சிதான் வருவார்; கவனிச்சிக்க,'' என்று கூறிவிட்டு, கண்ணைச் சிமிட்டினான். இருவரும் வெளிக்கிளம்பினர். இரவு ஒன்பது மணிக்கு பெரிய மனிதர் வீடு தேடி வந்தார். தங்கம் அவருக்குச் சோறு போட்டு மரியாதை செய்தாள். பெரிய மனிதருக்கு மனைவி கிடையாது. என்றோ ஒரு நாள் தங்கத்தைப் பார்த்ததிலிருந்து ஆசை கொண்டு விட்டார். விசாரித்து இன்னார் மனைவி என்று தெரிந்து கொண்டு ஆள் வைத்து நடராஜனையே அணுகிவிட்டார். நடராஜனும் அவர் பிரியம் போலவே நடக்க சம்மதித்து இருந்தான். பெரிய மனிதருக்குக் குஷி; தங்கத்தோடு சரசம் புரிந்து கொண்டிருந்தார். இரவு மணி பனிரெண்டு இருக்கும். நடராஜன் கதவைத் தட்டினான். தங்கம் கதவைத் திறந்தாள். நடராஜன் பார்வையும், நடையும் தங்கத்தையே திடுக்கிட வைத்தன. அவன் நேராகப் பெரிய மனிதரிடத்துச் சென்று கையில் பள,

www.padippakam.com



பளவென்று கத்தியைக் காட்டி, ''ஏண்டா பெரிய மனுசா, உனக்குக் கொஞ்சி விளையாட எம் பெண்டாட்டிதானாடா கிடைச்சா? உங்க வீடுகளிலே நான் இப்படி வந்து செய்யலாமா, சொல்லு. மரியாதையா ஒரு பச்சை நோட்டத் தள்ளாட்டி, இந்தா ஊர்லே தலை காட்ட முடியாது'', என்று இரைந்தான். பெரிய மனிதர் நடுங்கிவிட்டார். அடுத்த நாளே பச்சை நோட்டைத் தள்ள ஒத்துக் கொண்டார். நடராஜனை ஏமாற்ற முடியாது; அவன் உதவிக்கும், சாட்சிக்கும் இரண்டு பேர்களைக் கூட்டி வந்திருந்தான்.

தங்கம் நடராஜனைப் பற்றிய கதைகளைக் கூறும்பொழுது எனக்குச் சற்று வெறுப்பாக இருக்கும். நடராஜன் செய்தது தப்பு, அயோக்கியத்தனம் என்றெல்லாம் சொல்வேன். ''யாரு தான் அயோக்கியத்தனம் பண்ணலே?'', அல்லது, ''அவர் தப்பில்லே'', அல்லது, ''அவரு எனக்கென்னவோ நல்லவருதான்,'' என்று கூறி மழுப்புவாள். இன்னும் சில சமயங்களில், ''இந்த பணத்தாசை இருக்கே, ரொம்பப் பொல்லாதது,'' என்பாள்.

ஒரு தரம், ''உனக்கும் பணத்தாசை உண்டா?'' என்றேன்.

''நிறைய இருந்திச்சு. அதுக்குத்தான் இப்ப நிறைய அனுபவிக்கிறேன்,'' என்றாள்.

''நடராஜன் இப்ப எங்கே?'' என்று ஒரு முறை கேட்டேன்.

''எங்கேயோ இருக்காரு. உம், நீங்க சந்தோஷமா இருக்கணும்னு வந்திருக்கீங்க. என் கதையெல்லாம் சொல்லி உங்களை ஏன் சங்கடப் படுத்தனும்? நல்ல பெண்ணாப் பாத்து கல்யாணம் செய்துகிட்டு சொகமா இருங்க. நாங்க எல்லாம் கழுதைங்க,'' என்று கண்களின் விளிம்பில் நீர்கட்ட எங்கோ பார்த்துக் கொண்டு சொன்னாள்.

○ ○ ○

மாலை ஐந்து மணி. கோர்ட்டில் செண்பகத்துக்கும், மீனாட்சிக்கும் அபராதத் தொகையைக் கட்டிவிட்டு அச்சுதன் அவர்கள் இருவரையும் செல்லத்தின் வீட்டில் கொண்டு வந்து விடுகிறான். கருச்சிதைவுக்குப் பின் செண்பகத்தின் உடல் சருகு போல் உலர்ந்து விட்டது. மீனாட்சி சேலையின் முந்தானையைக் கொண்டு தலையை மூடிய வண்ணம் தலை குனிந்து நிற்கிறாள். அச்சுதன் செல்லத்தின் வீட்டின் படியேறி உட்புகவும், இருவரும் பின் தொடருகின்றனர். அவர்களை வரவேற்கக் காத்திருக்கும் செல்லம், மீனாட்சியைக் கண்டதும் தூக்கிப் போட்டுக் கத்துகிறாள்.

''என்னடி இது?''

''வாயைப் பொத்திக்கிட்டுச் சும்மா இருந்தால் தானே! போலீசுக்காரங்க எல்லாம் மொதலாளிக் கைக்கூலிங்க, அது இதுன்ட்டு நேத்து லாக்கப்புலே கூச்சல் போட்டதாம். மொட்டை அடிச்சிவிட்டுட்டாங்க,'' என்று அச்சுதன் விளக்குகிறான்.

''அட மூதிகளா! ரெண்டு பேரும் என்னை நடுத் தெருவிலே நிறுத்தணும்னு திட்டம் போட்டிருக்கீங்களா?'' என்று கேட்டுக் கொண்டே செல்லம் மீனாட்சியின் கன்னத்தைக் கிள்ளிவிட்டு, அவளது தலையிலே மங்கு, மங்கு என்று போடுகிறாள். மீனாட்சி ஆடாமல், அசையாமல் தலை குனிந்து நிற்கிறாள். பிறகு செல்லத்தையும், அவள் வசவுகளையும், அடி உதைகளையும் பொருட்படுத்தாது, பக்கத்து அறைக்குள் சென்று ஒரு கண்ணாடியை எடுத்து, அதில் தன் முகத்தைப் பார்த்துக் கொள்கிறாள். கண்ணாடியைப் பார்த்து சிரித்துக்கொண்டே ஏதோ பேசுகிறாள். கண்ணாடியை ஒரு முறை முத்திவிட்டு, அதை வைக்க வேண்டிய இடத்தில் வைக்கிறாள். அவள் நடத்தையைப் பார்த்ததும் செல்லம் அதிர்ச்சியுறுகிறாள்.

"என்னடி புத்தி மாறாட்டம் வந்திரிச்சா?" என்று கத்துகிறாள்.

செல்லத்தின் வார்த்தைகள் காதில் விழாதது போல, மீனாட்சி அறையின் நடுவில் ஒரு பாயை விரித்துவிட்டு, அதில் உட்கார்ந்து கொண்டு ஜம்பர் பொத்தான்களைக் கழற்றுகிறாள்.

''என்னடி நாடகமா நடிக்கிறே?'' என்று கூறிக் கொண்டே, செல்லம், அவள் அருகே சென்று, கையைப் பிடித்து இழுத்து நிற்க வைத்து, அவள் கன்னத்தில் மாறி, மாறி பளீர், பளீர்

www.padippakam.com



என்று அறைகிறாள். மீனாட்சி இலேசாகச் சிணுங்கி அழுகிறாள்.

“அக்கா, அதை அடிக்காதே. புத்தி மாறிட்டாப்ல தான் தெரியுது. நான் தூக்க மாத்திரை வாங்கிவரேன். அதைக் கொடுத்து அதைத் தூங்கப்போடு,” என்கிறான் அச்சுதன். செல்லம் குய்யோ முறையோ என்று கூச்சலிடுகிறாள். மீனாட்சி அறையின் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு தன் விரல்களை எண்ணிக் கொண்டிருக்கிறாள். செண்பகம் கைகளால் தலையில் அடித்துக் கொண்டு, உடைகளை மாற்றிக் கொள்ள ஆயத்தமாகிறாள்.

O O O

நான் ஒரு வார காலமாக ஊரிலில்லை. ஊருக்கு வந்ததும் தங்கத்தைப் பார்க்க விரும்பினேன். அவள் அவளது சென்ற கால வாழ்க்கையைப் பற்றிக் கூறியதெல்லாம் என் மனதை விட்டு அகன்று விட்டது. இப்போது அவள் என் பாலுணர்வின் பிரதிபலிப்பு உருவாகவே என் மனக் கண் முன் வந்து நின்றாள். அவள் முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே, ‘‘ராசாவுக்கு சந்தோசம் தானே?’’ என்று கேட்கும் காட்சி எனக்குத் தோன்றவும் சிரித்துக் கொண்டேன். அன்று காலையிலேயே அவளைப் பற்றி நினைக்கவாரம்பித்து விட்டேன். ‘‘சே! ஏதோ இரத்தக் கொதிப்பைத் தணித்துக் கொள்வதற்காக அங்கு செல்கிறோம் அந்த மனக்கோளாறுகளுக்கு எல்லாம் இடம் கொடுக்கலாமா?’’ என்று என்னை நானே கடிந்து கொண்டேன். என்றாலும் வழக்கத்துக்கு மாறாக இரவு ஒன்பது மணிக்கே தங்கத்தின் வீட்டு வாசலில் வந்து நின்றேன். அப்பொழுதுதான் ஒருவன் தங்கத்தின் வீட்டிலிருந்து வெளியே வந்தான். எனக்குச் சங்கடமாக இருந்தது. தலையை வேறு புறம் திருப்பிக் கொண்டேன். தங்கம் வீட்டு வாசலில் வந்து நின்று கொண்டு, சிரித்தபடியே, ‘‘உள்ளே வாங்க’’, என்றாள். ரேழி வரை சென்றேன். திரும்பி விடலாம் போலிருந்தது. தங்கம் கதவை அரை குறையாக அடைத்தாள்.

‘‘என்ன ஒரு மாதிரியா இருக்கீங்க? வந்தவரு என்னைப் பார்க்க வரலே; அத்தானைப் பார்க்க. அத்தான் இல்லேன்ட்டு சொல்லி அனுப்பிவிட்டேன்’’ என்று சொல்லிக் கொண்டே, மெதுவாக அரைகுறையாய்ச் சாத்தப்பட்டிருந்த வெளிக் கதவை முற்றும் சாத்தினாள். ரேழியில் விளக்கு ஒன்றுமில்லை; கூடத்து மின்விளக்கு ஒளி மங்கலாக ரேழியை நிறைத்தது. ‘‘பாத்தீங்களா? மறந்துட்டேன். உங்களுக்கூன்ட்டு அபூர்வமா ஒரு சிகரெட் வச்சிருந்தேன். அது இங்கெல்லாம் கிடைக்காதாம்.’’ என்று கூறிக்கொண்டே, கூடத்திற்குள் ஓடிவிட்டு, சிறிது நேரத்தில் ஒரு சிகரெட்டோடு வந்தாள். சிகரெட்டை என் வாயில் வைத்து, அதைப் பெண்களுக்கே உரிய முறையில் தீக்குச்சி கிழித்துப் பற்ற வைத்தாள். கட்டிலில் என்னருகே உட்கார்ந்து கொண்டு, ராசாவை ஒரு வாரமா ஏது காணலே?’’ என்று கொஞ்சவாரம்பித்தாள். அன்று அவள் தலையில் மல்லிகை வைத்திருந்தாள். அதன் மனம் என்னை மயக்கவே, கனவு உலகத்திலிருந்து விடுபட்டவன் போல, சிந்தனையை உதறித் தள்ளிவிட்டு அவளைக் கட்டியணைத்தேன்.

‘‘ராசாவுக்கு சந்தோசம் வந்திரிச்சு,’’ என்று கூறிக் கொண்டே, அவள் என் பிடியிலிருந்து விடுபட்டு, ‘‘இங்கே வாங்க,’’ என்று சொல்லிக் கொண்டே கூடத்துக்குள் ஓடினாள். நானும் தொடர்ந்தேன். கூடத்து விளக்கை அணைத்தாள். ஒரு கணம் இருட்டு. மறு கணம் மற்றொரு ஸ்விச்சை அழுத்தும் சப்தம். அறையில் மீண்டும் ஒளி வந்தது. மொர்குரி சூழலிலிருந்து ஒழுகிய நீல ஒளி. அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தேன். வெள்ளையடித்து மிகவும் சுத்தமாக இருந்தது. சுவரிலே வரிசையாகப் புதுப் படங்கள்; ஒரு பெரிய கட்டில் வேறு. ஊதுவத்தி நறுமணம் அறையை நிரப்பியது.

‘‘அத்தான் ரேடியோ கூட வாங்கப்போறாரு’’, என்றாள் தங்கம்.

‘‘எல்லாம் உன் சம்பாத்தியம் தானே?’’ என்றேன்.

‘‘அப்படி ஒண்ணுமில்லே. நான் என்ன சம்பாரிச்சுக் கொடுத்துடறேன். இந்த வீட்லதான் லட்சுமி இருக்காம், அத்தானுக்கு.’’

‘‘இந்த லட்சுமியா?’’ என்று கேட்டுக்கொண்டே, கட்டிலில் உட்கார்ந்து கொண்டு அவள் கைகளைப் பிடித்து இழுத்தேன்.

www.padippakam.com



ஆமாம், உங்க அத்தான் எப்படிப்பட்டவரு? நான் அவர் கூட சரியாகப் பழகல்லையே!'' என்றேன்.

''பாவம், நல்ல மனுசரு.''

''அவர் பொளப்பே உன் சம்பாத்தியம் தானா?''

''உஹூம், இல்லை. இது தவிர அவளுக்கு இரண்டு வீடு இருக்கு. ஒரு வீட்டிலே இரண்டு பிள்ளை; இன்னொன்னிலே மூணு இருக்கு.''

''இங்கே நீ மட்டுந்தானா?''

''உம்''

''அது ஏன்?''

''அத்தானுக்கு எம்மேலே பிரியம். சரி, இதெ விடுங்க. வேறெ ஏதானும் பேசுங்க,'' என்றாள் வெடுக்கென்று.

''கோவமா?'' என்றேன்.

உரிமையோடு என் மடிமீது சாய்ந்து கொண்டு, கையில் ஏதோ நூலையோ, நாரையோ ஒரு விரலில் இழுத்துச் சுற்றிய வண்ணம்,

''இப்ப எல்லாம் நீங்க துப்புத்துலக்கற மாதிரி கேள்வி கேக்கிறீங்க'', என்று குற்றம் சாட்டினாள்.

''நான் ஒன்று கேட்கலாமா?'' என்றேன்.

''ஊம், என்ன?'' என்றாள்.

''நான் ஒரு வீடு எடுக்கிறேன். நீ என் கூடவே வந்திரு.''

''எத்தனை நாளைக்கு?''

''மூன்று மாதமோ, ஆறு மாதமோ, பிரியப்படி.''

என்மீது சாய்ந்து கொண்டிருந்தவள் எழுந்து உட்கார்ந்து சிரித்தாள்.

''என்ன சிரிப்பு?'' என்றேன்.

''இல்லே எப்போதுமே நாம ரெண்டு பேரும் சேர்ந்திருப்போம்ன்ட்டு. சொல்லிடுவீங்களோன்னு பயந்தேன்.''

''நீ அதற்குத் தயார்தான் என்றால், நானும் தயார் தான்,'' என்று சற்றுத் தடுமாற்றத்தோடு சொன்னேன்.

''உண்மையாகவா?'' என்றாள்.

''ஆமாம், உண்மையாக.''

''சத்தியமா?''

''எனக்குச் சத்தியம் செய்து தரதிலே நம்பிக்கை இல்லை''

''சத்தியம் செய்து கொடுத்தாத்தான் என்ன? எனக்குத்தான் ஏற்கெனவே ஒரு புருஷன் இருக்காரே?''

''ஆமாம், ஆமாம், உனக்குப் புருஷன் இருக்கிறதுனாலே தான் நீ இங்கே குறத்தி முடுக்கிலே இருந்துட்டிருக்கே, இல்லே?''

''குறத்தி முடுக்கிலே இருந்தா, அதனாலே தாலியறுந்தவளாயிடுமா?'' என்றாள்.

''சீக்கமுதை! என்னைவிடத் துட்டுக்காரன், எவனாவது இளிச்சவாயன் சிக்குவான்ட்டு பார்த்திட்டிருக்கே, அவ்வளவு தானே?''

அவள் பதில் பேசவில்லை.

நான் கட்டிலிலிருந்து எழுந்தேன். தரையை உற்று நோக்கிக் கொண்டிருப்பது போல் உட்கார்ந்திருந்த அவள், ஒன்றும் சொல்லாமல், எனது விலாவைச் சுற்றி கைகளை வீசி என்னைக் கட்டி இழுத்தாள். நான் உதறினேன். நான் திமிறிக் கொண்டிருக்கவும், அவள் மீறி, என்னைக் கெட்டியாக அணைத்து,—எத்தனை இரும்புப்பிடி!—எனது உதடுகளில் முத்தினாள். நான் செயலற்று அவள் கண்களை நோக்கினேன். அவள் ஒரு முறை சிரித்துவிட்டு, மறுமுறை என் தலையை அவளது கழுத்தோடு அணைத்துக் கொண்டாள். அவள் கன்னத்தோடு என் கன்னம் உராய்ந்த போது அவளது வெப்பமான கண்ணீர் என்னைக் குளிரச் செய்து, எனது உடலை ஒரு குலுக்குக் குலுக்கி

படிப்பகம்

www.padippakam.com



யது. அவளது இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தினேன். என் உதடுகள் உணர்ந்த உப்புச் சுவையை அவை இன்னும் மறந்துவிடவில்லை.

''உங்களுக்கு என்ன வயசாகுது?'' என்றாள்.

''இருபத்தி மூணு. உனக்கு?''

''இருபதிருக்கும்''

''முகத்தைக் கழுவிக்கிட்டு மேக்கப் பண்ணிட்டு வா,'' என்றேன்.

''நீங்களும்தான்.'' என்றாள்.

''அத்தான் பதினோரு மணிக்கு வருவாரு. பத்து பதினஞ்சு, என்ன இருக்கோ, குடுத்திருங்க. னைட் பூர இருந்திட்டுப் போகலாம்,'' என்று, முகத்தைக் கழுவிக் கொண்டே யோசனை சொன்னாள்.

''சரி'' என்றேன்.

○ ○ ○

காலை நான்கு மணி இருக்கும். மின்சார விளக்குகள் அணைக்கப்பட்டு விட்டதால் நல்ல இருட்டு, எல்லா வீடுகளும் மூடிக்கிடக்கின்றன—செல்லத்தின் வீட்டைத் தவிர. செல்லம் மட்டும் வாயிற்படியில் உட்கார்ந்திருக்கிறாள். திடீரென்று முகத்தையும், உடலையும் உள்ளிழுத்துக் கொண்டு, தன் முந்தானையைக் காற்றில் பறக்கவிடுகிறாள். முந்தானை கொடியைப் போல காற்றில் பட, படவென்று அடிக்கின்றது. வேறொன்றும் இல்லை; அது அவள் அழைப்புக் கொடுக்கும் முறை. அவள் முகத்தாலோ, கண்களாலோ, கட்டுக் குலையாத உடல் அமைப்பாலோ, அழைப்புக் கொடுத்த காலம் மலையேறி விட்டது. யாருக்கு அந்த அழைப்பு? என்ன கேள்வி? அவன்தான் வீட்டின் முன்வந்து நின்றுவிட்டானே! இதோ வீட்டுக்குள் நுழைந்துவிட்டான்.

முதல் அறையில் ஒரு ஓரத்தில் இரு உருவங்கள் படுத்து உறங்குகின்றன. வந்த மனிதன் செல்லத்தை வெறித்துப் பார்க்கிறான். அவனுக்கு வயது நாற்பதுக்கும் மேலிருக்கும். அவன் வெறுப்போடு, ''யார் இருக்கா? நீ தானா?'' என்கிறான்.

''பொடிசுகள் தூங்கிரிச்சு; இனிமே ஒண்ணும் எழுப்ப முடியாது,'' என்கிறாள் செல்லம் கண்டிப்புடன். வந்த மனிதன் தயங்குகின்றான். அவனது தயக்கத்தைக் கண்டதும், செல்லம் நளினமாக சிரிக்க முயன்று கொண்டே,

''பொடிசுகளுக்கு என்ன தெரியும்? இன்னிக்கு என்கூட இருந்துட்டுப் போங்க,'' என்று சொல்லி நிறுத்திவிட்டுப் பிறகு, சிறிதே வெட்கத்தோடு, ''உங்க பிரியம் போல நடந்துக்கிறேன்,'' என்கிறாள். வந்த மனிதன் சற்றுச் சிந்திக்கிறான்.

மற்ற விஷயங்கள் பேசி முடிவு செய்யப்படுகின்றன. வந்தவனுக்குச் சந்தோஷம்தான். எல்லாம் அவன் இஷ்டம் போலவே. இருவரும் அடுத்த அறைக்குச் செல்கின்றனர். கதவு அடைக்கப்படுகின்றது. அரை மணி நேரத்துக்கு மேல் ஆகிவிட்டது. சற்று அபூர்வமான விஷயம் தான். உள்ளிருந்து இருவர் பேசிக் கொள்வதும் வெளியே கேட்கின்றது.

''எங்கிட்டே ஒண்ணு சோடை இருந்தது கிடையாது. இந்த இரண்டும்தான் கடைசிக் காலத்திலே இப்படி வாச்சிருக்கு. ஒண்ணுக்கு ஒரு வாரமா வயித்திலே என்னவோ வலியாம்; எழுந்திருக்கவே முடியலே, இன்னொன்னுக்கு என்னவோ பைத்தியம் மாதிரி இருக்கு; வந்தவங்களையெல்லாம் விரட்டி அடிச்சிடறது,'' என்கிறது பெண் குரல். ஆண் குரல் ஒன்றும் பேசவில்லை, பெண் குரல் தொடர்கின்றது. ''நீங்க என்னைக்குச் சொன்னாலும் ரெடிதான். நாளையே வரணும்னாலும் வந்திடறேன்.''

கதவு திறக்கின்றது. அவன் வெளியே வருகிறான். அவனுக்குப் பரம திருப்தி. அவன் வீட்டை விட்டிறங்கும் சமயம், 'நாளை நேரத்தோடே வந்திடுங்க'' என்கிறாள் அவள். அவன் தனக்குள் சிரித்துக் கொள்கிறான். ''வச்சிருக்கிறதானாலும் இது மாதிரி ஒண்ணைத்தான் தேடிப் பிடிக்கணும்'', என்று அவன் முனகிக் கொள்கிறான்.

○ ○ ○

தங்கத்தோடு எனக்குப் பழக்கம் ஏற்பட்டு இரண்டு மாத காலமாகி இருக்கும்.

www.padippakam.com



சில நாட்களாக ஊரில் இல்லை. இரவு ஒன்பது மணிக்குத் திரும்பி வந்தேன். அன்றிரவே தங்கத்தைச் சந்திக்க வேண்டும் போலிருந்தது. உடுப்பை மாற்றிக் கொண்டு அழகு படுத்திக் கொண்டு குறத்தி முடுக்குக்குள் நுழைந்தேன். தங்கத்தின் வீடு அடைத்துக் கிடந்தது. பல முறைகள் கதவைத் தட்டினேன். கதவு திறக்க வில்லை. யாரும் உள்ளே இருந்து பதில் கொடுக்கவுமில்லை. அடுத்த வீட்டில் தெரு வோரமாக இருந்த ஜன்னல் திறந்தது. யாரது? என்றது ஒரு பெண் குரல்.

''தங்கம் வீட்டிலே இருக்குதா?" என்றேன்.

ஜன்னல் வழியே அந்தப் பெண் என்னை உற்று நோக்கிவிட்டு,

''நீங்கள்தானா? தங்கம் வீட்டில் இல்லை" "எங்கே போயிருக்கு? சினிமாவுக்கா?'' என்று கேட்டேன்.

''பாடம் படிக்க வாத்தியார்கிட்டே போயிருக்கு." என்று அவள் பதிலளித்தாள்.

எனக்குப் புரியவில்லை.

''என்ன பாடம்?" என்று கேட்டேன்.

''ஓகோ, உங்களுக்கு அது தெரியாதா? போலீஸ் சார்ஜ் பண்ணி ஸ்டேஷனுக்குக் கூட்டிட்டுப் போயிருக்காங்க; ஏழெட்டுப் பிள்ளைகளுக்கு இன்னைக்கு, நல்ல பாடம்," என்று கூறிவிட்டுச் சிரித்தாள்.

என்ன செய்வதென்று புரியாமல் நின்றேன். அடுத்த வீட்டுக் கதவு திறந்தது. அதுவரை என்னுடன் பேசிக்கொண்டிருந்த பெண் கதவருகே அவளது சேலையை அலங்கோலமாகப் போட்டுக் கொண்டு நின்றாள். ''நாளைக்கு வந்தால் தங்கத்தைப் பார்க்கலாம்," என்று கூறிவிட்டு, அவளாகவே, ''என்ன, நாளை வரச் சவுகரியப் படாதோ?" என்று கேட்டாள். நான் கடந்த இரண்டு மாதங்களாக தங்கத்தைத் தவிர யாரிடமும் சென்றதில்லை. வேறு யாரிடமும் செல்ல வேண்டும் என்று தோன்றியதும் கிடையாது. என்றாலும் அன்று அந்தப் பெண்ணிடத்தே எனது காமத்தைத் தணித்துக் கொள்ள முடிவு செய்தேன். அதன் மூலம் தங்கத்துக்கும் வேறொரு பெண்ணுக்கும் வேற்றுமை இல்லை என்று நிருபித்துக் கொள்ளவும் முடிந்தால், தங்கம் இல்லை என்றால் எனக்குத் தவிப்பு என்ற நிலை ஏற்படாதல்லவா?

அவளும் அவளால் இயன்ற மட்டும் முயன்றாள். இருந்தும் ஏன்? ஒரு நாள் பொறுத்துக் கொள்ள முடியாத எனது ஆசைவெறிக்கு வெட்கப்பட்டு, அதிருப்தியோடும், மனக்கிலேசத்தோடும் வெளியே வந்தேன்.

அடுத்த நாள் இரவு தங்கத்தின் வீட்டுக்குச் சென்றேன்.

"என்ன பத்தா, பதினைஞ்சா?'' என்ற கேள்வியோடு பேச்சை ஆரம்பித்தேன்.

''அப்படின்னா?" என்றாள் அவள்.

''கோர்ட்டிலே அபராதம் எவ்வளவு கட்டினே? பத்தா, பதினெஞ்சா?" என்று விளக்கினேன்.

''ஆமாம், பத்தையும், பதினெஞ்சையும் கட்டிட்டு வர, நாங்க ஒண்ணும் அவ்வளவு மட்டமில்லை,"என்றாள் தங்கம். இந்த பதிலை நான் எதிர்பார்க்கவில்லை.

''ஆமாம், ஆமாம் என்ன கெட்டிடும்? இத்தனை நாளா அபராதத்தைக் கட்டாமத்தான் இருந்தயாக்கும்?" என்றேன்.

''இத்தனை நாளாக் கட்டினா? எப்போதும் கட்டிட்டே இருக்கணுமோ? அத்தான்கிட்டே கண்டிப்பாச் சொல்லிட்டேன். இந்தத் தரம் கேசை நடத்திப்பாத்துடறது என்று," என்றாள் தங்கம் ''ஏய் எதுக்கு இந்த வீராப்பு எல்லாம்? வீண் செலவுதான். அந்தப் பயலுகள் ஆயிரம் சாட்சிகளைக் கொண்டு வந்து நீ யாருன்னு நிரூபிச்சுடுவாங்க, தெரியுமா?" என்றேன் நான்.

''நான் யாராம்? இந்தப் பயலுகளுக்கு விட்டுக் கொடுத்தா தலைக்கு மேலே ஏறுவானுக. உங்களுக்கு மான, அவமானமில்லாமே இருக்கும். நான் மான, அவமானப்பட்டவ'', என்று ஆத்திரத்தோடு தங்கம் சரமாரி பொழிந்தாள். நான் சிரித்துக் கொண்டே, அவளது ஆத்திரத்தைப் பொறுத்துக் கொண்டேன்; ஆனால் என்

www.padippakam.com



உள்ளத்தில் எங்கோ ஒரு மூலையில் அவளது வார்த்தைகள் சுருக்கென்று தைத்தன. நான் வாதத்தை வளர்க்க விரும்பவில்லை. சரி, நல்ல வக்கீலாகப் பார்த்துக் கேசை ஜோரா நடத்திடலாம்'', என்று மழுப்பிக் கொண்டே, அவளது அருகே சென்று அவளை அணைத்து முத்தினேன். அவள் கண்கள் கலங்கி இருந் தன. அவள் முகத்தை ஒரு புறமாகத் திருப்பி, மூக்கை ஒங்கிச் சிந்தினாள்.

பிறகு பல விஷயங்கள் பற்றி பேசினோம். எனது தாகம் தணிந்தது. நான் விடை பெற்றுச் செல்லும் சமயம், தங்கம்,

''அது என்னங்க அப்படிச் சொல்லிட்டீங்க?'' என்றாள். எனக்குத் தர்மசங்கடமாக இருந்தது.

''இந்தா, தங்கம், உன் சாகசத்தை எங்கிட்டே காட்டாதே. இவ்வளவு ரோஷமுள்ளவளா இருந்தா இப்படி என் பட்டப் பகலிலே தொழில் நடத்திட்டிருக்கே?'' என்று கடுமையான குரலில் கேட்டேன்.

''தொழில யார் தான் செய்யலே? அதுக்காக தெருவிலே போறவரவனே எல்லாம் வலியக் கூப்பிட்டதாகச் சொன்னா'', என்றாள் தங்கம். தங்கம் கூறியது உண்மைதான். விபசார வழக்கை போலீசார் உருவாக்குவது அந்த முறையில்தான். விபசாரம் செய்வது குற்ற மில்லை போலும்; விபசாரத்துக்கு அழைப்பது தான் குற்றம்.

''அடடே! இதை வச்சிட்டா இவ்வளவு அலட்டிக்கிறே! இந்த மாதிரிக் கேசில் எல்லாம் அப் படித்தான் குற்றத்தை ருசிப்பிப்பாங்க,'' என்று நான் விளக்கினேன்.

''அதனாலேதான் ஒரு கை பார்க்கணும்ங் கிறேன்'', என்றாள் தங்கம்,

நான் யோசித்தேன். தங்கம் உணர்ச்சி வசப் பட்டு ஒரு காரியத்தில் ஈடுபடுவது புத்திசாலித் தனமாக இருக்காது. ஆனால் மனிதன் உணர்ச் சிக்குக் கட்டுப்படாது புத்திசாலித்தனத்துக்குத் தான் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றிருக் கிறதா? ரோஷத்திலோ, கோபத்திலோ ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று தோன்றி னால், அப்படியே செய்துவிடுகிறது; பிறகு அதன் பலா பலன்களை அனுபவித்துக் கொள்கி றது! இதிலென்ன?

''சபாஷ்! தங்கம். உன் யோசனை அபாரம்,'' என்றேன்.

''அப்ப நீங்க எனக்கு வந்து சாட்சி சொல்லு வீங்களா?'' என்றாள் தங்கம்.

'நானா? எதற்கு? நான் என்ன சாட்சி சொல்ல முடியும்?'' என்று சொல்லித் தங்கத்தின் மட மைக்காகச் சிரித்தேன்.

''நீங்க கோர்ட்லே நான் உங்ககிட்டேதான் இருக்கேன்; என்னை நீங்கதான் வச்சிக் காப் பாத்தறதாக சாட்சி சொல்லணும்,'' என்றாள் தங்கம்,

எனக்கு ஒன்றும் புரியவில்லை. சிறிது அதிர்ச்சி ஏற்பட்டது; கொஞ்ச கோபமும். ''என்ன எதிர்பார்க்கிறாள்?'' என்று எண்ணினேன். மறுகணம் அவளை நான் என்கூடவே வந்து இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டது என் நினைவுக்கு வந்தது. அதற்குத் துணிந்த வன் ஏன் இதற்குத் துணியக்கூடாது? நான் தங்கத்தைப் பார்த்தேன். ஒன்றுமறியாத குழந்தையைப்போல் அவள் எனக்குத் தோன்றி னாள். அவள் ஒரு அனாதை; நானும் ஒரு அனாதை. தங்களது கொள்கையாலும் நடத் தையாலும் சமுதாயத்திலிருந்து தங்களைத் தாங்களே பகிஷ்கரித்துக் கொண்டவர்களில் நானும் ஒருவன்; அவளும் ஒருத்தி. நாங்கள் தனிப்பிறவிகள்; எங்குமே அந்நியர்கள். நான் தங்கத்தின் அருகே சென்றேன். இரு கைகளா லும் அவளைத் தழுவிக் கண்களை மூடினேன். என் கண்களில் நீர் உகுந்தது. நான் எனக்கா கவும், அவளுக்காகவும் சிந்திய கண்ணீர்! சிறி தும் காம உணர்ச்சி இல்லாமல் நான் பருவம் வந்த ஒரு பெண்ணைக் கட்டித் தழுவியது அது தான் முதல் தடவை. ஒரு குழந்தையைக் கட் டித் தழுவுவது போலிருந்தது. குறத்தி முடுக்கை விட்டு, நாங்கள் இருவரும் ஒருவர் மேல் ஒருவர் சாய்ந்து கொண்டு மெள்ளத் தள்ளாடித் தள் ளாடி செல்வது போன்றதொரு பிரமை!

''தங்கம், சரி நான் உனக்காகச் சாட்சி சொல்கி றேன். ஆனா இந்தக் கேசு முடிந்ததும், நாம

www.padippakam.com



ரெண்டு பேரும் எங்காவது போயிடணும். நான் யாரும் அரிச்சந்திரன் இல்லை. ஆனாலும் சாகிறமட்டும் நாம ரெண்டு பேரும் பிரியாம இருக்க முடியும் என்றுதான் நம்புகிறேன்" என்று தங்கத்திடம் கூறினேன். வாக்குறுதியைக் கொடுத்ததும் என் நெஞ்சம் திடுக்கிட்டது. என்னிலே எனக்கு நம்பிக்கை கிடையாது. எனது வாக்குறுதிகளே என்னை அச்சுறுத்தும். நான் எனது வாக்குறுதியைக் காப்பாற்ற முடியுமா? எது எப்படி இருந்தால் என்ன? வாக்குறுதியைக் கொடுத்த நேரத்தில் என் உள்ளத்தில் தூய்மையைத் தவிர வேறொன்றும் இல்லை. அப்படியே நான் ஒரு நாள் அவளை விட்டுப் பிரிய வேண்டும் என்ற நிலை வந்தால் அவள் நடுத்தெருவில் நிர்கதியாக நிற்காதவாறாவது பார்த்துக் கொள்வேன். ''அடுத்த வியாழக் கிழமை வாய்தா,'' என்று கூறிவிட்டு தங்கம் என்னைத் தழுவி முத்தினாள்.

வியாழக்கிழமை பிரதிவாதியின் டிபென்சு சாட்சியாக சாட்சிக் கூண்டில் ஏறிப் பிரமாணம் எடுத்துக் கொண்டேன். எங்கள் வக்கீலின் விசாரணைக்குப் பிறகு, என்னை சப்-இன்ஸ்பெக்டர் குறுக்கு விசாரணை செய்தார்.

கேள்வி : உங்கள் பெயர்?

பதில் : ................................

கேள்வி : வயது?

பதில் : இருபத்திமூன்று.

கேள்வி : ஊர்?

பதில் : மதுரை.

கேள்வி : இந்த ஊர்லே எத்தனை வருஷமா இருக்கீங்க?

பதில் : சுமார் ஒரு வருஷம்.

கேள்வி : உங்கள் தொழில்?

பதில் : பத்திரிகை நிருபர்.

கேள்வி : பத்திரிகையின் பெயர்?

பதில் : ...... .........................

கேள்வி : இந்தப் பத்திரிகை மட்டரகச் செய்திகளைத் தரும் பத்திரிகை என்று கருதப்படுகிறது, இல்லையா?

பதில் : இல்லை. இதுவரை அரசாங்கம் பத்திரிகை மீது எந்தவித நடவடிக்கையும் எடுத்ததில்லை.

உடனே இன்ஸ்பெக்டர் எங்கள் பத்திரிகையிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட சில பகுதிகளை மாஜிஸ்டிரேட் முன்னிலையில் வைத்தார்.

கேள்வி : தங்கத்தை உங்களுக்கு எவ்வளவு காலமாகத் தெரியும்?

பதில் : இங்கு வந்ததிலிருந்து.

கேள்வி : தங்கம் எப்படி பிழைக்கிறாள்?

பதில் : நான் பண உதவி செய்கிறேன்.

கேள்வி : நீங்கள் எவ்வளவு காலமாகப் பண உதவி செய்கிறீர்கள்?

பதில் : சென்ற ஆறு மாத காலமாக.

கேள்வி : அதற்கு முன் தங்கம் எப்படிப் பிழைத்தாள்?

பதில் : எனக்குத் தெரியாது. வேறு யாரும் உதவியிருக்கலாம்.

கேள்வி : தங்கத்துக்கு நீங்கள் பண உதவி செய்யக் காரணம்?

பதில் : நான் தங்கத்தை மணக்கப் போகிறேன்.

கேள்வி : இத்தனை நாட்களாகத் தங்கத்தை மணக்காததற்குக் காரணம்?

பதில் : கல்யாணத்தை நினைத்த நினைப்பிலே முடித்துவிட முடியாது.

இன்ஸ்பெக்டர் சிறிது நேரம் சிந்தித்தார். ''அவ்வளவுதானா?'', என்று மாஜிஸ்டிரேட் கேட்டார் ''இன்னும் இரண்டே கேள்விகள்.'' என்று கூறிவிட்டு, இன்ஸ்பெக்டர் குறுக்கு விசாரணையைத் தொடர்ந்தார்.

கேள்வி : சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் இரவு நீங்கள் தங்கத்தை சினிமாவுக்

www.padippakam.com



குக் கூட்டிச் சென்றதாகச் சொல்லு கிறீர்களே, உங்கள் இருவரையும் அன்று சினிமாக் கொட்டகையில் யாரும் பார்த்தார்களா?

பதில் : பலர் கண்டிருக்கலாம். யார் என்று சொல்ல முடியாது.

கேள்வி : குறத்திமுடுக்கில் உங்களுக்கு வேறு யாருடன் பழக்கம்?

பதில் : வேறு யாருடனும் பழக்கம் கிடையாது.

கேள்வி : உங்களுக்குத் தங்கத்தின் கெட்ட நடத்தையின் மூலம் வருமானம் கிடைக்கிறதென்றும், அதற்குப் பதிலாக நீங்கள் தங்கத்துக்கு ஆண் துணையாக இருக்கிறீர்கள் என்றும் சொல்கிறேன்.

பதில் : அப்படி இல்லை.

சாட்சிக் கூண்டிலிருந்து இறங்கி, மாஜிஸ்திரேட் முன்னிலையில் தங்கத்திடமிருந்து விடை பெற்றுக் கொண்டு, கோர்ட்டைவிட்டு வெளியேறி வந்தேன்.

அன்றிரவு என்னால் தங்கத்தின் வீட்டுக்குச் செல்ல முடியவில்லை. நண்பன் ஒருவன் அறையில் படுத்துறங்க வேண்டியிருந்தது. தூக்கம் வரவில்லை. உடனடியாக தங்கத்தைக் கல்யாணம் செய்து கொண்டு ஊரைவிட்டே சென்று விட வேண்டும் என்ற ஆசை என்னை வருத்தியது. முதன் முறையாக, தங்கம் வேறொரு ஆணோடு படுத்திருக்கும் எண்ணம் என் மனதில் வேதனையையும், பொறாமையையும் கிளப்பியது. கல்யாணம் செய்து கொள்வதில் ஒரு சிறு தகராறு இருந்தது. தங்கத்தின் 'அத்தான்' சம்மதிக்க மாட்டான். ஆனால் போலீசின் உதவியைக் கொண்டு அவனைச் சமாளித்து விடலாம்.

''என்ன சார், அந்தப் பொண்ணைப் போய்க் கல்யாணம் செய்துக்கணுங்கறீங்க?'', என்கிறார் இன்ஸ்பெக்டர்.

''தங்கமான பொண்ணு சார்,'' என்கிறேன்.

''தங்கமானது சரிதான். கெட்டுப் போனதில்லையா?'' என்கிறார் இன்ஸ்பெக்டர்.

''நானும் கெட்டுப் போனவன்தான், சார்'', என்கிறேன்.

''என்ன அந்தப் பொண்ணு மேலே உங்களுக்குக் காதலா?'' என்கிறார் இன்ஸ்பெக்டர்.

காதலாம் காதல்! அய்யோ, எனக்கு அந்த சொல்லே வேண்டாம். அழகான சொல்லை அர்த்தமற்றதாக ஆக்கிவிட்டார்கள்! எனக்குத் தங்கத்திடம் காதல் இல்லை; ஆசை தான். உங்களது காதல், வசதிக்கும், அந்தஸ்துக்கும் அடங்கியிருக்கும்வரை நான் அதை அண்டவிட மாட்டேன். காதலாம், காதல்! அதெல்லாம் வாழ்க்கையையே நிராகரிக்கும் திறன் உள்ளவர்களுக்குத் தானே? நானோ சாமானியன்.

வாழ்க்கையில் பட்ட கடன்கள் பல. இவற்றுக்கெல்லாம் பிரதியாக உலகத்துக்கு ஏதாவது உருப்படியாகச் செய்ய வேண்டும் என்ற தெளிவில்லாத, கனவு போன்றதொரு எண்ணத்தைத் தவிர எனக்கு வாழ்க்கையில் குறிக்கோள் கிடையாது.

உடனடித் தேவைகளும், சுய நலமும், காரணமில்லாத உள்ள உளைச்சலும் என்னை அந்தக் கனவு எண்ணம் என்னவென்று கூடப் புரிந்து கொள்ள வொட்டாதவாறு தடுத்து வந்தன. யார் கண்டது? வாழ்க்கைத் துணை கிடைத்த பிறகு நான் மாறலாம். என் இருதயத்தில் வெட்கத்தையும், வேதனையையும் நிரப்பி வந்த சுயநலம் பறந்தோடி, எனது வாழ்க்கைக்கு அதன் தேவைகளுக்கும் அப்பாற்பட்ட தான புதியதொரு அர்த்தத்தை நான் கண்டாலும் காணலாம். தங்கத்தைப் பற்றி நினைத்தேன். அவளைத் தோளிலே சுமந்து கொண்டு ஒரு மேட்டிலே ஏறிச் செல்வது போன்றதொரு மனப்பிராந்தி!

○ ○ ○

பிற்பகல் மணி மூன்று. மரகதம் தனியாக அவள் வீட்டில் இருக்கிறாள். அவளைப் பார்த்தால் இப்பொழுதுதான் தூங்கியெழுந்தவள் போல் தோன்றுகிறது. அதோடு விழித்துக் கொண்டதில் ஏமாற்றம் அடைந்தவளாகவும் தெரிகி

றது. படுத்தபடியே புரளுகிறாள். என்ன என்னவோ சிந்திக்கிறாள் போலும். என்ன சிந்திக்கிறாள், யாருக்குத் தெரியும்? சிறிது நேரத்தில் அவன் வருகிறான். அவளது காதலன். அவன் முப்பத்திரண்டு பற்களையும் காட்டிச் சிரிக்கிறான். இவள் அவனை ஒரு முறை பார்த்துவிட்டு மீண்டும் தலையைக் கீழே கவிழ்த்துக் கொள்கிறாள்.

''என்ன கோபமா?'' அவன் அவளருகே உட்காருகிறான். அவள் பதில் பேசவில்லை. அவன் அவள் முதுகில் கை போடுகின்றான். அவள் தன் கையால் அவன் கையை எடுத்து விலக்கி விட்டு, நகர்ந்து உட்காருகிறாள். அவன் மீண்டும் அவனது முப்பத்திரண்டு பற்களையும் காட்டிக்கொண்டு, அவளை நெருங்குகிறான். அவள் தலையைக் கீழே போட்டுக்கொள்கிறாள்.

''எப்போ ஊமை ஆனே?''

அவள் பதில் பேசவில்லை. பிறகு சற்றுக் கோபத்தோடு,

''அந்தச் சங்கிலியைத் திருப்பிட்டியா? அத்தான்ரொம்பக் கோவப்படறாரு. அது எனக்கு நாளைக்கே வேணும்,'' என்கிறாள்.

''உம், அப்படிச் சொல்லு. அதானே கோவம்,'' என்று கூறிக்கொண்டே, அவன் பையிலிருந்து ஒரு காகிதப் பொட்டலத்தை எடுத்து விரிக்கின்றான். அதனுள் ஒரு சங்கிலி. பளபளவென்று மின்னுகிறது. அவள் அதைக் கையில் வாங்கிக் கொண்டு, உடனே கழுத்தில் அணிந்து கொள்கிறாள்.

''இனிமே கோவமில்லையே?''

''இனி உனக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. வந்த வழியைப் பார்த்துக்கிட்டுப் போ''.

''எது வந்த வழி? இதுவா?'' என்று அவன் விரலை அவள் நெஞ்சுக்கு நேர் சுட்டுகிறான்.

அவனை அடிக்க அவள் கையை வீசுகிறாள். அவன் தாவிக் குதித்து எழுந்து நிற்கிறான்.

''சரி, ராணி அம்மா சுவாதீனத்திலே இல்லே போலிருக்கு, ஏதோ அருந்திருக்காங்க,'' என்று கூறிக் கொண்டே, ''நாளை வந்து பாத்துக்கிறேன்,'' என்று கொண்டே வீட்டை விட்டு வெளியே செல்கிறான்.

நேரம் கழிந்து கொண்டே இருக்கின்றது. அவள் செயலற்றுக் கிடக்கிறாள். சொல்ல முடியாத மனக் கசப்பை அவள் முகம் தெரிவிக்கின்றது. சலிப்பு ஏற்படுகின்றது. சற்றே நிலை கொள்ளாமல் புரளுகிறாள். படுத்தபடியே, முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டு, இலேசாக அழுகிறாள். அழுகை பெருத்த விம்மலாக மாறுகின்றது. விம்மல் ஓய்கின்றது. மூக்கை உறிஞ்சிக் கொண்டு உமிழ்நீரைக் கூட்டி விழுங்குகிறாள். முனகல் ஒப்பாரியாக மாறுகிறது. அவளது ஒப்பாரி உயர்ந்து, தாழ்ந்து, நீட்டி நெளிந்து, அவளது உள்ளத்தில் தைத்திருக்கும் முட்களை ஒவ்வொன்றாக எடுக்கின்றது. அவளது ஒப்பாரியில் பெண் குலத்தின் தவிப்பும், கொதிப்பும் மாறி மாறி இழையோடுகின்றன என்பார்கள் கதையாசிரியர்கள்.

மரகதத்தின் 'அத்தான்' உள்ளே நுழைகிறான்.

''ஏங் களுதை! என்ன ஒப்பாரி வேண்டிக் கிடக்கு? எளுந்து மொவத்தைக் கழுவிக்கிட்டு, வெளியே நில்லு. இப்பத்தான் நாலு மணிக்கே லாந்த ஆரம்பிச்சிடறாங்களே!''

அவள் எழுந்திருக்கிறாள். அவன் கண்கள் அவள் கழுத்தில் மின்னும் சங்கிலியில் விழுகின்றன.

''ஒரு மட்டா அந்தத் தடிப்பய அதெத் திருப்பிட்டானாக்கும்,'' என்று கூறிக் கொண்டே, அவளது சங்கிலியைத் தொட்டுப் பார்க்கிறான். பிறகு சடக்கென்று அவளைச் சங்கிலியைக் கழற்றச் சொல்கிறான். அதைக் கையில் வாங்கிப் பார்க்கவும் அவன் முகம் மாறுகிறது.

'ஏம் பிள்ளை, உனக்கு மூளை இருக்கா? பித்தளை சங்கிலியனா திருப்பிக் கொடுத்திருக்கான். அந்தக் காலிக் களுதையே சும்மா விடறேனா, பாரு. நம்மகிட்டவா அவன் சாமார்த்தியத்தைக் காட்டறான். வெறும்பய,'' என்று கோபத்தோடு கத்துகிறான். மரகதம் ஒன்றும் புரியாது விழிக்கிறாள். இது அவள் கண்ட காதல்; அவன் அவள் பொறுக்கியெடுத்த காதலன்!

○ ○ ○

www.padippakam.com



திருமணம் ஒரு விசித்திரமான விஷயம். திருமணம்தான் தங்கள் காதலின் குறிக்கோள் என்று சொல்லாத காதலர்கள் இல்லை. ''நாம் ஒருவரையொருவர் நேசிக்கிறோம்; அதுவே போதும். இதற்கும் மேலாக கல்யாணம் என்று ஒன்று வேண்டாம்,'' என்று சொன்ன காதலர்கள் இல்லை. உண்மைதான், கள்ளக் காதலர்கள் உள்ளனர். அவர்கள் கல்யாணத்தைப் பற்றி நினைப்பதில்லை. காரணம் அசாத்தியமாகி விட்டதாலே. (ஒரு வேளை கல்யாணம் சாத்தியமாக இருந்தால் அவர்கள் ஒருவரையொருவர் காதலிப்பார்களோ என்னவோ!) எப்படியிருந்தாலும் திருமணத்தின் மூலம்தான் தங்கள் காதலை உறுதிபடுத்திக் கொள்ள முடியும், நிலைபெற்று வைத்திருக்க முடியும் என்பதுதான் காதலர்களின் பல்லவி. காரணம், பொறாமை இல்லாத காதல் இருந்ததில்லை; இருக்கப் போவதுமில்லை. திருமணம் ஒருத்தியை அவளை நேசிக்கும் ஒருவனுக்காக மற்றவரிடமிருந்து பாதுகாக்கின்றது. இப் பாதுகாப்பை எல்லாப் பெண்களும் விரும்புகின்றனர்; எல்லா ஆண்களும் விரும்புகின்றனர். நான் தங்கத்தை என்னுடனேயே இருக்குமாறும், சாகும் வரை எனக்குத் துரோகம் இழைக்காமல் இருக்குமாறும் கேட்டுக் கொள்ளலாம். அவளும் சம்மதித்துவிடலாம். ஆனால் அவள் உடன்படிக்கையின்படி நடந்து கொள்வாள் என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கின்றது? அல்லது நான்தான் உடன்படிக்கையை மதித்து நடப்பேன் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது? திருமணத்தினால் ஓரளவு இவ்வுறுதி, உத்திரவாதம் ஏற்படும் என்று நம்புகிறோம். இந்த நம்பிக்கைக்குப் பகுத்தறிவு பூர்வமான காரணம் இல்லாவிட்டாலும், நூற்றாண்டு காலமாக நிலவி வந்துள்ள ஒரு சமுதாய சம்பிரதாயத்துக்கு இவ்வுறுதியை ஏற்படுத்தும் சக்தி உள்ளது. சமுதாயம் தன்னுடைய நலனுக்காகவே தனி மனிதன் மீது சுமத்தும் கட்டுப்பாடுகளில் திருமணமும் ஒன்று; இதைக் காதலில் தோன்றச் செய்து, காதலில் நிலை பெற்றிருப்பதாக ஆக்கும் அளவுக்கு மனிதன் ஒரு கட்டுப்பாட்டினை தன்னுடைய சுதந்திரமான ஒரு இச்சையின் மறுபுறமாக மாற்ற முடியும்,.........என்ற எண்ணங்களோடு, முதன் முறையாக காலை நேரத்தில் தங்கத்தின் வீட்டை வந்தடைந்தேன்.

தங்கம் உறங்கிக் கொண்டிருந்தாள். அவளை எழுப்பினேன். அவள் ஆடியசைந்து வந்து, முகத்தைத் துடைத்துக் கொண்டே, வழக்கமான புன்முறுவலைக் கொடுத்தாள். ''ஏது? இந்த நேரத்தில்? அபூர்வமாக இருக்கே!''

''என்ன அபூர்வம்? உன்னோடு முக்கியமான ஒரு விஷயம் பேச வந்திருக்கிறேன்.''

''உஹூம், என்ன விஷயம்? பேசத்தானா?''

''பேசவேதான், இங்கே பாரு. நான் நேற்று சாட்சி சொன்னது எப்படி?''

''அபாரம். வக்கீல் சொன்னபடியே சொல்லிட்டீங்களே''!

''கேசு எப்படியானாலும் ஆகட்டும். அதைப் பத்தி நீ கவலைப்படாதே. நம்ப கல்யாணத்தை எப்ப வச்சிக்கலாம்?''

''கல்யாணமா? நல்ல முடிவு பண்ணினீங்க.''

''ஏய், நீ என்ன சொன்னே? நான் சாட்சி சொன்னா என்னைக் கல்யாணம் செய்துக்க வேன்ட்டு சொல்லலே?''

''அதை எப்பச் சொன்னேன்?'' தங்கம் சிரித்தாள்.

''பொய் சொல்லாதே. அன்னைக்கு என்ன சொன்னே?

''என்ன சொன்னேன்? ஒண்ணும் சொல்லலே.'' தங்கம் மீண்டும் சிரித்தாள்.

''அது சரி, அன்னைக்கு என்ன சொன்னையோ சொல்லலையோ, இப்ப என்ன சொல்றே?''

''எனக்கு ஒரு கல்யாணம் போதும்; இரண்டாம் கல்யாணம் வேண்டாங்கறேன்,'' என்று கூறிக் கொண்டே, என்னை அணைத்து முத்தமிட்டாள். எனக்கு கோபம் வந்தது. என்றாலும் கோபத்தை அடக்கிக் கொண்டு,

''இந்தா உன்னைக் கல்யாணம் செய்துக்காலம்னு தானே நான் அந்த அவமானத்தைச் சகித்துக் கொண்டேன்.

''எந்த அவமானத்தை?''

''உனக்காக சாட்சி சொல்ற அவமானத்தை.''

''அது உங்களுக்கு அவமானமா இருத்திச்சோ? அப்படின்னா உங்களைச் சாட்சி சொல்லணும்னு கேட்டிருக்கமாட்டேனே'' என்று கூறிவிட்டு, எனது முதுகில் வைத்திருந்த அவளது கையை எடுத்துவிட்டு, கட்டிற் படுக்கையில் மல்லாந்து சாய்ந்து, வெற்றிடத்தை வெறித்துப் பார்த்தாள்.

''அப்ப, தெரிஞ்சேதான் என்னைக் கோர்ட்டிலே பொய் சொல்ல வச்சயா?''

''காலிப்பய சேதுவெ நான்வான்ட்டு கூப்பிட்டேனாங்களே அது மாத்திரம் பொய்யில்லையோ?''

''உஹூம்,'' என்றேன்.

கட்டிலை விட்டு எழுந்திருந்தேன். அவளிடத்தே விடைபெற்றுக் கொள்ளும் பாவனையில் தயங்கி விட்டு வெளியே வந்தேன். வெட்கம் பிடுங்கித் தின்றது. வெட்கம் வெறுப்பாக மாறியது. ''இனி உன் முகத்தில் விழிக்கப் போவதில்லை,'' என்று சொல்லிவிடலாம் போலிருந்தது. சொல்லத் துணிவு இல்லை. அவள் பால் இன்பத்தின் வற்றாத ஊற்று. மூன்று நாட்களோ, ஒரு வாரமோ, ஒரு மாதமோ கழித்து நான் மீண்டும் அவளுக்காக ஏங்குவேன். அவளிடத்துச் செல்லவேண்டிவரும். அவள் என்னை ஏமாற்றியது சிறியதொரு நிகழ்ச்சி; அவள் எனக்கு அளித்த இன்பம் பெரியதொரு நினைவு. அவளை ஒரு இன்பப் பொருளாக மட்டும் பார்க்கத் தவறிய என்னுடைய பேதமைக்கு வருந்தினேன். காதல் ஒரு வில்லங்கம், ஒரு வியாதி. காமந்தான் ஆணுக்கு அழகு. காமத்தை வைத்தே ஒரு ஆண் ஒரு பெண்ணை வெல்ல முயல வேண்டும். மற்ற எந்த சக்தியின் உதவியை நாடுவதும் ஆண்மைக் குறைவு, தோல்வி. நான் தங்கத்தை வெறுத்து ஒதுக்கினேன், மறக்கவில்லை. அவள் என் உள்ளத்தில் ஒரு மூலையில் மல்லாந்து படுத்துக் கொண்டு, என்னைக் கேலி செய்து சிரித்துக் கொண்டிருந்தாள்.

மூன்று நாட்களுக்குப் பிறகு, தங்கம் ஊரை விட்டு ஓடிவிட்ட செய்தியை அவளது 'அத்தானே' எனக்குத் தெரிவித்தான். அவனுக்கு என்மேல் சந்தேகம். ஆகவே என் இருப்பிடத்தை விசாரித்து அங்கு வந்து சேர்ந்தான். என்னை என் அறையில் கண்டதில் அவனது சந்தேகம் ஓரளவு மறைந்தது. எனது பேச்சின் மூலம் எஞ்சிய சந்தேகத்தையும் போக்கினேன்.

''ராசிக்காரி, ராசிக்காரின்ட்டு செல்லம் கொடுத்தேன். அவ எனக்கே துரோகம் செய்திட்டா,'' என்று அங்கலாய்த்துக் கொண்டான். 'நானூறு ரூபாய் நகையும் போச்சு,'' என்று வேறு பரிதவித்துக் கொண்டான்.

''அவ எப்படி உங்ககிட்ட வந்து சேர்ந்தா?'' என்றேன்.

''அஞ்சு வருசத்துக்கு முன்னே ஒருத்தன், மதுரைக்காரனாம், நூறு ரூபாய் வாங்கிட்டு அவளை எங்கிட்டே விட்டுட்டுப் போனான். அப்ப சின்னப்பெண்ணு; இன்னும் அளகா இருக்கும். ஒரு வாரத்துக்கு முன்னாடி கூட அவன் இந்தப்பக்கம் லாந்திக்கிட்டிருந்ததாக ஒரு நெனப்பு. அவன் தானான்ட்டு உறுதியாத் தெரியலே'', என்று 'அத்தான்' பேசிக் கொண்டே போனான். 'அத்தானு'க்கு ஒரு காப்பி வாங்கிக் கொடுத்து வழியனுப்பி வைத்தேன்.

''ஏதானு தகவல் கிடைச்சா சொல்லுங்க. அதுக்கு ஏதாச்சியும் நல்லது செய்யணும்ன்ட்டு தான் எனக்கும் நெனப்பு,'' என்றான்.

''சரி,'' என்று தலையை ஆட்டினேன்.

○ ○ ○

எனக்கு திருநெல்வேலியில் இருக்க இஷ்டமில்லை. என்னை மதுரைக்கு மாற்றச் சொல்லி எனது பத்திரிகை ஆசிரியருக்கு எழுதினேன். அதற்குப் பல காரணங்கள் கொடுத்தேன். அவற்றில் எது உண்மையானது என்று என்னால் சொல்ல முடியாது. இறுதியில் உத்தரவு வந்தது. நான் மதுரைக்கு மாற்றப்பட்டிருந்தேன். ஆனால் நான் திருநெல்வேலியை விட்டு கிளம்பு முன் எனக்கு ஒரு வேலை தரப்பட்டிருந்தது. நான் திருவனந்தபுரம் சென்று அங்கு வேறொரு ஏஜெண்டையும், நிருபரையும் நியமித்துவிட்டு வரவேண்டியது. எனக்கு

www.padippakam.com



மிகவும் சந்தோஷம்? திருநெல்வேலியில் இருந்த எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு, திருவனந்தபுரம் சென்றேன். முடியுமானால் அங்கிருந்து நேராக மதுரைக்குச் செல்வது என் திட்டம். திருவனந்தபுரத்தில் தான் நான் தங்கத்தை இறுதியாகச் சந்தித்தேன்.

திருவனந்தபுரத்தில் சாளையில் ஒரு குழாயடியில் நான் தங்கத்தைப் பார்த்தேன். குழாயடியில் வழக்கம் போல பெண்களின் ஏகபோக ஆட்சி நடந்து கொண்டிருந்தது. ஒரே ஒரு ஓட்டல் வேலையாள் மட்டும் தன் ஆணுயர்வை நிலை நாட்ட படாத பாடு பட்டுக் கொண்டிருந்தான். வளையல் குலுங்கும் சப்தமும், குடங்களை ஏற்றியிறக்கும் சந்தடியும், பெண்களின் வாயடியும், குழாயடியை நிரப்பி நின்றன. நான் குழாயடியை நோக்கியவாறே நடந்து கொண்டிருந்தேன். தங்கத்தின் பின்புறத்தைப் பார்த்ததும், அடையாளம் கண்டு கொண்டேன். நான் நின்றேன். அவளது பானையை குழாய்க்கு நேராக வைக்க அவள் திரும்பிய பொழுது அவளது முகம் என் கண்களில் பட்டது. முகத்தில் என்றுமுள்ள அதே பூரிப்பு. நான் குழாயடியை நெருங்குமுன்னர் அவள் என்னைப் பார்த்தாள்.

''வாங்க! வாங்க! ஏது `சாமிக்கு இந்தப் புறம் விஜயம்?"

உன்னைக் கண்டுபிடிக்க முடியாதுன்னு நினைச்சிட்டே, இல்லே?"

''ஏன் என்னைக் கண்டுபிடிக்க முடியாது? நான் யாருக்கும் சொல்லிக்காமெ, கொள்ளிக்காமெ ஓடிவந்திட்டேனா?" தங்கத்தின் பார்வை என்னிடமிருந்து சுற்றி இருந்த பெண்களிடம் சென்றது.

''சுகந்தானா?", என்றேன்.

''நல்ல சுகம். வீட்டுக்கு வாங்க பேசிக்கலாம்" என்றாள்.

நான் சிகரெட்டு வாங்க, எதிர்த்த கடைக்குச் சென்றேன். பிறகு தங்கம் பானையை இடையில் தாங்கிய வண்ணம், இருவரும் நடந்தோம். தங்கம் தலையைக் கீழே கவிழ்த்தியும், இடையிடையே சரக்கென்று தலையை உயர்த்தி என்னைப் பார்த்து சிரித்த வண்ணமும் வந்தாள். தங்கம் சற்று மாறியிருந்தாள். அவளது கழுத்தின் பின் புறத்தில் எடுப்பாக ஒரு மஞ்சட்கயிறு நின்றது. புதுக் கயிறு.

''இங்கு யாருடன் இருக்கிறாய்?"

''எம் புருஷனோட."

''எந்தப் புருஷன்?''

''அதான் நான் ஒருதரம் சொல்லலே, அவரோடதான்; வீட்டுக்கு வாங்க விவரமாப் பேசலாம்.''

சிறு குடிசை. முதலில் திண்ணை. பிறகு ஒரு அறை. அந்த அறைதான் படுக்கையறை, அடுக்களை எல்லாம். தரை சுத்தமாகச் சாணத்தைக்கொண்டு மெழுகப்பட்டிருந்தது. வீடு பூரா இலேசாக சாணநாற்றம் வீசிக் கொண்டிருந்தது. வீட்டின் முன்புறத்தில் கை, கால்கள் கழுவி சிறிது சகதியாக இருந்தது. சகதிக்கு மத்தியில் ஒரு பாறாங்கல். பாறாங்கல்லுக்கருகே ஒரு துருப்பிடித்த தகரத்தொட்டி. வீட்டைச் சுற்றிலும் பல திக்குகளில் பார்த்துக் கொண்டிருந்த பல குடிசைகள்.

இருவரும் குடிசைக்குள் நுழைந்தோம். அவள் என்னைத் திண்ணையிலிருக்கச் சொல்லிவிட்டு, மீண்டும் குழாயடிக்குச் சென்றாள்.

''ஆறு மணிக்குத் தண்ணி நின்னிடும்," என்று அவள் விளக்கினாள். நான் திண்ணையில் உட்கார்ந்திருக்கவும், அவள் நாலைந்து தடவைகள் குழாயடிக்குச் சென்று திரும்பினாள். ஒவ்வொரு தடவையும் என்னைக் கடந்து செல்லும் போது, என்னிடத்து ஏதாவது கேட்டுவிட்டுச் சென்றாள்.

''என்ன சோலியா வந்தீங்க?"

"எப்ப திரும்பறீங்க?"

''வந்த காரியம் முடிஞ்சதா?"

''என் மதுரைக்குப் போகப் போறீங்க?"

—போன்ற கேள்விகள்.

தண்ணீர் எடுத்து முடிந்தானது. அவள் அடுக்களைக்குச் சென்றாள். என்னையும் அங்கு வந்திருந்து பேசுமாறு கேட்டுக்கொண்டாள். நானும் இசைந்தேன். அவள் அடுப்பில் புகை மண்டலத்தைக் கிளப்பிவிட்டு விட்டு,

www.padippakam.com



''புகை சங்கடமா இருக்கு இல்லே?" என்றாள்.

''பரவாயில்லை,'' என்றேன்.

''அவரெப் பாத்தீங்களா?"

யாரெ?''

''என் அத்தானைத்தான்"

''ஆமாம். நம்ம ரூமுக்கே வந்துட்டாரு. நீ துரோகம் செய்து ஓடிட்டேனாரு."

''உம், நல்ல மனுஷன்."

தங்கம் அடுப்பை ஊதினாள். அடுப்பு எரியாதிருக்கவே, ஒரு சிறு பாட்டிலை அடுப்பின் மேல் கவிழ்த்தாள். அடுப்பு லபக்கென்று பற்றி எறிந்தது. தங்கம் ஒரு சிறு மண்ணெண்ணெய் விளக்கை ஏற்றி வைத்தாள்; அது அழுது வடிந்தது. விளக்கு வெளிச்சம் அறை எவ்வளவு சிறியதென்று எடுத்துக்காட்டியது. தங்கம் வேலை செய்வதில் மும்முரமாக இருந்து கொண்டே, என்னோடு பேசினாள். நான் பேசியவாறே அறையைச் சுற்று முற்றும் நோக்கினேன். குறத்தி முடுக்கில் நான் அவளைச் சந்தித்து வந்த அறை என் நினைவுக்கு வந்தது. அதன் பிரகாசமான விளக்கு, ஊதுவத்தி வாசனை, அணைந்த குத்துவிளக்கு, படங்கள், வண்ணாத்திப் பூச்சிகளைப்போல் வண்ண விசித்திரங்கள் நிறைந்த துணிமணிகளைத் தாங்கிய கயிறு, எல்லாம் என் ஞாபகத்துக்கு வந்தன. இங்கு வேறு மாதிரியாக இருந்தது. புகை மண்டி கப்பிக் கிடந்த சுவர், முழ நீளத்துக்கு ஒரு கழி, கழியில் சில அழுக்கடைந்த துணிகள், தரையில் சுற்றுப்புறத்துக் கருமையை எடுத்துக் காட்டும் அடுப்பு. அடுப்பின் வெளிச்சத்தில் ஏற்பட்ட தங்கத்தின் நிழல் சுவரில் பந்து போலக் குதித்தது. தங்கம் கண்களைத் துடைத்துக் கொண்டு,

''இன்னைக்கு நம்ம வீட்டிலே சாப்பிடறீங்களா?" என்றாள்.

''ஆமாம், சந்தேகமில்லாம."

''ஓட்டல் சாப்பாடு மாதிரி இருக்காது.''

''பரவாயில்லை. அது தெரிஞ்சும்தானே ஒரு தரம் உங்கையாலே ஆக்கிச் சாப்பிடணும் என்று சொன்னேன், ஞாபகமிருக்கா?"

''இருக்கு, இருக்கு, நல்லா இருக்கு,'' தங்கம் சிரித்தாள்.

''அதெல்லாம் சரி. நான் கேட்ட கேள்விக்குப் பதிலில்லையே. நீ யாரு கூட இங்கே வந்தே'"

''அவர் கூடத்தான்"

''யாரு நடராஜனா? உன் வீட்டுக்கு பெரிய மனுஷனைக் கூட்டியாந்த புண்ணியவாளன் தானே?"

''அவரே தான்''

''அவர் கூட ஏன் இங்கே வந்திருக்கே? மதுரை போறதுதானே?"

''போகலே''

''போகலேன்னா? ஏன் போகலே?''

''அவருமேலே ஒரு கேசு இருக்கு. பெரிய தப்புப் பண்ணிட்டாரு. அதனாலேதான் என்னை திருநெல்வேலியில் விட்டிட்டு அவர் தலை மறைவா ஓடினாரு."

''பெரிய தப்பூன்னா?"

''பெரிய தப்பூன்னாத் தெரியாதா? பெரிய தப்பு தான். இப்ப எதுக்கு அதெல்லாம் கிளப்புறீங்க?

தங்கம் பேச்சை நிறுத்திவிட்டு, கொதிக்கும் சோற்றுப் பானையிலிருந்து ஒரு சோறு எடுத்துப் பதம் பார்த்தாள். அவள் என்னைக் கவனியாது, அடுப்பிலே கவனம் செலுத்தும் போது அவளோடு ஏதாவது வம்பு செய்ய வேண்டும் போலிருந்தது. அவள் ஆரம்பத்தில் என்னிடத்து கிளப்பிவிட்டிருந்த காம உணர்ச்சி தலை காட்டியது. ஆனாலோ அவளது பார்வையும், பேச்சும், சிரிப்பும், அழகு குறையாதிருந்தாலும், எனக்குத் துணிச்சலைக் கொடுக்கும் முறையில் இல்லை.

''உன் புருஷன் -இங்கே என்ன செய்கிறான்...?''

''மூட்டை தூக்குறார்."

''மூட்டை தூக்கி என்ன கிடைக்கும்?"

''கிடைக்கிறதுதான்"

தங்கம் வேலையை முடித்துக் கொண்டு, என் முன்னிலையில் சேலையையும், ஜம்பரையும் சரிப்படுத்திக் கொண்டாள். என்னை வெளித் திண்ணையில் வந்து உட்காரச் சொல்லிவிட்டு, ஒரு தகரக் குவளையில் தண்ணீர் எடுத்து முகத்தைக் கழுவிக் கொண்டாள். பிறகு உடைந்து பாதியாய்க் கிடந்த ஒரு கண்ணாடியை எடுத்து, அழகு பார்த்துக் கொண்டாள். கண்களின் கீழ் இமைகளை தாழ்த்தி, கண்களின் பிரகாசத்தைச் சரிப்படுத்திக் கொள்வது போல் பாவனை செய்தாள். குங்குமத்தைக் கொண்டு, கையாலேயே தலைமயிரைச் சரி செய்து கொண்டு, பின்புறம் அழகாக அள்ளிச் சொருகிக் கொண்டாள்.

''ரொம்பக் கஷ்டம் போலிருக்கு. ஏதாவது செலவுக்கு வேண்டுமா?'' என்றேன் அலட்சியமாக. அவள் நான் கூறியதைக் கேளாது போல, இருங்க என்று சொல்லிவிட்டு, உள்ளே சென்று, சுவரில் ஒரு படத்தில் மாட்டியிருந்த, ஒரு சரடுப் பூவை எடுத்து, கொண்டையில் திணித்தவாறே என்முன் வந்து நின்றாள்.

''என்ன சொன்னீங்க?'' என்றாள்.

''இங்கே ரொம்பக் கஷ்டப்படறே போலிருக்கே?'' என்றேன்.

''உம், என்ன கஷ்டம்! கஷ்டம் எங்கேயுந்தான் இருக்கு. அவரு நாளைக்கு மூணு, நாலு சம்பாதிக்கராரு. அவருடைய பழைய சிநேகிதனாம், ஒரு பாவிப்பய சோம்பேறி, அவரைப் பயமுறுத்தி, பயமுறுத்திப் பணத்தெப் பிடுங்கிட்டிருக்கான். ராத்திரி சோறு கொட்டிக்க அவனும் வந்திருவான்.''

தங்கம் தரையில் உட்கார்ந்திருந்தாள். நான் ஒடுக்கமான மேடையில் கால்களைத் தொங்க விட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். வெளியில் நோக்கினேன். இருட்டு அலை, அலையாகக் கவிழ்ந்து கொண்டிருந்தது. தூரத்தில் வானத்தின் அடிவானத்தை ஒட்டி மங்கிய பிரகாசம் தென்னை மரங்களுக்கு இடையே தென்பட்டது. மேற்குப் பார்த்த வீடு.

''உங்க கல்யாணம் எப்ப? இல்லாட்டி ஆயிடுச்சா?'' என்றாள் தங்கம்.

''இன்னும் ஆகலே. ஆகறதுன்னா உனக்குத் தெரியாமயா போயிடும்.''

''ஆமாம், ஆமாம். எங்கிட்டே முதல்லே சொல்லிட்டுத்தானே செய்திப்பீங்க!''

''என்ன அப்படிச் சொல்லிட்டே? உன்னையே கட்டிக்க நான் தயாரா இல்லை? இப்பத்தான் உன் கழுத்திலே தாலியோடிருந்தே,'' என்றேன். தங்கம் சிரித்தாள்.

''என்ன சிரிப்பு?'' என்றேன்.

''நாங்கூட தாலியை அடியோடு மறந்திட்டேன். இங்கே வந்து மூணு, நாலு நாளுக்கு பெறவுதான் எனக்கு இது உதிச்சிது. பிறகு தான் தாலி கட்டிக்கிட்டேன்.''

''தாலி கட்டினவருமா மறந்துட்டாரு?''

''அவரு எங்கே எனக்குத் தாலி கட்டினாரு? அந்தப் புண்ணியவதி நானில்லே, வேறொருத்தி.''

''அப்ப, நடராஜன் உனக்குத் தாலி கட்டின புருஷன் இல்லையா?''

''இல்லை. ஒரு வகையிலே எனக்கு இன்னும் கல்யாணமே ஆகலேங்க,'' என்று கூறிவிட்டு அவள் பெருமூச்செறிந்தாள்.

''ஆமாம், அன்னைக்கு உங்கதையைச் சொல்றப்போ நடராஜன்தானே உம் புருஷன்ட்டு சொன்னே?''

''யாருங்க புருஷன்? நாம அப்படி நெனச்சிக்கிடறவருதான்.''

''அப்ப நடராஜனுக்கு வேறே பெண்டாட்டி இருக்கா?''

''உம். பெண்டாட்டி பிள்ளை குட்டிங்க எல்லாம் உண்டு.''

''அப்ப அவரு ஏன் அவங்களெ விட்டிட்டு......''

''என்னமோ, அவர் செஞ்ச பாவம்; நான் செஞ்ச புண்ணியம், இல்லே பாவமோ.''

''நடராஜனை உனக்கு எப்படிப் பழக்கம்?''

''பழக்கமா? நான்னா அவருக்கு உசிருங்க. அவரு என் அக்கா புருஷனோட தம்பி. அப்பா, அம்மா இறந்ததும் அக்கா வீட்டுக்குப் போனேன். அங்கே தான் இவரு பழக்கம் ஏற்பட்டது. நான் என்னவோ அவருக்குப் பெரிசாத் தெரிஞ்சேன். அவருக்கு பெண்டாட்டி

www.padippakam.com



பிள்ளை குட்டிங்க இருந்ததுனாலே என்னைக் கல்யாணம் செய்துக்காமெ வச்சிக்கிறேனாரு. அக்கா சம்மதிக்கலே. எனக்கு இவரு மேலே ரொம்ப பிரியம். அக்கா வீட்டைவிட்டு வந்து இவருகூட இருந்தேன். எனக்காகத் தனி வீடு பிடிச்சு நல்லா வச்சிருந்தாரு. பாவம், கொளந்தை மாதிரி. நான் என்ன கேட்டாலும் வாங்கித் தந்திருவாரு. நான் அப்பெல்லாம் இப்ப மாதிரி இல்லே. ரொம்ப ஆசைக்காரி. அது வேணும் இது வேணும்பேன். ஒவ்வொண்ணையும் வாங்கித் தருவாரு. எனக்காகத்தான் அவர் ஆபீசிலே பணம் களவாடி மாட்டிக்கிட்டாருன்னு நெனக்கிறேன். எனக்கு பிறவு தான் புத்தி வந்தது. நல்ல புத்தி முன்னாலே இருந்திருந்தா, எல்லாம் வேறே மாதிரி இருந்திருக்கும்.

தங்கம் கதையை நிறுத்தினாள். இருவரும் பேசாதிருந்தோம். தலையை உயர்த்தி சுற்றும் முற்றும் பார்த்தேன். இருவரும் இருளில் மாட்டிக் கொண்டுவிட்டது போன்ற ஓர் உணர்ச்சி.

"இங்கே பாத்தீங்களா, இந்தத் தழும்பை?" என்று ஆரம்பித்தாள். வலதுகை கணுவில் இருந்த ஒரு தழும்பை இடது கையால் சுட்டிக் காட்டினாள்.

''உம், பாத்திருக்கேன்." என்றேன்.

''அவரெ எப்படியும் அவரோட பெண்டாட்டி பிள்ளை குட்டிகள்கூட சேர்த்துரணும்னு பாக்க றேன். வேறெ எதுவும் செய்யறேங்கிறாரு; அது மட்டும் மாட்டேங்கிறாரு. ஆமாம், இன்னைக்கு அது நடக்கிற காரியமாத் தெரியலே."

''அந்தத் தழும்பைப்பத்திச் சொன்னயே அது என்ன?" என்றேன்.

''வேலை போன பெறகு ரொம்பக் கஷ்டப்பட்டாரு.எங்கையிலேயும் தம்பிடி இல்லை. தனியா என்னை ஒரு வீட்டிலே வச்சிருக்காரு. இரண்டு நாளா சோறில்லை. அவருக்கு உடம்பு நேரில்லை; அவர் வீட்டிலே படுத்த படுக்கையாக் கிடக்குறாரு. அவரெப் பார்க்கலாம்னு போனேன். நான் ரெண்டு நாளா சாப்பிடலேங்கிறதெக் கேட்டதும் அவர் சம்சாரத்தெ எனக்குச் சோறு போடச் சொன்னாரு. அது மாட்டேன்னிருச்சு. 'நீ போய் சும்மாத் தின்னு; உனக்கில்லாத உரிமையா இந்த வீட்லே'ன்னாரு. நான் அடுக்களைக்குப் போகவும் அவர் சம்சாரமும், கொளந்தெ குட்டிகளும் என்னை மறிச்சாங்க. நான் மீறி உள்ளே போனேன். அவுங்க என்னைக் கீழே பிடிச்சுத் தள்ளினாங்க. நான் அப்படியே கையை நீட்டி சோத்துப்பானையைத் தொட்டேன். ஒரு கொளந்தெ அடுப்பிலேந்து எரியற கொள்ளிக்கட்டையை வச்சு எங்கையைச் சுட்டது. நான் 'ஓ'ன்ட்டு அலறினேன். அவர் தள்ளாடி தள்ளாடி ஓடியாந்தாரு. பெஞ்சாதி, புள்ளை குட்டிங்களை அடிச்சு நொறுக்கினாறு. வெறகுக் கட்டையைக் கொண்டே, பாவம், அவர் சம்சாரத்தைப் போடுபோடுன்னு போட்டாரு", என்று கூறிக் கொண்டே வத்தவள், "ஐயோ, நான் பெரிய பாவிங்க, பெரிய பாவி", என்று சொல்லி, தலையில் அடித்துக்கொண்டு அழவாரம்பித்தாள்.

''இப்ப அழுது என்ன செய்யறது?" என்று சொல்லி, அவளைச் சமாதானப்படுத்த முயன்றேன். அவள் கஷ்டப்பட்டு அழுவதை நிறுத்தினாள். அழுகையை நிறுத்தியதால் பெருமூச்சு நெஞ்சை முட்டிக்கொண்டு வந்தது. நான் அவளைப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, அந்த இருட்டில், அவள் விவரித்த நாடகம் என் கண் முன் நடந்து கொண்டே இருந்தது.

வீட்டுக்காரன் உடம்பு சுகமில்லாமல் படுத்திருக்கிறான். அடுக்களையில் களைவரம். மனைவியும், சக்களத்தியும் ஒருத்தி முடியை ஒருத்தி பிடித்துக் கொண்டு, மல்லுக்கட்டி நிற்கின்றனர். குழந்தைகள் குய்யோ முறையோ என்று கத்துகின்றன. அவன் தள்ளாடி நடந்து வருகிறான். வெறி கொண்டவனைப் போல் விறகுக் கட்டையை எடுத்து பெஞ்சாதியையும், பிள்ளை குட்டிகளையும் போடு போடு என்று போடுகிறான். கொள்ளிக்கட்டை சுட்டு தங்கம் அலறிக் கொண்டிருக்கிறாள்......வாழ்க்கைக்குத் தான் எவ்வளவு அழகான பொருள்! கடவுள்தான் எவ்வளவு பெருமைப்படுவார்!!

தங்கம் கண்களைத் துடைத்துக் கொண்டு வெளிப்புறம் பார்த்தாள். இருட்டு இலேசாகக் கலைந்திருந்தது. குடிசையை விட்டு வெளியே வந்து நின்றேன். கிழக்கே உதய சந்திரன் தோன்ற, குடிசைகளின் மத்தியில் மங்கிய ஒளி

www.padippakam.com



நிலவியது. ஒரு குடிசை முன் சில குழந்தைகள் நிலவொளியில் விளையாடிக் கொண்டிருந்தன. மற்றொரு குடிசையிலிருந்து ஒரு குழந்தை சிணுசிணுக்கும் ஒலியும், தொடர்ந்து அதனைச் சமாதானம் செய்யும் தாயின் ஒலியும் வந்தன. ஒவ்வொரு குடிசையிலும் ஒரு விளக்கு ஏற்றப் பட்டு, மினுக் மினுக் என்று எரிந்தது. வீடு களுக்கு ஆண்கள் திரும்பி வந்து கொண்டிருந் தனர். சற்றுத் தொலைவில் நான் செல்ல வேண்டிய நகரப்பகுதி மின்விளக்குகளின் பிர காசத்தில் என்னை வரவேற்று நின்றது. நடு வானிலும், மேல்வானிலும் கரிய மேகங்கள்.

''உங்களுக்கு நேரமாகலே?'' என்றாள் தங்கம்.

''ஆமாம், நேரமாச்சு. அடுத்த தரம் வரும் போது பார்க்கிறேன்,'' என்றேன்.

''இன்னொரு தாம் வருவீங்களா?''

''ஆமாம் இன்னும் ஒரு மாதத்திலே வரலாம்.'' என்று பொய் சொன்னேன்.

''ஆமாம், இதுக்கு என்ன செய்யறதுங்க?'' என்றாள்.

''எதுக்கு?'' என்றேன்.

''இப்படி ஒரு குடும்பத்தைப் பாழ்படுத்திட் டேனே.''

''என்ன செய்யறது?'' என்று கேள்வியையே நான் திரும்பக் கேட்டுவிட்டு, ''வரட்டுமா?'' என்றேன். குடிசையின் வாயிலில் நின்று கொண்டு, அவள் ''சரிங்க'' என்றாள்.

○ ○ ○

குறத்திமுடுக்குக்கு முழுப்பெயர் வள்ளிக்குறத்தி முடுக்கு என்கிறார்கள். இந்த வள்ளிக்குறத்தி முடுக்கில் ஒரு தேவயானை [illegible] [illegible] என்று யாரும் எதிர் பார்க்க முடியுமா? குறத்தி முடுக்கில் உள்ள நாலைந்து பெரிய வீடுகள் ஒன்றில் அவள் இருக்கிறாள். பதினைந்து வயதுதான் இருக்கும். எப்போதும் வெண்மை யான சில்க் பாவாடையும், வெண்மையான சில்க் ஜம்பரும்தான் அணிந்திருப்பாள். அவள் மேலாக்கு அணிந்து யாரும் பார்த்ததில்லை; தலையை அழகாகக் கொண்டை போட்டுக் கொண்டு, தலை நிறைய வளைவாகப் பூ வைத் துக் கொண்டு, வீட்டு வாசலில் நிற்கிறாள். தொழில் நேரம். அவளின் அத்தான் தெருக் கோடியில் ஒரு கடையருகே நின்று கொண்டி ருக்கிறான். அரைமணி நேரத்துக்கொரு தரம் தனித்தோ, ஆளுடனோ, வீட்டுக்கு வந்து போவான். அவ்வளவு பெரிய வீட்டில் தேவ யானை தனித்து இருக்கிறாள். ஓணத்துக்கு பிறந்த ஊர் போயிருக்கும் சரசா இன்னும் திரும்பி வரவில்லை.

இப்பொழுதுதான் அத்தான் வந்து போனான். அடுத்து வருவதற்கு இன்னும் அரை மணி நேரம் ஆகும். தேவயானை வாசற் கதவைச் சாத்திக்கொண்டு, மேலே மாடிக்குச் செல்கி றாள். மாடியறை மிகவும் வசதியானது. கட் டில் மெத்தை, மெர்குரி விளக்கு, சுவரிலே வரிசையாக சினிமா நட்சத்திரங்களின் படங்கள். தேவயானைக்கு வேண்டிய ஒன்று மட்டும் அங்கு இல்லை. இரண்டு நாட்களுக்கு முன்புதான் கஷ்டப்பட்டு கள்ளத்தனமாக அதைக் கொண்டு வந்து மெத்தைக்கு அடியில் ஒளித்து வைத்திருந்தாள். இப்பொழுது கதவை அடைத்துவிட்டு, அதை மெள்ள வெளியே எடுக்கிறாள். நீளமான அரை இஞ்சு மணிக் கயிறு-புதுக்கயிறு. அவள் வெளியூரிலிருந்து வரும் போதுதான், அவளது அம்மா படுக்கை கட்டுவதற்காகக் கொடுத்தது. கயிற்றை எடுத்து அழகு பார்த்துவிட்டு மேலே காரைக் கூரை யைப் பார்க்கிறாள். உத்திரத்தில் ஒரு இரும்பு வளையம் தொங்கிக் கொண்டிருக்கிறது. மெர் குரி விளக்கின் மேற்பாதி வளைந்த தகட்டினால் மறைக்கப்பட்டிருப்பதால் வளையம் அவளது கண்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. வளை யம் உயரத்தில் இருக்கிறது. எப்படி எட்டுவது? கட்டிலை வளையத்துக்கு நேர்கீழாக இழுத்துப் போட்டு, அதன் மீது நின்று கொண்டு எட்டுமா என்று பார்க்கிறாள். இப்போதும் எட்டவில்லை. பிறகு அவசர அவசரமாகக் கீழே சென்று துணி உலர்த்தப் பயன்படும் கழியொன்றைக் கொண்டு வருகிறாள். கட்டிலின் மீது நின்று கொண்டு, கழியின் ஒரு நுனியில் கயிற்றைக் கட்டி, வளையத்துக்குள் செலுத்த முடியுமா பார்க்கிறாள். கதவைச் சாத்தவில்லை; நினைவு வருகிறது. கழியையும், கயிற்றையும் கட்டி லிலே போட்டுவிட்டு, ஓடிக் கதவை அடைத்து விட்டு வருகிறாள். மீண்டும் கழியைக் கொண்டு,

கயிற்றை வளையத்தின் உள்ளே செலுத்தும் முயற்சியில் ஈடுபடுகிறாள். பாவம், படாதபாடு படுகிறாள். முகத்தில் வியர்வை அரும்பி, நெற்றி வியர்வை ஜவ்வாதுப் பொட்டைக் கரைத்து வழிகிறது. இந்நேரத்தில் கீழே கதவு தட்டும் சத்தம் கேட்கிறது. அவசர அவசரமாக, கழியையும், கயிற்றையும் சுவரோரமாகப் போட்டுவிட்டு, கட்டிலையும் இருந்த இடத்தில் தள்ளிவிட்டு, கதவைத் திறந்து கொண்டு, கீழே ஓடி, வெளிக் கதவைத் திறக்கிறாள்.

அத்தானும் ஒரு மைனரும் உள்ளே நுழைகின்றனர்.

''யாரும் இருக்காங்களா?'' என்கிறான் அத்தான் மெதுவான குரலில். ''இல்லை'' என்கிறாள் தேவயானை.

''அப்ப கதவை ஏன் அடைச்சிருந்தே?'' என்கிறான் அத்தான். மைனர் பக்கத்தில் இல்லாதிருந்தால் மூதி, கழுதை, பேக்கழுதை என்ற பட்டங்கள் கிடைத்திருக்கும்.

''போலீசு வான் வர மாதிரி இருந்துச்சு. இப்பத்தான் அடைச்சிட்டு மேலே போனேன்.'' என்கிறாள்.

''உம், நான் கா மணியாக் காத்திருக்கேன். சரி, மேலே கூட்டிப்போ.''

மைனரும், தேவயானையும் மேல் அறைக்குச் செல்கின்றனர்; காரியம் முடிந்ததும் மைனர் கீழே செலகிறான். தேவயானையும் உடைகளைச் சரி செய்து கொண்டு, மீண்டுமொரு முறை மேக்கப் செய்து கொண்டு, மைனரையும் அத்தானையும் வழியனுப்புகிறாள். அவர்கள் செல்லவும் பத்து நிமிடங்களிலே, மீண்டும் கீழ்க் கதவை அடைத்துக் கொண்டு, மேலறைக்கு வருகிறாள்.

மாடியறையின் கதவை அடைத்துக் கொண்டு, கயிற்றையும், கழியையும் வெளியே எடுக்கிறாள். கயிற்றின் ஒரு நுனியை இரும்பு வளையத்தில் எப்படி இறுக்கமாகக் கட்டுவது என்பதுதான் அவளது பிரச்னை. ஒரு யோசனை தோன்றுகிறது. வேகமாகக் கீழே சென்று, அறையடி நீளமான இரும்பு ஆணியொன்றைக் கொண்டு வருகிறாள். ஆணியின் நடுவில் கயிற்றின் ஒரு நுனியை இறுக்கக் கட்டுகிறாள். அவள் இழுத்த இழுப்பில் கயிறு கையை அறுத்து விடுகிறது. வலி பொறுக்காமல் அதில் எச்சிலைத் துப்பிவிட்டுக் கையை உதறுகிறாள். பிறகு கட்டிலை நகர்த்திப் போட்டு, கழியின் உதவியால், ஆணியை இரும்பு வளையத்துக்குள் செலுத்திவிடுகிறாள். கட்டிலிலிருந்து இறங்கி இரும்பு வளையத்துக்கு நேர் கீழாக நின்று கொண்டு, கயிற்றை இழுக்கிறாள். ஆணி வளையத்தைக் குறுக்காக அழுத்திக் கொண்டிருப்பதால் கயிறு பலமாக இருக்கின்றது. கயிறு நீளமான கயிறு. இரும்பு வளையத்திலிருந்து தரைவரை எட்டுகின்றது. மீண்டும் கீழே ஓடிச் சென்று ஒரு கத்தியை எடுத்து வருகிறாள். கதவை அடைத்துக் கொண்டு, கட்டிலின் மீது நின்று கொண்டு, கயிறை தரையிலிருந்து சுமார் ஏழடி உயரத்தில் இருக்குமாறு, கயிற்றைத் துண்டுபண்ணுகிறாள். கட்டிலில் நின்று கொண்டே, கயிற்றின் கீழ் நுனியில் அவள் தலை உள்ளே புகும் அளவுக்கு ஒரு வளையம் செய்து, ஓர் சுருக்கு முடிச்சுப் போடுகிறாள். சுருக்கு முடிச்சுச் சரியாக விழவில்லை. அவளுக்குப் பழக்கம் இல்லை. ஒருவாறாகச் சுருக்கு முடிச்சைப் போட்டுவிட்டு, அது சரியாக இயங்குகின்றதா என்று பார்த்துக்கொள்கிறாள். பிறகு கட்டிலிலிருந்து இறங்கி கட்டிலைச் சற்று இழுத்துப் போட்டுக் கொள்கிறாள். கட்டிலில் நின்று கொண்டு, கயிற்று வளையத்துக்குள் தலையைச் செலுத்தப் பார்க்கிறாள். கயிறு எட்டவில்லை. இறங்கிக் கட்டிலைச் சற்றுத் தள்ளிப் போட்டுக்கொண்டு இப்பொழுது முயலுகிறாள். இப்பொழுது தலை நுழைகிறது. ஆனால் கட்டிலின் விளிம்பு அநேகமாக இரும்பு வளையத்துக்கு நேர் கீழே இருக்கின்றது. தொங்கும் பொழுது காலைத் தட்டினாலும் தட்டிவிடலாம். மறு முறை கட்டிலிலிருந்து இறங்கி கட்டிலைச் சற்று நகர்த்திவிட்டு கட்டிலின் மீது ஏறி நின்று கொள்கிறாள். கீழே கதவு தட்டும் சத்தம் கேட்கின்றது. அறைக் கதவின் திசையில் நோக்குகிறாள். அவசர அவசரமாக தலையை வளையத்துக்குள் நுழைக்கிறாள். இலேசாகத் தலையைச் சாய்க்கிறாள். முடிச்சு இறங்குவது போல் தெரிகின்றது. கீழே கதவு தட்டுகின்றது. ''முருகா'' என்று முனகிக் கொண்டு இருகைகளையும் கூப்ப முயலுகிறாள். கைகள் நடுங்குகின்றன; ஒன்று சேர மறுக்கின்றன. கீழே கதவைத் தட்டும் சத்தம் பலப்படுகின்றது. கண்களை மூடிக்

www.padippakam.com



கொண்டு எட்டிக் குதிக்கிறாள். கழுத்தை இறுக்க வேண்டிய கயிறு, அவளது முகவாய்க் கட்டையைத் தொட்டுவிட்டு, அவளைக் கேலி செய்து ஆடுகிறது. அவள் மல்லாந்து தரையில் விழுகிறாள். தலையின் பின்புறம் கட்டிலின் விளிம்பில் அடிபட்டு, அவள் காலை நீட்டி உட் கார்ந்திருக்கும் பாவனையில் கிடக்கிறாள், தலையிலும், ஆசனத்திலும் நல்ல அடி. கீழே கதவு இடிபட ஆரம்பித்துவிட்டது. கயிறு ஆடு வதால், ஆணி இரும்பு வளையத்தில் உராய்ந்து ஈனக்குரலில் சிணுங்குகின்றது.

ooo

ஜி. நாகராஜனின் 'குறத்தி முடுக்கு' குறு நாவல், அவரின் 'பித்தன் பட்டறை' வெளியீடாக 1963ஆம் ஆண்டு வெளி வந்தது. அதன் பின், இந்நாவல் மறு பதிப்பு செய்யப்படவில்லை. தமிழ் இலக்கியத்தில் அக்கறையும், ஜி. நாகராஜ னின் எழுத்துக்களில் ஈடுபாடும் கொண்ட பலருக்கும் கூட இந்நூல் கிடைக் காமலேயே இருந்திருக்கிறது.

ஜி. நாகராஜன் அறிமுகம் செய்யும் ஒரு உலகை பரிச்சயம் செய்து கொள்வ தோடு, அவ்வுலகை முன் வைத்து அவர் நம்மோடு கொள்ளும் உறவின் தனித்து வத்தையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இதன் காரணமா கவே, 'காலம்' இக்குறு நாவலை இவ்விதழில் வெளியிட்டிருக்கிறது. எனினும், குறு நாவலின்சிறிய இறுதிப் பகுதியொன்று இதில் இடம் பெறவில்லை. எங்க ளுக்குக் கிடைத்த பிரதியில் நாவலின் கடைசித் தாள் இல்லை. அதனால் 'காலம்' அளவில் இன்னும் அரைப் பக்கம் வரக்கூடிய முடிவுப் பகுதி விடுபட்டி ருக்கிறது. தங்களிடம் பிரதியுள்ள எவரேனும், அதன் கடைசித் தாளை மட்டும் (பக் 75-76) ஜெராக்ஸ் செய்து 'வயல்' முகவரிக்கு அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். அடுத்து வரும் இதழில் அப்பகுதியை வெளியிட உதவியாக இருக்கும்.

இக்குறு நாவலின் தொடக்கத்தில் ஜி. நாகராஜன் 'என் வருத்தம்' என்ற தலைப்பில் ஒரு சிறு குறிப்பு எழுதியிருக்கிறார். அது :

> ''நாட்டில் நடப்பதைச் சொல்லியிருக்கிறேன். இதில் உங்களுக்குப் பிடிக்காதது இருந்தால் ''இப்படியெல்லாம் ஏன் நடக்கிறது?'' என்று வேண்டுமானால் கேளுங்கள்; ''இதையெல்லாம் ஏன் எழுத வேண்டும்?'' என்று கேட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்க்காதீர்கள். உண்மையைச் சொல்வதென்றால் முழுமையுந்தான் சொல்லியாக வேண்டும். நான் விரும் பும் அளவுக்குச் சொல்ல முடியவில்லையே என்பதுதான் என் வருத்தம்.''

## எங்களுக்கு ஒரு அறை இருந்தது

**சமயவேல்**

ஆசிரமம் தெருவில்
எங்களுக்கு ஒரு அறை இருந்தது
நகரத்தில் எதனிடமும் ஒட்டுப்பட முடியாமல்
கூரைகளுக்கு மேல் மிதந்த
மிகச் சிறிய அறை அது

சார்மினார் கோல்டுபிளேக் வில்ஸ்பில்டர்
செய்யது பீடிப் புகைகளூடே
விதம் விதமாய் உரையாடும் முகங்கள்
பேச்சுகள் பகிர்வுகள் விவாதங்கள்
துண்டந் துண்டமாய் வெட்டி அலசினோம்
வாழ்க்கையை

சமயத்தில் அறை நகர்ந்து
காந்தி மைதானத்தில் கூடும்
புறநகர்ச் சாலை பாலச் சுவர்
அல்லது மேடேறிக் கதிரேசன் மலை சேரும்
எங்கும் பேச்சுத் தான்

வாழ்வின் விசாரத்தை எப்பவும்
கூடவே இழுத்துக் கொண்டு
அலைந்தது எங்கள் அறை

உலகைச் சீரமைப்பதற்கான கருவிகளை
ஏராளமாய் உற்பத்தி செய்து (தலைகளில்)
அறை முழுவதும் தொங்க விட்டோம்

எது குறித்தும் எவ்விதக் கட்டுப்பாடும்
விதிக்காமல்
அறைச் சுவர்கள் பிரியமுடன் கொடுத்த
சுதந்திரத்தை எல்லோரும் தின்று வந்தோம்

எங்கோ சாப்பிட்டோம்
எப்போதோ தூங்கினோம்
எல்லா இடங்களிலும் டீ குடித்தோம்
அவன் காசு கொடுத்தான்
இவன் சிகரெட் வாங்கினான்
சதா புகை பிடித்தோம்
இளந்தாடியுடனும் குறுஞ்சிரிப்புடனும்
ஒருவன் பாட்டில்கள் கொண்டு வந்தான்
இட்லிகளும் புரோட்டாக்களும்
பார்சலில் வந்தன
மிதமான போதையில்
எல்லாவற்றையும் மிகத் தெளிவாக
விளங்கிக் கொண்டோம்

அறைக் காற்றில்
எங்கள் பெருமூச்சுகளையும்
ஆத்மாக்களையும் கலந்தோம்

நண்பர்கள் கூடக்கூட
அறை அகன்று விரிந்தது ஒருவர் பாயில்
மூவர் தரையில் இருவர் சேரில்
படியில் இருவர் நியூஸ் பேப்பரில் ஒருவர் என
தாறுமாறாய்ப் படுத்து
நிம்மதியாகத் தூங்கினோம்

அறையை விட்டுக் கிளம்பி
குடும்பம் கட்டியிருக்கும் நாங்கள்
வீட்டையும் அறையையும் இணைக்க முடியாமல்
திணறிக் கொண்டிருக்கிறோம்

○ ○ ○

## திவசம்

**மகரந்தன்**

உனக்கு
அடையாளம் காட்டப்பட்ட
உறவு முகங்களில்
யாருடையது(?)
உன்னைக் கண்டு
புன்னகை பிரசவித்தது
உன் அடுப்பில்
காளான் முளைத்தும்
உன் வயிற்றில்
பூஞ்சனம் படர்ந்தும்
நீ
சாகக் கிடந்த போது.

எருவுக்கும் விறகுக்கும்
இன்னும்
வெட்டியானுக்கும் கொடுக்க
உன் வீட்டுத் தோட்டத்தை
விற்றது எல்லா முகங்களும்.

உன் சதை எரியும் ஒளியில்
உன் உயில் படிக்கப் பட்டு
முணு முணுப்பாயும்
பின் சத்தமாயும்

www.padippakam.com



ஆட்சேபிக்கப்பட்டு
மறு நாள்
உன் அஸ்தி கரைக்க
ஆளில்லாமல் போனது.

(நீ சொத்தெழுதி வைத்த
விதவைப் பெண்களும்
அநாதைப் பையன்களுமா
வந்து அஸ்தி கரைப்பர்?)

ஆனாலும்
நான் பார்த்தேன்
அன்று பலமாய்
மழை பெய்ததை.

○ ○ ○

## காதல் கவிதை

ஜெயமோகன்

உனது தண்கள்
காதலில் குளிர்ச்சி பெற்றிருக்கின்றன

உன் கன்னங்களில்
இளமை மின்னுகின்றது

உன் இதழ்களில்
கருணை மலர்கின்றது

உன் விரல்கள்
காற்றில் மீட்டுவது என்ன ராகம்?

புது மழையில் மண் மணம் போல
உன் வியர்வை.

உன் மார்புகளின் சுனையில்
என் கனவுகளை கரைப்பேன்

என் மூதாதையர் முகங்கள் உறங்கும்
உன் அடிவயிற்றுக்கு வணக்கம்.

## வைகை

ந. ஜயபாஸ்கரன்

மாறுதல் அற்ற
பகல்களிலும்

புழுக்கம் மிகுந்த
இரவுகளிலும்

காரியமாய்
சைகிளில்

கடந்து
செல்லும்

என்னைப்
பார்த்துப்

பரிகசித்துத்
தேங்கும்,

★

மழை பெய்த
பின்னிரவின்
நீலக் குளுமையில்
மட்டும்

புணரச் சொல்லிக்
கிளர்ச்சி
தரும்.

★

ஓடு காலில்
கொலையுண்ட
உடல்

வாழ்க்கையே
போல்
கவனிப்பற்றுக்
கிடக்கும்

வையை
மணல்
பொடித்து.

www.padippakam.com



★

யுகங்களில்
பெருகிக் கலக்கும்
கழிவை எல்லாம்
நீருடன் உறிஞ்சக் கொடுத்துத்
திறந்த முலையுடன்
மல்லாந்து கிடக்கும்

கிருத
மாலையாய்
நகரத்தின்
குரல் வளை
நெரிக்கும்.

★

ஆண்டு தோறும்
ஆவணி மூல இரவில்

பெருகாத
வைகை நீர்
அடைக்கப்

பிட்டிற்கு
மண் சுமப்பான்
சிவன்.

விற்பனைப் பிட்டைத்
தின்று கலையும்
மக்கள் எச்சம்
மணலில்.

● ● ●

சிறுகதை

## நாற்பத்து எட்டு கோடி வார்த்தைகளின் மரணம் அல்லது சும்மா கிட சவமே

### பிரபல எழுத்தாளர் குருமலை சுந்தரம்

I

*பால்வண்ணம் பிள்ளையின் தினக் குறிப்பு :*

இந்த வருஷம் என்ன வார்த்தைகளை எழுதலாம்
நாடக விமர்சனம் எழுதலாமா
டாக்குமெண்டரி சினிமா பற்றி
நாவல் எழுதலாமா
வேலைக்கு விண்ணப்பங்கள் எழுதலாமா

அறிவொளி இயக்கத்தில் சேர்ந்து கைநாட்டை மாற்றி
எழுதப் படிக்கத் தெரிந்தோரை அபிவிருத்தி செய்யலாமா
சென்றாண்டு அறிவொளி பெற்றோர் 80,000 பேர்
தினத்தந்தி பேப்பர் சர்குலேஷன்
தமிழ்நாட்டில் 50,000 கூடுதல்.

பாண்டிச்சேரியில் 30,000 கூடியது.

'தோழர்' வந்தார்—'சங்க'த்தில் சேர்ந்தார்—'மூலதனம்' படித்தார்—''உளைக்கள''த்தில் இரும்பால் அடிபட்டார். 'நாவல்கிழார்' 'சர்க்கரை' உற்பத்தி செய்தார்-வெகுஜனங்கள் சர்க்கரைப் பொங்கலிட்டார்—அதன் மீது ஆரிய வேத மந்த்ரங்கள் ஓதி 'நைவேத்யம்' செய்தார்.

சும்மா கிட சவமே......சும்மா கிட சவமே......
எத்தனை முறை சொல்ல...எழுதாட்டி என்ன
அப்படி எழுதாமல் போனால் என்ன...

சும்மா கிட சவமே......

ஏற்கெனவே 35 பதிப்பகங்கள் பதிப்பிக்க மறுத்து—நாவலில் மறுபடி

www.padippakam.com



சேர்க்க வேண்டிய எழுத்துகள்

17ஆம் நூற்றாண்டு 'செகப்பிரிய'னைப் பற்றி எனது புதிய பதிப்பீடுகள்.

நாளைக்காக இன்று குறித்து வைக்கப்பட்டவை.

'ஒரு வார்த்தை'யை கண்டு பிடிக்கப் போய்...
தூக்குக் கயிறு சுருங்கத் துடிதுடித்த போது
மூளை - ரத்தக்குழாய் உடைந்து 'எல்லா
நாளங்களிடையேயும் பயணமான சம்பத்
மரணத்தின் விளிம்பில்
ஸ்தம்பித்து நின்றபோது......சம்பத்

என்ன சொன்னான்...என்ன சொன்னான் :

'எண்ணங்களைத் துருவி அறியவே ஆசைப்பட்டான். மரணத்தால் முற்றுப்புள்ளி பெறாது, ஆராய்ச்சியின் நுனிக்கொழுந்து வளர வேண்டுமென்ற நினைப்பினால், அவன் ஏற்றுக் கொண்ட சிலுவை அது. அன்று முதல்—ஆம் அது நடந்து வெகுகாலமாகிவிட்டது — இன்று வரை, ஆசைகள் உந்த அழிவு அவனைக் கைவிட—மரணம் என்ற விழிப்பற்ற ஒரு சொப்பனாவஸ்தை போல, மூல காரணங்களாலும் நியதிகளாலும் எற்றுண்டு, ஜடத்திற்கும் அதற்கு வேறான பொருளுக்கும் உண்டான 'இடைவெளியில்' அவன் அலைந்து திரிந்தான். ஆசை அவியவில்லை; ஆராய்ச்சி அவிந்து மடிந்து, நியதியையிழந்து விபரீதத்தில் தீவிர கதியில் சென்றது. அவன் இப்பொழுது வேண்டுவது, முன்பு துருவிய இடைவெளி ஆராய்ச்சியன்று; சாதாரணமான மரணம். உடல் இருந்தால் அல்லவா மரணம் கிட்டும்! ஜடமற்ற இத் திரிசங்கு நிலையில் சமூகத்தில் அடிபட்டு நசுங்கியவர்கள் ஆசைப்படும் மோட்ச சாம்ராஜியம் போல, மரண லட்சியம் அவனுக்கு நெடுந்தூரமாயிற்று.'

'பிரம்மராக்ஷஸ'

II

*பிரபல கவிஞரும் பத்திரிகையாளருமான ஒருவரின் நாட் குறிப்பிலிருந்து இடையோட்டம் :*

மீனாட்சி பிரொவிஷன் அண்ட் பயர் வுட் ஸ்டோர்ஸ், பூர்வத்தில் பேட்டை பிள்ளை ஒருவரால் பவழக்காரத் தெருவில் நிறுவப்பட்டு, திருநெல்வேலியில் வசிக்கும் பிள்ளைமாரின் சுயஜாதி அபிமானத்தை உபயோகித்து சில காலம் பலசரக்கு வியாபாரம் நடந்தது. அங்கு பெட்டியடியில் மூக்க பிள்ளைதான் குமாஸ்தா. மூக்க பிள்ளை உப்பு-புளி பற்று வரவு கணக்கின் மூலமாகவும் படிக்கல்லின் மூலமாகவும் மனித வர்க்கத்தின் சோக நாடகங்களையும் மனித சித்தத்தின் விசித்திர ஓட்டங்களையும் அளந்தவர். மூக்க பிள்ளை கவிஞராக மாறி தராசைப் பிடித்து பல கூண்டுப் புலிகளுக்கு சிம்ம சொப்பனமாக இருந்ததும், பின்னர் அவர் கவிதைகள் பலசரக்கு கமறல்களுக்கு மேல் தாண்டாமல் பிற்காலத்தில் இலக்கிய வியாபாரியாக மாறி பண வசூல், கணக்கு, வியாபாரம் என்ற நாணாவித இலாக்காக்கள் பெருகி இலக்கிய 'மரண விலாஸ்' ஆக மாறியதும் சமீபத்தில் நாடு பிரஸ்தாபித்துக் கொண்டிருந்த விஷயம்.

மெட்டாபிக்ஷனின் ஆதரைஸ்டு டீலர் கும்பகோணம் பிள்ளைவாள் 27 பேர்களுக்கு 'கருப்பு பூணூல்' அணிவித்து இலக்கியப் பிரவேசம் நடத்தியது சற்று முன் முடிந்த விஷயம்.

நவீன தி.க.சி களுக்கும் மூனா அருணாசலங்களுக்கும் ஸ்ரீமான் மூக்க பிள்ளையின் பிடிவாரண்ட் :

ச.ஞ.ட. எழுதிய கதைகள், த.ந.ப எழுதிய நாவல்கள், ப.ம.ய எழுதிய நாடகங்கள், ந ப. ம புனைந்த கட்டுரைகள், க.பூ.ச. அமைப்பு மைய வாதம். இவற்றை படியுங்கள் என்றார் மூக்க பிள்ளை. லிங்கத்தைக் கட்டி அழுதார் மூக்க பிள்ளை. மரத்தை கட்டி அழுத கவிஞரைக் கண்டு மரங்களோ தப்பி ஓடுகின்றன. ர.ந.ட என்பவரை பார்க்கும் போது சொன்னது ''புதுமை வேண்டுமானால் சு. சா. ரு. தா வை படியுங்கள், கொந்தளிப்பு வேண்டுமானால் மு.க.ஜெ வைப் படியுங்கள். கலகப் பிரதி வேண்டுமானால் மொ.பா.மே வை படியுங்கள். கவிதை வேண்டுமெனில் 'ரிஷி கஞ்சாஞ் சநேத் ஹிரிபரி ஆச்சார்யகோவ்'...வைப் படியுங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழின் முதல் போஸ்ட் ஸ்டரக்சுரலிஸ்ட் பட்டி னத்தார், சதகம்பாடிய குமரேசர் இல்லை, குட்டி அகத்திய முனிவர். அவர் ஜனன பூமி திருநெல் வேலி. முதல் நான்லீனியர் ரைட்டர் குறுமலை சுந்தரம் பிள்ளை. அவர் கோவில்பட்டியில் பிறந்தார். ''அச்சடித்த காகிதத்தை கத்தரித்து ஒட்டும் காகிதப் பூஞ்சோலை—'' கொல்லாஞ்

## 'மரண விலாஸ்'

''பட்டுக் கோட்டையின் பாட்டு—அது
பதினெட்டு சபைக்கூட்டு.''—நவகவி

மரண விலாஸில் உற்பத்தியாகும் கவிதை — சிறுகதை-லீனியர்-நான் லீனியர்-நாவல்களை எழுதுபவர்களுக்கு பதினெட்டு சுவை கூட்டு வடை பாயாசத்துடன் இலக்கிய விருந்து. யந்தி ரங்களால் உற்பத்தி செய்து குவிக்கப்படும் பண் டங்கள் இவை. இவற்றை உண்பதால் இலக் கிய ரஸனை என்பதற்கோ அழகியல் என்பதற் கோ எதிரிகளாகிவிடுவார்கள். (நான்அழகியல் எதிரி) கால்ரா பவனில் யாரும் உணவருந்த வேண்டாம். மூன்றாம் உலக நாடுகளில் கால்ரா பவனும் மரணவிலாஸும் பல நவீன கரடி வித்தைகள் மூலம் இறக்குமதி செய்யப்படுகிறது மலட்டுத் தன்மைக்கு எடுத்துக்காட்டு இது.

## DATED 1-5-1991 மே தினம்

இந்த வருஷம் ரொம்ப அதிகமா ஒண்ணும் எழுதல; எழுதுனது மொத்தம் 4,20,000 வார்த்தைகள் தான். தினப்புரட்சி பத்திரிகை யில் எழுதினதையும் சேத்தாக்க 6,00,000 வரும். இந்தக் கணக்கில் பழசையெல்லாம் சேக்குரது சரியா தோணல 50 டாக்குமெண் டரி படம் பார்த்தேன். மக்களுக்கான சினிமா இயக்கம் துவங்கி திருநெல்வேலியில் மட்டும் ஐநூறு கிளைகள் உதயமானது. 20 வருஷ மக்கள் சினிமா திட்டமே இருக்கு. ஆப் ஸெஃப், சேக்ரிபைஸ் ஆப் பாப்புலால்பொலியா, ஷார்க் காலர்ஸ் ஆப் கோண்டு, டைம் டு ரைஸ்......

500 புஸ்தகங்களை புரட்டிப் பார்த்தேன். படிச் சது 200 இருக்கும். 140 கவிதைகள் எழுதி னேன். பிரசுரம் ஆகாத கவிதைகள் 260 யும் சேத்தாக்க 400 கவிதை ஆகுது. ஒரு கவி தைக்கு 2 வார்த்தை சேர்த்து தலைப்பு 10+2=12 வார்த்தைகள் கொண்டிருந்தன ஒவ்வொரு கவிதையும். முழு நீளக் கோவா கலரில் கவிதைகள் போடுரதா ஹைதராபாத் எழுத்தாளரிடமிருந்து கடிதங்கள் வந்து ...வந்து சிறு பத்திரிகை விளம்பரம் வந்து அவனுக்கு தனி கவனம் எடுத்து நாலு தொகுதியில் இருந் தும் ஒரு வார்த்தையை எடுத்து வார்த்தைக்கு வார்த்தை சேர்த்து 12,000 எதிரொலிகளை வார்த்தைகளாக்கி நெடுங்கவிதை ...... நெடுங் காவியம் என ஆந்தாலஜி வெளியீடு தேதி 29-4-1991. அன்று சென்னையில் 41.6 செல் சியஸ் வெயில் அடித்தது. இந்த நூற்றாண்டின் உச்சபட்ச வெயில் என்று முன் பக்கத்திலும் ஆந்தாலஜிக் கவிதை பற்றி பின் பக்கத்திலும் விமர்சனம் வெளியானது.

## ஸ்ரீமான் பிள்ளையின் பழைய டைரியில்......

பாரதி நூற்றாண்டாச்சே நவகவிதை சீரியல் வெளியானது. பாரதி நூற்றாண்டில் எல்லோ ரும் கவிதை எழுதினார்கள். கவிஞர்களின் பிள்ளைகள் வெளியிட்ட தொகுதிகளுக்கு MGR அரசு காகித மானியம் வழங்கியது. அந்த வருஷம் ஒரு கோடி வார்த்தைகள் தமிழுக்குக் கிடைத்த கொடை என்றார் சின்னத்தம்பி.

பாரதிதாசன் நூற்றாண்டும் வந்து சேர்ந்தது. பாரதி நூற்பாலைகளும், பல்கலைக் கழகமும், கலைக்டர் வளாகங்களும் தோன்றியது. பெய ரிடப்படாத ஸ்தலங்களுக்கு பாரதிதாசன் நூற் றாண்டு நினைவு கவிதைப் பூங்கா என்று பெயர் சூட்டப்பட்டது. கவிதைப் பூங்காவில் அமைக்கப்பட்ட கவியரங்க மேடையில் அந்தர் வன், பூவை-அறு-பாலாஜி, தோனி வசந்தன், புரளியன், செல்லக்கிளி, ரரசாக்கனி, சோத்து நிலவன், வேர்க்கிளம்பி, நாடுகலக்கி வன்னி யத்தேவன் ஆகியோருக்கு பாரதிதாசன் விரு தும் 10,000 பணமுடிப்பும் வழங்கப்பட்டது.

திருச்சி தேவர் ஹாலின் மேற்கூரைத் தகரங் களில் தட தடத்த கவிதைகளால் தகரங்கள் மேலேயிருந்து கீழே விழுந்தபோது 26 ரஸிக சிகாமணிகள் காயமுற்று அரசு மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்ட பின்பும், கவிஞர்கள் கலைந்து ஓடிவிட்ட பின்னும் மைக் மட்டும் தனி யாக நின்று கவியரங்கம் நடத்திக் கொண்டிருந் தது.

www.padippakam.com



தலைநகரின் முச்சந்திகளில் நவீன குளியல், கழிப்பறைகள் நிர்மானித்தார் MGR. அவற்றில் பாரதி, பாரதிதாசன்......நூற்றாண்டு நினைவு நவீன குளியல் , கழிப்பறைகள் என்று பெயர் பலகை மாட்டி திறப்பு விழாக்கள் நடத்தினார் கருணாநிதி. நினைவுக் கழிப்பிடங்கள் ஏலம் விடப்பட்டு நலிவுற்ற பிரிவு தொண்டர்களுக்கு வாழ்க்கைப் பாதுகாப்பளித்தன கழக அரசுகள். அப்போது ஊர் சுற்றிக் கொண்டிருந்த ஒரு நவீன கவிஞர் அவசரமாய் கட்டண கழிப்பிடம் சென்றார். வெகு பாடுபட்டு மலச்சிக்கலில் இருந்து விடுபட்டு உச்சத்தில் 'ங்கப்பா......... பாரதி தாசா' என்று உள்ளே இருந்து நினைவு கூர்ந்தார். அவர் கழிப்பறையை விட்டு வெளி வந்த போது பாரதிதாசன் நூற்றாண்டு கழிப் பறைகளுக்கு அருகில் குஷ்ட ரோகிகள் பிச்சைக் காரிகள் குழந்தைகள் குடியமர்த்தப்பட்டிருந் தார்கள். அண்ணா சிலையில் இருந்த, ஒரு ஆள் காட்டி விரல் காட்டிய இடத்தில் 'மரண விலாஸ்' ஹோட்டலில் இலக்கிய வாதிகளின் நெரிசல் அதிகமாக இருந்தது கண்டு ஓரமாய் நடந்தார். பாரதிதாசன் நூற்றாண்டு மலர் 13 ஆவது பதிப்பு மிகுந்த பரபரப்பாக விற்கப்பட்டு வந்த சாலையோரங்களில் நடந்து மறைந்தார் கவிஞர்.

III

## சும்மா கிட சவமே

பிரஞ்சு சஞ்சிகையொன்றில் 'வி. வியின் நாட் குறிப்புகள்' நாவலைப் பற்றி ஸ்ரீமான் பால் வண்ணம் பிள்ளையின் விமர்சனம் 25-4-1991. பனை மரத்தில் ஊசியை சொருவிக் கொண்டு நடந்த பரமார்த்த குருவின் சீடர்களைப் போல் பிரபல எழுத்தாளர் வி.வி.யின் 'கட்டவுட்' டை இந்த கள்ளச்சீடர்கள் கதை, கவிதை, கட்டுரை, நாவல், பேச்சு, மூச்சு வரை தூக்கிச் சுமப்பது ஜெயலலிதா கருணாநிதி எம்ஜியார் கட்டவுட் களை தூக்கி நடந்த கழகத் தொண்டர்களின் ஒன்பதாவது பாராளுமன்றத் தேர்தலின் கூாடி வித்தைகளுக்கு ஒப்பாகும். இந்த எழுத்தும் போக்கும் அச்சு வடிவத்தில் வந்து கண்களில் கத்தியை ஆழமாய் சொருவுவதை அனுபவித் தவனே சொல்வதில்லை. ஆசையும் சொந்த ரசனைகளும் இலக்கிய விமர்சனத்தில் செல்லு படி ஆவதில்லை. பரங்கிக்காய் குதிரைமுட்டை ஆகிவிடாது.

பாரீஸ் தெருக்களில் 'ஈசாவஸ்யோபனிஷத்' புத்தகத்தோடு ஆல்பெர் காமுவை பார்க்க அலைந்து கொண்டிருந்த திருவாளர் வி.வி; பாரீஸ் தெருக்களில் அன்னாடம் விற்கப்படும் புஸ்தகங்களை வாங்க அன்னாடம் வந்து செல் லும் தமிழ்க்கவிஞர்' ரிஷிகஞ்சாஞ்சநேயகிரிபரி ஹாச்சார்யகோவ்' சுருக்கமாக 'கோவ்' அவர் களை சந்தித்து கை குலுக்கிக் கொண்டார். பிரிந்து சென்றார். தமிழ் நாட்டில் பிரபல மடைந்த நாவல்களை பாரிஸில்தான் வரவேற் கிறார்கள் என்று மு.போ. எழுத்தாளர் ச.த.ரா. 'என் தோழர்' நாவலை பிரஞ்சுபெண் ஷபீனா மேரிக்கு அர்பணித்து அது 17 ருஷ்ய தேசீய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுக் கொண் டிருந்த போதுதான் 'பிரஸ்த்தொரேய்க்கா' தீவிரமடைந்தது.

ஆனால் திருவாளர் வி.வி., ச.த.ரா வை யெல் லாம் சுண்டைக்காயாக்கி விட்டு பாரீஸ் தெரு வில் அலைந்து கொண்டிருந்தார். பெரும் மன நெருக்கடிக்கு உள்ளானவராயிருந்தார்.

பாரீஸ் நகருக்கு வெளியில் செங்குத்துப் பாறை மீது இருந்த ஆல்பெர் காமுவின் வீடு அடிக்கடி புயலுக்கு ஆட்பட்டு கதவுகளும் ஜன்னல்களும் தாமே அடித்துக் கொண்டன.

வீட்டுக்கு வெளியே புயலில் அகப்பட்டுக் கொண்டு மிக மோசமான நெருக்கடியையும் பேரின்ப நிலையையும் அடைந்த வி.வி. சவரக் கத்தி போன்ற மொழி வேண்டி காமு வீட்டு கதவுகளை ரகஸ்யமாக பார்த்தபடி இருந்தார். புயலுக்குப் பிந்தியும் கூட எந்தப் பொருளும் எதுவாகவும் மாறாமல் இருந்தது.

வி.வியின் மெலிந்த திரேகத்தையும் ஒழுங்கற்ற அவரது ஆடையையும் கண்டு மன வருத்தம் அடைந்த காமுவின் வழக்கமான ழான் தெரு முடி ஒப்பனையாளன் ஜான் மெரி உல்கா ''ஏன் சார்......இப்படி இருக்கிறீர்கள் என்ன ஓய்!'' என்றதற்கு ''என்னைக் கவனிக்கும் போது கூட பொழுது வீணாகிறதே சார்'' என்று சலூனில் சுழல் நாற்காலியில் சாய்ந்து கொண்டு சுழன்று சுழன்று யோசித்துக் கொண்டிருந் தார் (P 104)

ழான் தெரு முடி ஒப்பனையாளன் ஜான் மெரி உல்கா தன் வாடிக்கையாளர்களில் ஒருவரான 'கோவி'டம் சொல்லும் போது, பாளையங்

www.padippakam.com



கோட்டை பப்ளிக் லைபிரெரி பராமரிப்பற்றுப் போய் சிதிலமடைந்து பல புஸ்தகங்களும் மொழி பெயர்ப்புகளும் கவிதைகளும் சாஸ்திரங்களும் திருடு போய்விட்டன என்றான்.

இதை கேட்டபடியே இருந்த திருவாளர் வி.வி. நூலகப் பராமரிப்பு, புஸ்தகம் அடுக்கும் முறைகள், கிழிந்த புஸ்தகங்களை ஒட்டுவது, வாசகர் வட்டம் ஏற்படுத்தி பைண்டிங் நன்கொடை, லைபிரரிக்கு தண்ணீர் வாளி வாங்கி வைப்பது, புஸ்தக இடுக்குகளில் உள்ள மூட்டைப் பூச்சிகளை குண்டூசி மூலம் நசுக்குவது, டினேக லெக்ஸ் ரெஜினா என்ற மஞ்சள் பூக்கும் புஸ்தக மரங்களை பாளையங் கோட்டையைச் சுற்றி உண்டாக்குவது பற்றி பதிலளித்துக் கொண்டிருந்தார். கவிஞர் கோவ் உணர்ச்சி வசப்பட்டு உன்னதம் உன்னதம் என்றார்.

பெரும் உன்னத முடிவான பிச்சைக்காரனுக்கு பிச்சை இடுவது தீர்மானத்திற்கு வருவதற்குள் 64 காலி விஸ்கி குப்பிகளை சுவரில் எறிந்து உடைத்தார் வி.வி. பிச்சை இடுவதற்கு எதிராக எந்த குரலும் எழும்பாது என்ற முடிவுக்கு வந்த போது, பேன்ஸி பனியன் போட்ட அச்சா...... அச்சா......கோவிந்தசாமி என்ற நாவலாசிரியரின் நாவலில் வரும் பனி இரவில் மூத்திர பிறைக்கு அருகிலும் அவற்றின் குமட்டலிலும் நீண்ட காலம் தூங்கி வரும் பிளாட்பார வாசிகளில் ஒருவனிடம் ''என் நண்பன் உடனே ஒரு பது ரூபாய் நோட்டை எடுத்து ''அவனுக்குப் பக்கத்தில் வைக்கவா?'' என்று கேட்டுக் கொண்டே அவனருகே போனான். 'அடேய் முட்டாள்'' என்று கத்தினேன். அவன் கையைப் பிடித்து இழுத்து சற்று தூரத்திலிருந்த நடைபாதை ஓரங்களில் உறங்கும் மனித உருவங்களை எல்லாம் காட்டினேன் ''இப்போது நீ இத்தனை பேருக்கும் இருபது ரூபாய் நோட்டு வைக்க வேண்டும்—செய்'' என்றேன்''...— அச்சா...அச்சா...உன் கருத்தான வசனம்...... ஆந்திரா டப்பிங் வசனமாக...உன்னதமாக— ஆக,

வி.வியும் கோவிந்தசாமியும் சேர்ந்து கும்மியடி ...கோலாட்டம் ஆடு என்று எதிரும் புதிருமாய் குச்சுப்புடி நாட்டியமாடினர். அப்போது தமிழ் நாவலின் சரித்திரம் நடுக்கடலில் நங்கூரம் பாய்ச்சப்பட்டதுதான்......நங்கூரத்தை அகற்றவோ கப்பலிலிருந்து நாவல் இலக்கியம் தப்பிக்கவோ முடியாமல் போனது. இப்படி இப்படி லட்சிய முலாம் பூசி மூடினார்கள்.

சும்மா கிட சவமே......

இப்படியாக திருவாளர் வி.வி. குஷ்டரோகியை தேடியபோது குஷ்டரோகி நகரத்திற்குள் மறைந்து போனான். உன்னத முடிவின் செயல்பாடு தேடி தெருத் தெருவாக அலைந்த போது மரப்படியில் குஷ்டரோகியை சந்தித்தார். தான் தேடிய குஷ்டரோகி அவனல்ல என்று தெரிந்த பின்பும் தன் தீர்மானத்தை நிறைவேற்றும் பேருந்துகலோடு வெள்ளி நாணயத்தை எடுத்து குஷ்டரோகியின் முன் வீசியபோது குஷ்டரோகி ஒரு கணம் நிலை குலைந்து போனான் (ப. 85) உன்னத செயல்பாடு முடிந்த திருப்தியில் வி.வி நிற்கும் போது காசை அவரிடம் தள்ள அவன் கைகளை நாணயத்தின் மீது வைத்தான். பெரும் தத்துவப் பிரச்சினை பூதாகரமாகக் கிளம்பி எது பொருள் — எது இருப்பு — எதை நம்புவது —எது மறையக் கூடியது — எது விருப்பம் — —எது தத்துவம் — என்ற சந்தேகங்களோடு பேராசிரியர் சிங்காரவேலன் வீட்டுக்கு ஓடினான் வி.வி. உன்னதங்கள் சீரழிவதற்காக இரவெல்லாம் தேம்பித் தேம்பி அழுதான்.

மு.போ. எழுத்தாளர் கோவிந்தசாமிக்கும்
உன்னத எழுத்தாளர் வி.விக்கும்

வ.உ.சி உடற்பயிற்சிக் கழகத்தில் நடந்த குஸ்தி சண்டையில் எல்லா எழுத்தாளர் சங்க பயில்வான்களும் வந்து வி.வியிடம் வர்மப்பிடி கற்றுக் கொண்டார்கள். கோவிந்தசாமி உடல் சுளுக்குகளுக்கு இலக்கிய விளக்கெண்ணை தடவி போர்டு மாட்டிக் கொண்டு பிரபல எழுத்தாளர் கோவிந்தசாமி என்ற பட்டம் பெற்றார். எங்கும் பரபரப்பாக கோவிந்தசாமியின் புகழ் பரவியது. கோவிந்தசாமியிடம் இலக்கியம் பற்றி அபிப்பிராயம் கேட்பது பயில்வானிடம் சுளுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஒப்பாகும்.

பால்வண்ணம் பிள்ளையின் பாய்ச்சல் :

குஷ்டரோகியின் தெருவைப் பற்றி பால் வண்ணம் பிள்ளையின் வர்ணனை. வி. வியின் வெள்ளி நாணயத்தை அவன் விரல்களில்லாத

www.padippakam.com



கைகளால் தொட்டு அந்தரத்தில் நிறுத்தி வேடிக்கை காட்டினான். தன் நெருப்புப் பற்றும் பார்வையால் இரு துவாரமிட்டு தன் அழுக்குச் சட்டையில் புதைந்திருந்த ஊசி நூலை எடுத்து தன் சட்டையில் 1003வது பித்தானாக தைத்துக் கொண்டான்.

அவன் ஒவ்வொரு நாளும் கண்டு வந்த திருவாளர் வி.வியின் முகங்கள் குஷ்டரோகக் குழிகளுக்குள் கை கால் இழந்து முகமழிந்து ஒரு வெள்ளி நாணயமாகச் சுருங்கிப் போவதை அன்றாடம் கண்டு வந்நான்.

அவன் தெருவில் கக்கூஸ்களின் குமட்டல்கள், தேசத் தலைவர்களின், பெயர்ப் பலகையில் சிரித்த முகத்தின் ஊத்தைகள், வார்த்தைக் கோழை வடிய வைக்கோல் பொம்மைக்குள் வார்த்தைகள் அடைத்த மத்தியதர வர்க்க அறிவுஜீவி தலைகளில் இருந்து குமட்டும் ஊரிய வைக்கோல் பேச்சுகள், தோவாணத்தில் இரும்புப் பிளேட்டு திறந்தது போல் இரையும் கோடி கோடி வார்த்தைகளின் தொற்றுநோய்கள், நோயுற்றிருந்தவர்கள் இறந்து கொண்டிருந்தார்கள், ஆரோக்கியமானவர்கள் நோயுற்றிருந்தார்கள். மைனர் குற்றவாளிகள், டாப்பர்கள், அபினி விற்போர், பைத்தியமாவதற்கு முன் பிளாட்பார மனிதனின் கண்களில் இருந்த வெறுமை...வெறுமை படிந்த கண்களில் விழும் கரு வளையம்...கரு வளையத்தில் ஆழ்ந்த அர்த்தம்......பைத்தியம் தொடர்ந்து சிரித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வினாடியிலும் உலகின் அமைதிக்காக பைத்தியத்தின் சிரிப்பிலிருந்து கடலின் சிரிப்பு.........குஷ்டரோகியின் இருப்பிடம் நோக்கி தலை வணங்கி நிற்கும் நகரத்தின் அனாதையான மரங்கள்...அவற்றின் மீது பைத்தியத்தைப் போல் சிரித்துக் கொண்டு வெளிவரும் சூரியன்...

சூர்யா...சூர்யா 20 ரூபாயை உன் நண்பன் நீட்ட அதை நீ தடுத்து வசனம் பேசியதும் அந்த வெள்ளி நாணயமும் உன் வசனமும் வி.வியின் உன்னதமும் உன்னதத்திற்கு எதிரான உன் புளுகும் சூர்யா...அவன் குஷ்டரோகி, அனாதை...கால் மேல் கால் போட்டு படுத்தபடி இப்பிரபஞ்ச இயக்கத்தையே தன் வெறுமை நிறைந்த கண்களால் பார்த்துக் கொண்டிருந்தான்.

# IV

## ''பால் வண்ணம் பிள்ளை''

பால் பிரச்சனை அத்துடன் தீர்ந்து போகவில்லை. அவர் மனைவியின் கையில் இரண்டு கெட்டிக் காப்பு இருந்தது. அவளுக்குக் குழந்தையின் மீதிருந்த பாசத்தினால் அந்தக் காப்புகள் மயிலைப் பசுவும், கன்றுக் குட்டியுமாக மாறின. இரண்டு நாட்கள் கழித்து பால் வண்ணம் பிள்ளை ஆபீஸிலிருந்து வந்து புறவாசலில் கைகால் கழுவச் சென்றபோது, உரலடியில் கட்டியிருந்த கன்று, வைக்கோல் அசைபோட்டிருக்கும் மாட்டைப் பார்த்து 'அம்மா' என்று கத்தியது.

''ஏலா?'' என்று கூப்பிட்டார்.

மனைவி சிரித்துக் கொண்டே — உள்ளுக்குள் பயம்தான்—வந்தாள்.

''மாடு எப்பொழுது வந்தது? யார் வாங்கிக் கொடுத்தா?'' என்றார்.

''மேல வீட்டு அண்ணாச்சி வாங்கித் தந்தாக. பாலு ஒரு படி கறக்குமாம்'' என்றாள்.

''உம்'' என்றார்.

அன்று புதுப்பால், வீட்டுப் பால் காப்பி கொண்டு கணவரைத் தேடினாள். அவர் இல்லை.

அதிலிருந்து பிள்ளையவர்கள் காப்பியும், மோரும் சாப்பிடுவதில்லை.

அவர் மனைவிக்கு மிகுந்த வருத்தம். ஒரு பக்கம் குழந்தைகள், மற்றொரு பக்கம் புருஷன் என்ற குழந்தை. வம்ச விருத்தி என்ற இயற்கை அவளை வென்றது.

இப்படிப் பதினைந்து நாட்கள்.

மாட்டை என்ன செய்வது?

அன்று இரவு எட்டு மணி இருக்கும். பால் வண்ணம் பிள்ளையும், சுப்புக் கோனாரும் வீட்டினுள் நுழைந்தார்கள்.

www.padippakam.com



''மாட்டைப் பாரும். இருபத்தைஞ்சு ரூபாய்'' என்றார்.

''சாமி, மாடு அறுபது ரூபாய் பெறுமே'' என்றான் சுப்புக்கோனார்.

''இருபத்தஞ்சுதான். உனக்காக முப்பது ரூபாய். என்ன? இப்பொழுதே பிடித்துக் கொண்டு போக வேண்டும்!''

''சாமி ராத்திரியிலா? நாளைக்கி விடியன்ன பிடிச்சிக்கிடுதேன்'' என்றார் சுப்புக்கோனார்.

''உம். இப்பவே?''

மாட்டை அவிழ்த்தாகிவிட்டது.

'மனைவி'' மாடு எழுபத்தஞ்சு ரூபா இல்லே. குழந்தைக்குப் பால் ஆயிற்றே'' என்று தடுத்தாள். ''மேலும் வரும்படி வேறு வருகிறதாம்''.

''என் புள்ளைகள் நீத்தண்ணி குடிச்சு வளந்துக்கிரும்'' என்றார் பிள்ளை.

சுப்புக்கோனார் மாட்டை அவிழ்த்துக்கொண்டு போகும் போது மூத்த பையன் ''அம்மா என் கன்னுக்குட்டி'' என்று எழுந்து உட்கார்ந்து கொண்டு அழுதான். ''சும்மா கிட சவமே'' என்றார் பால் வண்ணம் பிள்ளை.

பாரிஸில் மூன் தெருவில் திறந்த வெளி அரங்கில் திரையிடப்பட்ட குட்டி ஜப்பானை பால் வண்ணம் பிள்ளை பார்த்துவிட்டு சொன்னார். ''என் புள்ளைகள் நீத்தண்ணி குடிச்சு வளந்துக்கிரும்''

''அம்மா என் கன்னுக்குட்டி'' என்று உட்கார்ந்து அழுதான், பையன். ''சும்மா கிட சவமே'' என்றார் பால் வண்ணம் பிள்ளை.

கை கால் வீங்கிய குடியானவர்களும், பிச்சைக்காரர்களும் வண்டிச் சாளரத்திற்கு நேராக குச்சியான கை கால்களும் மொடா மொடா வயிறுகளும் ஆடி அசையும் பணங்காய்த் தலையும் உடைய கோரமான குழந்தைகளைக் காட்டி பிச்சை கேட்கும் பெண்களும் ஒரு பிஸ்கோத்துத் துண்டுக்கு பூவேலை செய்த கைக்குட்டைகளையோ தேசிய ஆடைகளையோ வாங்கலாம். சலாம் சலாம். குட்டி ஜப்பான் — ஆனந்த பட்வர்த்தன் பாம்பே அவர் சிட்டி, ''என் புள்ளைகள் நீத்தண்ணி குடிச்சு வளந்துக்கிடும்'' என்றார் பால் வண்ணம் பிள்ளை.

## V

இபருது வயதுப்பையன் மவுண்ட் ரோட்டில் இருண்டதார் விரிப்பின் ஓரங்களில் தாளை பொறுக்கித் திரிந்தான். பழைய துணிகளை எடுத்து அதிலுள்ள பித்தான்களை அறுத்துத் தன் சட்டையுடன் தைப்பதே அவனது வேலையாக இருந்தது. அவன் வெள்ளை நிற மனித எலும்பால் செய்யப்பட்ட பித்தான்களையே தன் சட்டை யோடு இணைத்துக் கொண்டான். (அவன் ஒரு அமைப்பியல் வாதி)

மேலும் அவனிடம் பெரிய கோணிப்பை இருந்தது. அதில் இடைவெளி இல்லாமல் பொறுக்கிய தாளை இறுக்கி திணித்து கட்டியிருந்தான். அவ்வளவும் அவன் சேகரித்த அச்சுத்தாள். அவற்றையெல்லாம் தன் பேனாவால் திருத்தி எழுதியிருந்தான். வரிக்கு வரி வார்த்தைக்கு வார்த்தை எல்லா எழுத்தையும் திருத்தி எழுதியிருந்தது வியப்பாக இருந்தது. அவனைப் பின் தொடர்ந்து சென்றேன் அவனுக்கே தெரியாமல். திடீரென்று அவன் முன் சென்று என் கையிலிருந்த கறுப்பு நிற கர்நாடக முரசை அவனிடம் கொடுத்தேன். அட்டையிலுள்ள எழுத்து வடிவங்களால் ஆதி ஞாபகம் தோன்ற திரும்பத் திரும்ப வாசித்தான். அவன் இரண்டடிப் பேனா ஆச்சரியத்தால் குதித்துக் கீழே விழுந்து இரண்டாய்ப் பிளந்தது. அதன் உள்ளே இருந்து அகத்திய மாமுனிவர் எழுந்து நின்றார். நான் லீனியர்... நான் லீனியர்...என்று பூமி அதிர முழங்கினார். திடீரென்று கர்நாடக முரசு அறையப்படும் சத்தம் எங்கும் கேட்டது. அந்த முட்டாள் கர்நாடக முரசை திருத்தி எழுதுவதற்காக குனிந்து பேனாவை எடுத்து ஒட்ட வைத்தான். அகத்திய முனிவர் இரண்டடிப் பேனாவுக்குள் சென்று மறைந்தார். ஒவ்வொரு உடைந்த எழுத்தையும் தாள் வைத்து எச்சில் தொட்டு ஒட்டினான். அவன் வெட்டி ஒட்டிய உடைந்த எழுத்துக்களை கீழ்க்கண்டவாறு நாம் வாசிக்கத் துவங்கலாம்.

கடவுளும் கந்தசாமி பிள்ளையும் டிராம் வண்டியில் ஏறி வந்து மரண விலாஸில் ரெண்டு கப் காபி அருந்தி விட்டு செல்லாத நோட்டை (100 ரூபாய்) கல்லாவில் இருந்த அகத்திய முனியி

www.padippakam.com



டம் கொடுத்துச் சென்றதால், அவர் 'திறந்து கிடக்குமொரு தேதியில்லா பற்று வரவு நோட்டில்' கடவுள் கணக்கில் ரெண்டு கப் காபி பற்று எழுதி வைத்தார்.

மரணவிலாஸின் பற்று—வரவு நோட்டில் இல்லாத எழுத்தாளர்களே இல்லை. நூற்றாண்டு காலமாகிறது. மரண விலாஸின் நூற்றாண்டு மலர் இனி எத்தனை பதிப்புகள வரப்போகிறதோ. மரண விலாஸிற்கு வராத எழுத்தாளர்களின் எழுத்துகளும் மலரில் இடம் பெறச் செய்வது அகத்திய முனிவனின் கையில்தான் இருக்கிறது. ரோஜாப்பூக்களால் குல்கந்து தயாரிக்கும் படைப்பு அதிகாரிகளுக்கே மரணவிலாஸில் இடம்.

கலைஞர் மு. கருணாநிதியின் வார்த்தையில் சொல்லப் போனால் "என்றே அண்ணா அன்றே சொன்னார். நான் கல்கத்தாவிலே சித்தார்த்த சங்கர்ரேயை பார்க்கப் போன போது 'தம்பி கருணாநிதி, தமிழ் நாட்டிலே அதி நவீன மரண விலாஸ் நடத்திவரும் கோவிந்தசாமியின் இலக்கியப்பணி எப்படி இருக்கிறது' என்று கேட்டார். நான் சொன்னேன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு,

சித்தார்த்த சங்கர் ரே அவர்களே! கோவிந்த சாமியின் இலக்கியப்பணி மரண உற்பத்தியால் இஸ்ரேலையும் விஞ்சும் அளவிற்கு ஆற்றல் மிக்கதாக இருக்கிறது. அதன் துல்லியமான கணக்கை அகத்திய முனிவரிடம் கேட்டுப் பார்த்தேன். அவர் சொன்னார்...கலைஞர் கருணாநிதி அவர்களே !... அச்சா...அச்சா...கோவிந்த சாமியின் இலக்கியப்பணி...மூன்றாவது உலக நாடுகளின் மரண உற்பத்தியை 1.3—1.5 சதவீதம் அதிகப்படுத்தியுள்ளது...1.3 சதவீதத்தை எல்லா இலக்கியவாதிகளும் அந்த 0.2 சதவீதத்தை கோவிந்தசாமியின் "ஏ. கே 47" என்ற நாவல் மட்டும் ஈட்டித் தந்துள்ளது என்பதை உங்களிடம் நான் சொல்லிக் கொள்கிறேன் கலைஞரே என்றார் அகத்திய முனிவர். ஆகவே, "கோவிந்தசாமியின் குதிரை" என்ற நாவலை மரணவிலாஸில் வைத்து வெளியிடுவதற்கு உங்களுக்கு தேதி குறிப்பிடுகிறேன்... நீங்கள் அதை ஒப்புக் கொள்ள வேண்டும்... என்று கூறி உங்களிடமிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் விடை பெற்றுக் கொள்கிறேன். தமிழ் வாழ்க!"

## வெளிநாட்டு வாணிபம்

முசிறியும் கொற்கையும் புகாரும் துறைமுகங்களாகத் திகழ்ந்தன. கரையிலே பல கலங்கள் காத்து நின்றன. பின் அமைப்பியலும் இலக்கியமும் ஊழல்களும் போர்டு மானியங்களும் சர்வதேச கண்ணீரும் கப்பல் கப்பலாக இறக்குமதியாகின.

ஆடுகளும் கோழிகளும் மான்களும் மென்மயிர் தோலும் பதனிட்ட கவிதைகளும் கலப்பு உர நாவல் மூடைகளும் கொண்டு சென்றார் கோடி கோடியாக......சர்வதேசச் சந்தையிலே நமது பொருள் விற்பனையானது. 'அந்நியச் செலாவணி கொண்டு குவித்தனர்.

சிவகாசி காகா பட்டாசுகள் அமெரிக்காவிலே விண்ணை அதிர வைத்தன. கோட்சூட் போட்ட புதிய வணிகக் கூட்டம் அமெரிக்க மேடைகளில் "யேல்" பல்கலைக் கழகத்தில் அண்ணாவைப் போல் முழங்கினர். குட்டி ஜப்பானில் வெளி நாட்டார் உற்ற நண்பனைப் போல் மானியங்கள் வழங்கி குழந்தைகளின் கண்ணீரை தனியே பிரித்து எடுத்து கப்பலிலே கொண்டு சென்றார். கண்ணீர் பணமாக மாறியது. தீக்குச்சி : தீப்பெட்டி : பொன்வண்டு. பணங்காச்சி மரம். திக்கெட்டும் சென்று கலைச்செல்வம் கொன்று குவித்திடுவோம் :

நவீன உல்டா & ரிசிகஞ்சாஞ்சநேயகிரிபரி ஹாச் சார்யகோவ்களுக்கு ... தேவையான வார்த்தை செட்டு : (உ.ம்)

தன்னந்தனியாய் தீவில் உலகப் போருக்காக காத்திருக்கும் ஒருவன்

சகோதரக் கொலையை நேசித்துப் பாடுகிற கீதம்

இசைக் கலைஞர்களை விரட்டியடிக்கிற பிரம்புகள் வெள்ளி நாக்கு

கருப்பு ரத்தம் சொட்டும் இதயம்

மோசாட் இசை ஜன்னலில் வழிய

தூக்குக்கயிறு சுருங்கித் துடி துடித்தது

அவநம்பகம் கிறுக்கிய முகம்

தற்கொலைக் கரங்களின் கண்டுபிடிப்புகள்

நவீன பாதிப்புகளின் ரத்தக்காடு

மேற்கத்திய குற்றங்களின் தொட்டில்

## *மரண விலாஸில் நடந்த நிகழ்ச்சிகள்:*

| சிறப்புப் பேச்சாளர் பட்டியல் | Words |
|---|---|
| 1 தீப்பொறி ஆறுமுகம் எழுத்தாளர் கோவிந்தசாமி | × × × |
| 2 வைரமுத்து படிமங்கள் | × × × |
| 3 சகோ. தினகரன் லவ்லவ்லவ்வு | × × × |
| 4 வாரியார் கி.ரா. | × × × |
| 5 வானம்பாடிகள் முகில்கள் | × × × |
| 6 ஸ்பான்சர் புரோகிராம் | × × × |
| 7 பட்டிமன்றம் நவீன இலக்கியம் | × × × |
| 8 நாவல் சிழார் அய்.மா.பா. | × × × |

நமக × நமக × நமக × ஆமென் × ஆமென் × ஆமென் × அல்லேலூயா × அல்லேலூயா × அல்லேலூயா × மந்திர உச்சாடணம் ஆஷா ஆஷா ஆஷா ஆஷா ஆஷா ஆஷா ஆஷா இசை ரிங் ரிங் ரிங் ரிங் ரிங் ரிங் ரிங் ரிங் ரிங் ரிங் வார்த்தைகள், வண்ணங்கள், குறில், நெடில், நாலடியார், ஈரடிக் குறள் கடல் நடுவே 130 அடி வள்ளுவர் சிலை. வார்த்தைகள் சொற்கள் பாராக்கள் முன் பாரா பின் பாரா அத்தியாயங்கள் எழுத்துக்கள் புள்ளிகள் காமாக்கள், கோடுகள் கோலங்கள் அதிர்வு விழிப்பு முழக்கம் வார்த்தை நடுவில் சப்பணமிட்டு அமர்ந்து அகராதி கோர்த்துக் கொண்டிருந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் காலம் கிழித்த புஸ்தகங்கள், காலம் தின்றது கறையான் தின்றது, நதியில் எதிர் நீச்சல் போட்ட சுவடிகள் ''அவருடைய வார்த்தையில் சொல்லப் போனால்'' வஞ்சப் புகழ்ச்சி, சிலேடை, பெரியார் சீர்திருத்த எழுத்து, தனித்தமிழ், ஜாடை மொழி.

தட்டெழுத்து, Xerox, Fax, போட்டோ கம்போசிங், லேசர், அச்சுக் கோர்த்தது, புரூப் பார்த்தது, புஸ்தகக் கடையில் புஸ்தக திருடனின் கண்ணில் பட்ட வார்த்தைகள். தாள் பொருக்கி. எந்திரங்களின் முழக்கம். கம்யூட்டரில் புகுந்த நாற்பத்தி எட்டு கோடி வார்த்தைகள்.

கொன்ற சொல்

எழுத்தாளர் பாணி : தட்டு—தீனி—விவாதம்

நண்பனுக்கு எழுதிய கடிதத்தில் அவனுக்கு சொல்ல முடியாமல் போன வார்த்தைகள்

எல்லா வார்த்தைகளும் இறந்து போக, வெறுமையில் வார்த்தையை தேடிச் சென்ற வாயில் எச்சில் ஒழுகும் முட்டாளிடம் அவர்கள் கேட்டு நச்சரித்த கேள்விகள். பாமரனை தூக்கில் மாட்டியபடியே எழுத்தாளர்களும், கல்விமான்களும் கேட்டது.

''உன் கடைசி வார்த்தை என்ன?''

கழுத்து நெரிபடும் போது கயிறு தடித்து தடித்து கனத்து கொல்லத் துடித்த போது இடைவெளிக் குள் ரத்த நாளங்கள் புடைத்து அந்த ''ஒரு வார்த்தை'' அவன் இருந்த அடையாளமாக... அவன் நிழலைப் போல தோண்டத் தோண்ட வாராததாக அவனது குறியீடாக மாறிப் போயிருந்தது. நாற்பத்தி எட்டுக் கோடி வார்த்தைகள் மரணமடைந்த பின்னும் அந்த ''வார்த்தை'', இன்னொரு கதைக்குள் ஓடி ஒளிந்து கொண்டது. ○

*பின் இணைப்பு :*

*மரணவிலாஸின் 100 ஆண்டு உத்தேச ஆஸ்தி-பொறுப்பு பட்டியல் :*

*ஆடிட்டிங் : பால்வண்ணம் பிள்ளை* B. A.

| பொறுப்பு | வார்த்தை | சொத்து | வார்த்தை |
|---|---|---|---|
| கம்யூனிஸ்ட் கட்சி மேனிஃபஸ்டோவில் உள்ள வார்த்தைகள் | 50,00,000 | பல கொடிய எண்ணங்களோடு உள்ளே அமர்ந்திருக்கும் பயங்கரவாத வார்த்தைகள் | 12,00,000 |
| திருடப்பட்ட காதல் கடிதங்கள் | 50,00,000 | கடிதங்கள் மூலம் வெளியிட்ட மிரட்டல் | 13,00,000 |
| அழிந்த நகரத்தில் இருந்த வார்த்தைகள் | 20,00,000 | துவைத்து பிழியப்பட்டது | 20,00,000 |
| தலைவர்களால் மூளைச்சலவை செய்யப்பட்டது | 10,00,000 | கந்தலானாலும் கசக்கிக் கட்டியது | 10,00,000 |
| தவைர்களை மூளைச்சலவை செய்த தத்துவங்கள் | 60;00,000 | இரும்பு சொற்கள் | 10,000 |
| கவியரங்க தகரத்தில் விழுந்த வார்த்தைகள் | 40,00,000 | உலோகச் சொற்கள் | 6,000 |
| ஏ. கே. 47 நாவலில் | 1,00,000 | துருப்பிடித்த சொற்கள் | 25,000 |
| பஞ்சாங்கம் | 1,00,000 | பயத்தால் தடதடக்கும் வார்த்தைகள் | 30,000 |
| பஸ்ஸில் செலவு செய்தது | 3,00,000 | சொத்தின் பேரில் கிரயப் பத்திரத்தில் உள்ள வார்த்தைகள் | 60,000 |
| சண்டையில் | 12,00,00,000 | தற்கொலையை தூண்டும் வார்த்தைகள் | 70,000 |
| **வெளி நாட்டு மானியம் :** | | நடத்திய பத்திரிகையில் சொந்தமாக எழுதியது | NIL |
| போர்டு பவுண்டேஷன் | 13,00,00.000 | தன் பர்ஸிலிருந்து இலக்கியத்திற்கு கொடுத்தது | NIL |
| ஜன சேவா சமிதி | 100,00,000 | மற்றவர்களிடமிருந்து பிட்பாக்கெட் | 1,00,00,000 |
| சோசியல் சர்வீஸ் சொசைட்டி | 1,00,00,000 | படித்ததன் மூலம் பெற்ற வார்த்தை பயிற்சி, மனப்பாடம் யோகா, ஒப்பித்தல், திருடுதல் | 2,00,00,000 |
| மனதநேய கூட்டமைப்பு லண்டன் | 50,00,000 | அழிக்கப்பட்ட காதல் கடிதங்கள் | 10 |
| உலக குழந்தைகள் நல வாழ்வு வாசிங்டன் | 7,00,00,000 | காதலியின் கடைசிக்கடிதமும் | 1 |
| புதிய நாவல்கள் | 50,00,000 | அவள் கசக்கி எறிந்த வார்த்தைகளை மென்று தின்றது | 10,000 |
| புதிய சிறுகதைகள் | 10,00,000 | | 3,57,11,011 |
| நவீன கவிதை | 10,00,000 | 100 ஆண்டுகால நிகர நஷ்டம்(—) | 44,42,88,989 |
| பேசிப் பேசி பேசி பேசி பேசி | 10,44,86,000 | | |
| எழுதிய கடிதங்கள் | 1000 | | |
| எழுதிக் கொடுத்தது | 1000 | | |
| வந்த கடிதங்கள் | 1000 | | |
| நண்பன் ரூமில் குப்பைத் தொட்டியில் எடுத்த வார்த்தைகள் | 1000 | | |
| 48 கோடிவார்த்தைகளுக்கு குறுமலை சுந்தரனார் எடுத்துக் கொண்டது புதுமைப்பித்தன் முதல் கோவிந்தசாமி வரை | 10,000 | | |
| | 48,00,00,000 | | 48,00,00,000 |

www.padippakam.com

# ( அ வ ள் )

## அடைப்புக்குறிகளுக்குள் அகப்பட்ட வாழ்க்கை

ஆக்கம் : ஜனட் டென்ச் தமிழாக்கம் : சுதாகுமாரசாமி

என் நண்பன் ஒரு முறை, பெண்களின் சம்பாஷணையை 'பெட்டைக்கதை' என்ற சொற் பிரயோகம் மூலம்' பெண்கள் கூடி உரையாடும் போது ஆண்களின் தோற்றம், வசீகரம் பற்றி மட்டுமே உரையாடுகின்றனர் என்ற தன் சொந்த அபிப்பிராயத்தை தெளிவாக வெளிப்படுத்தினார். நானும் என் தோழிகளும் அவரின் அறியாமையை கிண்டல் செய்தோம்; ஓரளவு கசப்புத் தன்மையையும் உணர்ந்தோம். ஆனால், பெண்கள் கூடி எதைப் பற்றி உரையாடுகின்றனர் என்பது குறித்து ஆண்கள் அறியாதவர்களாயிருக்கிறார்கள் என்றே கூற வேண்டும். வம்பளப்பவர்கள், அதிகம் உரையாடுபவர்கள் என்று வர்ணிக்கப்படும் பெண்களின் சம்பாஷணையை அவதானித்தால் அது ஆண்களின் கருத்துக்கள், தீர்மானங்கள், திட்டங்கள் பற்றி செய்தியில், பத்திரிகை, புத்தகங்களில் வெளியிடப்பட்டவை குறித்தே சுற்றிச் சுற்றி வருவதை அவதானிக்கலாம். ஏன், பெண்கள் என்ன சிந்திக்கிறார்கள், என்ன தேவைகளைக் கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றியும் ஆண்களே நிறைய கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் வெளியிடுகிறார்கள்.

உதாரணமாக ''வேலை செய்கிறீரா'', என்ற கேள்விக்கு காலை 5 மணியிலிருந்து படுக்கைக்கு செல்லும் இரவு 11 மணி வரை ஓயாது வீட்டில் குழந்தைகள் கணவனுக்குத் தேவையானவற்றை கவனிக்கும் ஓர் பெண்ணின் பதில் ''இல்லை'' என்றே இருக்கும். ஒரு வீட்டை நடத்தி, குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்பி பாடங்களை சொல்லிக் கொடுத்து, சமையலை கவனித்து, வீட்டைத் துப்புரவாக்கி, பெற்றோர் அல்லது நோய்வாய்ப்பட்டிருக்கும் இனத்தவரைக் கவனித்து, சமூக இன்ப துன்பங்களில் பங்கெடுத்து ஓயாது உழைப்பாள். ஆனால் கேட்டால் 'வேலை' செய்வதில்லை என்பாள். சில வருடங்களுக்கு முன் நான் மேற்காபிரிக்க கிராமங்களில் இருந்தும், மேற்கு நாடுகளில் இருந்தும் பெண்களைச் சந்தித்த போது, ''நாளந்தம் என்ன செய்வீர்கள்'' என வினவிய போது ''ஒன்றுமில்லை'' என்று பதிலளித்தனர். அவர்களைப் பொறுத்த வரையில், ஊதியம் அற்ற, பொருளாதார உற்பத்தியில் கணிக்கப்படாத அவர்களின் நாளாந்த உழைப்பு ஒன்றுமில்லைதான். மூன்றாம் உலக, அல்லது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பெண்களின் உழைப்பு கணிப்பு பெறாத நிலையில், முக்கியத்துவம் மறுக்கப்பட்ட உழைப்பாக உணரப்படுகிறது.

இன்றைய உலகில் பெண்கள், ஏனைய பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் அறைகூவல் விடுக்கிறார்கள். பெண்கள் பற்றி கூறப்படும், கூறாமல் விடப்படும் கருத்துகளுக்கு செவிமடுக்க. இதன் விளைவாக சொற்பிரயோகங்களில் சில மாற்றங்களை அவதானிக்கலாம். மரபு ரீதியாக 'அவன் என்று பெண்பாலரை ஒதுக்கும் சொற் பிரயோகம் மாறி, 'அவன்(ள்)', 'ஆண் / பெண்' என்று குறிப்பிடப்படுவதை அடிப்படையாக வைத்து நோக்கின், சமூக கண்ணோட்டத்தில் ஆண் இருப்பு மறுக்கப்பட முடியாத ஒரு நியமமாகவும், பெண் பின் யோசனையாக உணரப்பட்ட இரண்டாம்தர இருப்பாகவும், அடைப்புக் குறிகளின்றி குறிப்பிடுமளவுக்கு முக்கியத்துவம் பெறாதவளாகவும் கணிக்கப்படுவதை உணரலாம்.

நாம் சரித்திர ஏடுகளை மீள வாசிக்கையில் அவை முழுக்க முழுக்க ஆண்களின் சாதனைகள் பற்றியும், ஆண்கள் முக்கியமெனக் கருதிய விடயங்களைப் பற்றியும் நிறைந்திருப்பதை காண்கிறோம். ஒரு குறிப்பிட்ட காலகட்ட வாழ்க்கை முறை பொருளாதார பின்னணி, அரசியல் சூழல் பற்றிய சரித்திர குறிப்புக்களில் பெண்களின் பிரச்சனைகள், சமூக அரசியல் துறையில் பெண்

www.padippakam.com



களின் பங்கு, அவர்களின் கல்வி, தொழில் வாய்ப்புக்கள், பெண்களுக்கிடையிலான தொடர்புகள், சமூக குழுக்கள், பிரசவம், நோய்வாய்ப்படல் போன்ற அம்சங்களை எதிர்கொண்ட முறைகள் பற்றி குறிப்பிடப்படாமலோ அல்லது ஓரிரு பக்கங்களில் மேலோட்டமாக குறிப்பிடப்படுதையோ அவதானிக்கலாம்.

மேலைத்தேய கலாச்சாரத்தில் ஆதிக்கம் செலுத்தும் கிறிஸ்தவ மரபில் இருவகைப்பட்ட பெண்கள் வர்ணிக்கப்படுகிறார்கள் — வகைப்படுத்தப் படுகிறார்கள். ஒன்று ஏவாள் மற்றையது மரியாள். ஏவாள்-சிருஷ்டிப்பின் முதல் பெண்ணாகவும், சாத்தானால் ஏவப்பட்டு இறைகட்டளையை மீறி ஏதேன் தோட்டக் கனியை புசித்ததோடு மட்டுமல்ல ஆதாமுக்கும் அதைக் கொடுத்து பாவத்தை உலகிற்கு அறிமுகம் செய்தவளாக வர்ணிக்கப்படுகிறாள். மரியாளோ, இறைமகனைப் பெற்றெடுக்கும் பாக்கியசாலியாக, தெரிந்தெடுக்கப்பட்டவளாக, இறைவன் கட்டளைக்கு கீழ்ப்படிந்தவளாக வர்ணிக்கப்படுகிறாள். ஏவாள் பாவத்தை அறிமுகம் செய்தாள்; மரியாள் இந்தப் பாவத்திலிருந்து மனித குலம் மீள வழிகாட்டிய ஞான குருவைப் பெற்றெடுத்தாள்.

அண்மையில் குவீபெக் மாகாண நீதிபதியொருவர் நீதிமன்றத்தில் பின்வருமாறு கூறினார்: ''விதிகள், சட்டங்கள் பெண்களைப் போன்றவை; மீறப்படவும், எல்லை மீறவுமே அவை ஆக்கப்பட்டன'' (Rules are like women; they are made to be violated) இவர் பிரெஞ்சு மொழியில் இக் கூற்றைக் கூறியதும், பிரெஞ்சு மொழியில் 'violate' என்ற பதம் 'கற்பழி' என்ற கருத்தை தாங்கி நிற்பதையும் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இவரது இக் கூற்று வெகு சாதாரணமாக, நடைமுறை உண்மையாக கூறப்பட்டமை பரவலாக உலகெங்கும் பெண்கள் அனுபவிக்கும் அவல நிலையை சுட்டிக்காட்டுகிறது எனலாம்.

'Women are made...' என்ற கூற்றின் பின்னணியில் வேறொருவர் தேவைக்காக சிருஷ்டிக்கப்பட்டவளே பெண் என்ற பொருள் தொக்கி நிற்பதைக் காணலாம்.

உண்மையில், பெண்ணின் சமூக அந்தஸ்து ஆணொருவனுடன் அவள் கொண்டுள்ள உறவின் அடிப்படையிலேயே கணிக்கப்படுகிறது. நாங்கள் ஒருவரின் மகளாக, இன்னொருவரின் மனைவியாக, தாயாக வரைவிலக்கணம் பெறுகிறோம். பொதுவாக, பின்னணியில் செயலாற்றுபவர்களாக, சாதனைகள் புரியும் ஆண்களின் சிறப்பான ஆக்கங்களுக்கு உதவும் மருந்துவச்சிகளாக மறைவில் தொழிலாற்றுகிறோம். இன்றும் பல நூல்கள் அதை தொகுக்கவும், ஆக்கவும் உதவிய பெண்களின் பெயரை நன்றியுரையில் குறிப்பிட்டாலும், நூலாசிரியர் பெயர் பெரும்பாலும் ஓர் ஆணினுடையதாக இருக்கிறது.

'Women are made to be...' சுயமாக இயங்கும் அனுமதி இன்றி, மரியாள்போல் மௌனியாக கீழ்ப்படியும் பாத்திரத்தை ஏற்று வாழ்க்கை நடத்தவே எதிர்பார்க்கப்படுகிறோம். எமது குறுகிய சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சிறு வட்டத்துக்குள்ளேயே எமது கனவுகளையும், செயல்களையும், குறுக்கிக் கொள்ள பெண்களாகிய நாம் பயிற்றப்பட்டு விட்டோம். இன்று பெண்கள், ஆண்களுக்கு மட்டும் உரியவை என்று முன்பு கருதப்பட்ட சில துறைகளில் பங்கு பற்ற அனுமதிக்கப்பட்டாலும், பழைய மனோபாவங்கள் மாறாமல் நிலைத்து நிற்பதை அவதானிக்கலாம். உதாரணமாக அதிகாரத்தை பிரயோகிக்கும் பெண், பெண்மையை (மென்மை) இழந்தவளாகவும் அதே நேரம் அதிகாரம் ஆணின் ஆண்மையை வலுப்படுத்துவதாகவும் கருதப்படுகிறது.

'Women are made to be raped......' தந்தை, கணவன் சில சமயம் மகன் ஆகியோரால் துன்புறுத்தப்படும் பெண்களின் அவலக் குரல் எமக்குக் கேட்பதில்லை. ஏனெனில் உறவினரின் இந்த துன்புறுத்தலால் பெண் கூனிக் குறுகி நிற்கிறாள்; குரல் கொடுக்கத் துடிக்கிறாள்; ஆனால் மௌனத்தைக் கடைப்பிடிக்கிறாள். தம் சிறு பிராய வன்முறைச் சூழலின் பிரதிபலிப்பாகவோ, வாழ்க்கையின் ஏமாற்றங்கள், தோல்விகளை எதிர்கொள்ள முடியாத காரணத்தாலோ ஆண் தனக்கு நெருங்கிய உறவிலிருக்கும் பெண்களை துன்புறுத்துகின்றான். அன்னியனொருவனால் கற்பழிக்கப்படும் பெண், தந்தை, மாமா, பெரியப்பா போன்ற உறவினரால் பாலியல் வன்முறைக்கு ஆளாகும் சிறுமி, கணவனால் அடிக்கப்பட்டு உடல் காயங்களுடன் நிற்கும் மனைவி ஆகிய அனைவரும் அவமானத்

www.padippakam.com



தால் குறுகி ஊமையாகிவிடுகின்றனர். இதற்கெல்லாம் காரணம், ஆண்கள் கொண்டுள்ள அதிகாரமும், சமூகம் இவர்களுக்குக் கொடுத்த கவசமும் தான். ஆனால், சமூகம் அத்துடன் நிற்காது பாதிக்கப்பட்ட பெண்ணின் குறை கண்டு அவளையே அதற்கு காரணியாக தீர்ப்பளிக்கிறது.

ஆகவே, இதற்கெல்லாம் அடிப்படை ஆண்-பெண்களுக்கிடையிலான அதிகார ஏற்றத்தாழ்வென்றே கூறவேண்டும். பொருளாதார, அரசியல் ரீதியாக வரலாற்றில் ஆண்களே மேலதிக அதிகார உரிமைகள் கொண்டுள்ளார்கள். ஆகவே, இக்கட்டத்தில் ஆண், பெண்களுக்கிடையிலான உறவு முறைகளின் ஏற்றத் தாழ்வை மீளாய்வு செய்வதில் தயக்கம் மட்டுமல்ல, ஓரளவு எதிர்ப்பும் ஆண்கள் மத்தியில் நிலவுகிறது எனலாம். ஆனால், இதே போன்ற தயக்கமும், எதிர்ப்பும் சில பெண்கள் மத்தியிலும் நிலவுவதை நான் அவதானிக்க முடிந்தது. சுய நம்பிக்கை வலுப்பெறாத பெண்கள் நடைமுறையிலுள்ள ஏற்றத்தாழ்வான உறவு முறையில் ஓரளவு காப்புணர்ச்சியை அனுபவிக்கிறார்கள். எம்மிடம் சிறிதளவு இருப்பின் மாற்றத்தில் முழுவதையும் இழந்துவிடாது, கைவசம் உள்ள சிறிதளவையே காப்பாற்ற முயல்கிறோம். இதில் வியப்பொன்றுமில்லையே. ஆகவேதான் கனடாவில் 'உண்மையான பெண்' என்ற ஒரு குழு இயங்கிவருகிறது. இக் குழு பெண்ணுக்கு மரபுரீதியாக ஒதுக்கப்பட்ட குடும்ப நியமங்கள், விழுமியங்களை போற்றிப் பாதுகாப்பதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்குகிறது.

புதுமை, அதன் அன்னியத்தால் ஓரளவு அச்சமூட்டுவதாக உணரப்படுவது உண்மையே. எனினும், ஆண்-பெண்களுக்கிடையிலான உறவு முறையின் அடிப்படை ஏற்றத் தாழ்வை மீளாய்வு செய்வது எல்லோருக்கும் பயனுள்ளதாய் அமையும். பொதுவில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் ஒழுங்கமைப்பு செய்வதில் வேற்றுமை காணப்படுகிறது; ஆண்கள் வேற்றுமையை எதிர்கொண்டு (confront) செயல்பட, பெண்கள் வேற்றுமைகளில் ஒருங்கிணைவை (consensus) நாடி செயல்படுகிறார்கள். இதனடிப்படையில், பெண்கள் கடைப்பிடிக்கும் தீர்மானங்களை முன்வைக்கும், ஒழுங்கமைப்பு செய்யும் முறைகளை அரசியல் துறையில் கையாண்டால் எல்லோரினதும் கருத்துக்களும் கூடிய கவனம் பெறும் ஒரு சமுதாயமாக பரிணமிக்க வாய்ப்புண்டு. இவ்வாறு செயல்பட்டால் நாம் போரை கூட தவிர்க்கலாம்; ஆண் என்றால் அதிகாரம் கொண்டவன், பலம் வாய்ந்தவன் என்ற சமூக எதிர்பார்ப்புக்களால் சுமத்தப்படும் 'ஆண்மைச்" சுமையை ஆண் ஓரளவு தளர்த்தி, நிம்மதி காணலாம். முதலில் ஒருவரோடொருவர் உரையாடி, சில சமயம் கண்ணீர் சிந்தி, சமநிலையில் பிரச்சனைகளை அணுகினால் எதிர் காலத்தில் வன்முறைகளையும், அடக்கு முறைகளையும் கைவிட வழி பிறக்கும்.

இவை யாவும் நடக்கும் இடைக்காலத்தில், அடைப்புக் குறிகளைத் தகர்த்து செவிமடுப்போம்!

○ ○ ○

www.padippakam.com

சிறு கதை

# வேலையில்லாதவன்

சரண்யா

இந்த இடத்தில் நின்று கொண்டு பார்க்கும் போது சிரிப்பாக வருகிறது. மாலை நான்கு மணிக்கு வேலை முடிந்து போகும் போது எல்லோருடைய முகங்களும் விரிந்து பிரகாசமாக ............காலையில் இந்த மந்தஹாசங்களெல்லாம் எங்கே போயின? இப்போது மட்டும் ஏதோ எல்லாச் சுமைகளையும் இறக்கி வைத்துவிட்ட மாதிரி! இந்த அபார்ட்மெண்டிற்கு பால்கனி இல்லையேயென்று நான் விசனப்பட்டதுண்டு. ஆயினும் குறைந்த பட்சம் பெரியதொரு கண்ணாடி ஜன்னலாவது இருக்கிறதே. இதற்குள்ளால் எல்லோருடைய முகங்களையும் ஆராயலாம். இந்தக் கையகலப் பரப்புக்குள் தான் எத்தனை வேறுபாடுகள்? பாவங்கள்? எல்லோரும் ஒரே மாதிரியான தற்காலிகத் திருப்திகளில் அவசர அவசரமாக - அடுப்பில் பாலை விட்டு மறந்து போய் வந்தவர்கள் போல, ஏதோ இவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பு வீடு போய்ச் சேரா விட்டால் சுவர் மணிக்கூட்டில் ''டைம்பாம்'' வெடித்துவிடும் என்பதே போல்......பொய், பொய், பொய்! இந்த இரண்டரை வருடங்களாக நானும் இதே பொய்களைச் சுமந்து கொண்டு அலைந்தவன்தானே; அப்போதெல்லாம் இந்த இழவு எனக்குப் புரியவில்லையே! எதையும் அதனின்றும் விலத்தி வந்து பார்க்கும் போதுதான் புரிகிறது.

கடிதங்களும் இப்போது வருவதில்லை. அப்பாடா, ஒரு பெரிய நிம்மதி! எவ்வளவு நாளைக்குத்தான் வாழைப் பாத்தியையும், துலாக்கிணறையும், கறையான் பிடித்த, கிடுகு வேலிகளையும் சிலாகித்துக் கொண்டும், மண் வாசனை மண் வாசனையென்று புலம்பிக் கொண்டுமிருக்க முடியும்? கடிதங்கள் மட்டுமென்ன? முதலில் ஒரு நாலைந்து வரி சந்தோஷமாக இருக்கும். மீதி இரண்டரை பக்கமும் வேதாளமும், முருங்கை மரமும் தானே? இங்கு மட்டும் என்ன வாழ்கிறது? போன கிழமை பகல் ஒரு மணி இருக்கும். அறைக்குள் வெக்கையாக இருக்கிறதென்று ஜன்னலையும், பூச்சிபூரான் ''செக்கியுரிட்டி கேற்'' ஐயும் நன்கு திறந்துவிட்டுப் படுத்துத் தூங்கிவிட்டேன். சிறிது நேரத்தால் முகத்திலும், உடலிலும் யாரோ மெதுவாகத் தடவிவிடுவதைப் போன்ற தொரு உணர்வு வர யாரென்று பார்த்த போது இந்தக் கட்டடத்திற்கு முன்னால் நிற்கிற ''மேப்பிள்'' மரக்கிளையொன்று ஜன்னலூடாக வந்து என்னை ஸ்பரிசித்துக் கொண்டிருக்கிறது. ''மேப்பிள்'' இலைக்குப் பதிலாக ''டாலர்'' நோட்டுக்கள். கொஞ்ச நேரம் எனது ''ஜெனிற்றர்'' தம்பதிகளின் முகங்கள்......என் ''ஜீயான் தலோன்'' சந்தையில் உருளைக் கிழங்கு விற்கும் பிரெஞ்சுச் சிறுக்கியின் முகம் உட்பட வந்து போயின. திடுக்குற்று கண் விழித்துப் பார்த்தால் மரம் அப்படியே நிற்கிறது. இப்பவும் அது அப்படியேதான் லேசாகக் காற்றில் அசைந்தபடி சிரிக்கிறது.

இப்போதும் நான் இதே இடத்தில் நின்று கொண்டு அந்த மரத்தையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே நிற்கிறேன். அந்தக் கனவு மட்டும் உண்மையிலேயே நிகழ்ந்தால் எவ்வளவைப் பிடுங்கியிருப்பேன்? எவ்வளவைச் செலவழித்துத் தொலைத்திருப்பேன்? ஆனால் அப்போதும் இலையுதிர் காலத்திற்கெனக் கொஞ்சமும் சேமித்து வைக்கத் தெரியாது மீண்டும் யாரிடமாவது கடன்பட்டுக் கொண்டு தானிருப்பேன்.

நெஞ்சுக்குள் கிடந்து அரித்துக் கொண்டிருப்பவைகளையெல்லாம் எங்காவது இறக்கி வைத்துவிட்டுச் சிறிது ஆசுவாசப் படுத்திக் கொள்ளலாமென்றால் எங்கே வைப்பது? வரதனிடம் சொல்லலாமா? முடியாது. ஏதோ நான் அவ்வப்போதில் எழுதிக் கிறுக்கும் கவிதைகளை வாசித்துவிட்டு எனக்குள்ளே ஏதோ பரப்பிரம்மம் இருக்கிறதென்று வார விடுமுறைகளுக்குத் தவறாமல் இங்கு வந்து இரண்டு ''கேஸ் பியர்'' அல்லது ஒரு 1.4 லிற்றர் என்று பகிர்ந்து

கொண்டு பதிலாகக் கொஞ்சம் ஞானமும் பெற்றுக் கொண்டு போகும் எளிய ஜீவன்! அவ்வப்போதில் கைமாற்றுக்களும் தந்து அருளுபவன். எவ்வளக்கெவ்வளவு நான் எழுதுவது விளங்காமல் விடுகிறதோ அவ்வளவுக்கு என் மீது பக்தி பூண்டவன். என்றைக்காவது ஒரு நாளைக்கு இவனுக்கும் எல்லாம் விளங்கும். அப்போது காலீ போத்தலை உடைத்துக் கொண்டு வருவான். நான் இதே இடத்தில்தான் நின்று கொண்டிருப்பேன்.

இதேன் இந்தத் தேக்கம், ஏனிந்தந் தொய்வு, சலிப்பு? பேசாமல் வெறும் கவுண்டமணி, செந்திலோடு திருப்திப்பட்டுக் கொண்டிருந்திருக்கலாம். அண்ணாந்து பார்த்துப் பார்த்து வெறுமைகளுக்குள் என்னைத் தொலைத்ததுதான் மிச்சம். வித்துவேனியா எக்கேடு கெட்டுப் போனால் எனக்கென்ன? எத்தியோப்பியா எரிந்து போனாலும் எனக்கென்ன குடி முழுகிப் போனது?

வெளியே இப்போது பலமாகக் காற்று வீசுகிறது. மரக்கிளைகள் பேயாட்டம் போடுகின்றன. கண்ணாடி ஜன்னல் 'பட பட' வென்றடித்துக் கொள்கின்றன. முடமாகிப் போன உணர்வுகளுடன் எங்கெல்லாமோ அலைந்து வேலை தேடித் தேடி எதுவுமே சரிப்பட்டு வரவில்லை. வாடகையைப் பற்றிய பயங்கள் பிடரி பிடித்துத் தள்ளும் போது வேலை வாய்ப்புக்களெல்லாம் அத்துவானக்காட்டுக்குள் போய் ஒளித்துக் கொள்கின்றன. இந்த அந்தகாரங்களினின்றும் விடுதலை கிடைக்கும், கிடைக்குமென்றால் வெளிச்சத்திற்கு எங்கே போவது?

தெருவில் சன நடமாட்டம் குறைந்துவிட்டது. அந்திப் பொழுதின் அழகையெல்லாம் தொடர்மாடிக் கட்டடங்கள் பிடித்து விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கிறது. உதயத்திலிருந்து அஸ்தமனம் வரையில் எல்லா அழகையும் கெடுத்த குட்டிச்சுவர்கள். பக்கத்து அபார்ட்மெண்ட் திருநாவுக்கரசு அண்ணை ''திண்டது செமிக்கவும், காத்து வாங்கவும்'' போய்க் கொண்டிருக்கிறார். அடிக்கிற பேய்க்காற்றில் உதிர்ந்தது போக எஞ்சிய சொற்ப அல்லது ''எல்லிப் போல'' மயிரும் குலைந்து போய் விடாதிருக்க பிரம்மப் பிரயத்தனப்பட்டு மிக லாவகமாக நடந்து போகிறார். எப்படியும் அண்ணாந்து என்னைப் பார்க்க மாட்டாரென்ற நம்பிக்கையில் நின்ற இடத்திலேயே நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். பார்த்துத் தொலைத்தாலோ என் கழுத்திலிருந்து இரத்த ஆறு ஓடும். சீ! வெறுப்பாக இருக்கிறது. பேசும்போதில் ஊரின் மகத்துவங்களையும், வாழ்க்கைத் தரத்தையும் சிலாகித்துக் கொள்கிறபோதே உள்ளூர எவ்வளவு பம்மாத்துப் பண்ணிக் கொண்டிருக்கிறார் என்பது படு துல்லியமாகத் தெரியும்.

இந்த நாட்டின் லௌகீகங்களுக்குச் சபலப்படும் அற்பப்பிறவி. இங்கும் அங்கீகரிக்கப்படாது ஊரிலும் ஒத்துப் போகாது நட்ட நடு வழியில் அரைக்காற் சட்டையுடன் நின்று கொண்டு Hamburger இற்கு வறுத்த மிளகாய்த்தூள் போட்டுப் புரட்டும் குழப்பவாதி.

ஏன் என் சிந்தனைப் போக்கு இப்படிப் போகிறது? எதன் மீதும் ஒரு வெறுப்பு, எவர் மீதும் ஒரு எரிச்சல்? மனித நேயமென்று சொல்லிக் கொண்டே மனிதனை வெறுக்கிறேனா? எனக்கு மட்டும் இங்கே எதனோடு ஒத்துப் போகிறது? வேலையில்லை, கிடைக்கிற வேலைகளோடும் ஒத்தோட முடியவில்லை. பணம் ஒரு தலை போகிற பிரச்சினை. அது எல்லாம் சுமுகமாகி விட்டால் நானும் நிலைப்பாடுகளைப் பற்றிச் சிந்திப்பேனா? எப்போது பார்த்தாலும் மூளைக்குள் ''கிர் கிர்'' என்று ஏதோ ஒன்று அதிர்வுகளுடன் சுற்றிக் கொண்டேயிருக்கிறது. கண்ணுக்குப் புலனாகும் எல்லாவற்றையும் மௌனமாக விமர்சித்துக் கொண்டிருப்பதாற் போலும்! இருபது, முப்பது வருடங்களுக்கு முன்பு பார்த்த, பாதித்த முகங்கள்கூட சம்பந்தா சம்பந்தமில்லாது வந்து இந்த சுழற்சியில் சிக்குண்டு மறைகின்றன, ஆட்டுக் கல்லில் மாவாட்டும் போதில் எழுந்தும், விழுந்தும் நெரிபட்டுக் கொண்டிருக்குமே அது போல.

அறைக்கதவு பலமாகத் தட்டிக் கேட்கிறது. எனது நாடித்துடிப்பைக் கூட அடக்கி வைத்துக் கொண்டு உன்னிப்பாகக் கேட்கிறேன். சரிதான்! என்னுடைய அறைக் கதவுதான். சந்தேகமேயில்லை, மீண்டும் சற்றே பலமாகத் தட்டப்படுகிறது. கதவைத் திறப்பதா விடுவதா என்று தீர்மானிப்பதற்குள் சத்தம் நின்று விட்டது. மீண்டும் தட்டப்படுகிறது. செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு நடமாட்டத்தை அனுமானிக்கிறேன். இப்போது தட்டப்படுவது

www.padippakam.com



பக்கத்து அறைக் கதவு என்று படுகிறது. ஓகோ! இப்போது எல்லாம் நன்கு புரிகிறது. மாதம் முடிந்து ஐந்தாந் திகதியாகி விட்டதால் வாடகைக்காக ''ஜெனிற்ரர்'' கிழவன்தான் 'இதயக் கபாடங்களை'த் தட்டிக் கொண்டிருக்கிறான். அப்படியே உறைந்து போய் நிற்கிறேன்.

O O O


# தர்சன் வீடியோ விஷன்



● உங்கள் திருமண வைபவங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகளிற்கு தேவையான பூமாலை, சடை நாகம், சரம் போன்றவற்றை மிகக் குறைவான விலையிலும் அழகான முறையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

● திருமணம், பிறந்த நாள் மற்றும் எந்தவொரு வைபவத்திற்கும் தரமான சிறந்த வீடியோ படப்பிடிப்பிற்கும் இன்றே நாடுங்கள்.

● **Video Transfer Available. PAL / SECAM / NTSC**
**(Any system to any system)**

மேலதிக தொடர்புகட்கு :- தர்சன் வீடியோ விஷன்

**SRI :- 321-8298**

www.padippakam.com



# முகம் தேடும் மனிதன்

குமார் மூர்த்தி

மாதம் தேதி நினைவில் அழிந்து போன எப்போதோ ஒரு நாள். ஆனால் அது மழைக்காலம் தொடங்கி சிறிது நாள் கடந்து விட்டிருந்தது. வானம் எங்கணும் சாம்பல் பூத்த மேகங்கள் ஒன்றையொன்று நெருக்கி, கடா முடா வென்று உறுமிக் கொண்டிருந்தன. சூரியன் பூமியை எட்டிப் பார்க்க பெரும்பாடு பட்டுக் கொண்டிருந்தான். ஆனால் மேகங்கள் கொஞ்சமேனும் இரக்கமில்லாமல் கர்வத்தோடு மறைத்துக் கொண்டு நின்றன. அடாவடியான இந்த செயலுக்குப் பயந்து சூரியன் ஊமையாகிக் கனன்று கொண்டிருந்தான். அந்த பிரதான தெரு நீளத்துக்கு, மழை வெள்ளம் நெடுஞ்சாண் கிடையாக வியாபித்துக் கிடந்தது. மாட்டு வண்டில்கள் போகும் போது அதன் சக்கரம் அதிகமாக நீரில் அமுங்குவதும், அதனால் மாட்டுவால் வரை நீர் முட்டி அது வாலைத் தூக்கி வைத்துக் கொள்வதையும் பார்க்கும் போது நீண்ட காலத்துக்கு வீதிகள் செப்பனிடப் படாமல் இருக்கின்றன என்பதை ஊகித்துக் கொள்ள முடியும். பாதசாரிகள் கவனமாக சாலையைத் தவிர்த்து, ஓரமாக நடந்து கொண்டிருந்தனர். அதே நேரத்தில் அடிக்கொரு தரம் தலையை ''சடக்'' என்று வெட்டி வானத்தைப் பார்ப்பதும், மறுபடியும் நடையை துரிதப் படுத்துவதுமாக இருந்தனர். வானத்திலிருந்து ஏதோ ஒன்று தலைக்கு மேல் போடப்படப் போவது போலவும் அதிலிருந்து தப்பித்து ஓட தயார் செய்வது மாதிரியும் இருந்தது அது. நான்கு வருடங்களுக்குப் பின் அந்த மண்ணில் நிற்கும் உணர்வு என்னுள் ஒரு பயத்தையும் கிலேசத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. தேவைக்கேற்றபடி ஒவ்வொருவரும் இயங்கிக் கொண்டிருப்பது, நான் அவர்களிடம் இருந்து அந்நியப்பட்டுப் போயிருப்பதை அப்பட்டமாக எடுத்துக் காட்டியது. ஒவ்வொருவர் முகத்திலும் ஒரு இறுக்கம். பரக்கப் பரக்க எதையோ தேடும் கண்கள், கை நழுவிப் போய் விட்ட ஒன்றை மறுபடியும் பெற்றுவிட வேண்டும் என்பது மாதிரியான தவிப்பு, முகத்தில் ஒரு இறுக்கம், மொத்தத்தில் ஒவ்வொருவர் முகமும் ஒவ்வொரு வரலாறு படைத்துக் கொண்டிருந்தது. விட்டு விட்டு வரும் மெல்லிய ஊதல் காற்று எது என்று பகுத்தறிய முடியாதபடி குழம்பிப் போன நெடியை என் மூக்கினுள் நுழைத்து விட்டுச் செல்கின்றது. மற்றெல்லாவற்றையும்விட அதில் கந்தக நெடி அளவுக்கதிகமாக இருப்பது தெரிகிறது. யாழ்பாணத்துக்கு இதுதான் நிரந்தரமானது என்பதாக முடிவு செய்து விட்டதைப் போல் யாரும் அதற்காக மூக்கைப் பிடிக்கவோ முகத்தைச் சுழிக்கவோ செய்யாமல், ஆசுவாசமாக சுவாசித்துக் கொண்டு தங்கள் வேலைகளைக் கவனித்தனர். எரிந்து போன கட்டிடங்களைவிட எஞ்சியிருந்தவைகளும் கரிப்பற்றுப் பிடித்து, எந்த நேரத்திலும் எரியலாம் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தன. எங்கேயோ தூரத்தில் கட்டிடம் அல்லது ஏதோ ஒரு ஊகிக்க முடியாத வஸ்து எரிந்து கொண்டிருப்பதற்கு அடையாளமாக கரும்புகை வளைந்து மேலெழுந்து காற்றோடு கரைந்து கொண்டிருந்தது. மூளிப் பனை மரங்கள் சில எதையும் எதிர் கொள்ளத் தயார் என்பது போல் காற்றோடு 'உர் உர்' என்று கறுவிக் கொண்டிருந்தன. வர்ணிக்க முடியாத அலங்கோலமாக இருந்தாலும் இன்னும் நகரம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதில் பரம சந்தோஷம்.

இவ்வளவு பரபரப்பையும் ஒரே அடியில் அடித்துச் சாய்த்து விடுவது போல், உடைந்த மதில்க் கல்லு மேல் சாவகாசமாக உட்கார்ந்து கொண்டிருந்தார் ஒரு மனிதர். நடுத்தர வயதுக்கு கொஞ்சம் மேலேயே இருக்கும். தலையில் நரை விழுந்திருந்தது. ஏதோ ஒரு அரசாங்க உத்தியோகத்தில் இருந்ததற்கான முகக்களை. எடுத்த எடுப்பிலேயே நடுத்தர வர்க்கம் என்று சொல்லிவிடலாம். புரட்சிக்காரர்கள் கூட கோபித்துக் கொள்ள மாட்டார்கள். அருகில் போன என்னை ஏற இறங்கப் பார்த்தார். அந்தக் கண்களில் ஒரு சோகமும் கூடவே ஒரு

www.padippakam.com



கேள்விக் குறியும், தொனித்தது. வாய்க்குள் வெற்றிலை இருப்பதற்கு அடையாளமாக ஓரத்தில் லேசான சிகப்பு கோடு காட்டியது. ஓரமாக உட்கார்ந்த என்னை ஒரு தினுசாக பார்த்துவிட்டு முன்னிலும் கடுமையாக வாயைக் குதப்பிக் கொண்டார். வாயை மூடி வைப்பதற்கும் மூட வைப்பதற்கும் வெற்றிலை பாக்கு ஒரு நல்ல கருவிதான். அதுதான் நம் முன்னோர்களும் மிகக் கவனமாக அந்தப் பழக்கத்தை வளர்த்து வந்துள்ளனர் போலும் இப்போதய நிலைமைக்கு அது எவ்வளவு பொருத்தமாயியிருக்கின்றது என்பதை நினைத்த போது சிரிப்பு வந்தது. இப்போது அவரின் பாதை வீதிக்கு எதிர்த்த மதிலில் நிலை குத்தியிருந்தது. அது இன்னும் இடிந்து விழாமல் இருப்பதற்கு இது தான் காரணம் என்னும் அளவிற்கு ஏராளமான சுவரொட்டிகள், வண்ண வண்ணமாக, பளபளப்பாக. தொங்கு மீசை முகங்கள், அரும்பு மீசை முகங்கள், புன்சிரிப்பு முகங்கள், தொப்பி முகங்கள், கடுமை படர்ந்த முகங்கள், மென்மையான முகங்கள், அத்தனை முகங்களும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு பளிச்சிட்டன. அந்த அழகு முகங்களுக்கு கீழும் மேலுமாக, கோபுரத்துக்கடியில் இருக்கும் குடிசைகள் மாதிரி குறுணி குறுணியான எழுத்துக்கள். அந்த முகங்களே ஆயிரம் கதை சொல்லும் போது இந்த எழுத்துக்கள் அநாவசியமாகப் பட்டது எனக்கு. கீழ்க்கோடி மூலையில் நைந்து போன உடையோடு ஒரு மனிதன் அரும்பு மீசைச் சுவரொட்டி ஒன்றை ஊழலித்துப் போன தனது கைகளால் வருடிக் கொண்டிருந்தான். அவனின் செய்கை என் இதயத்தின் கனத்தை மேலும் அதிகரித்தது. உட்கார்ந்திருந்த மனிதரோடு பேச்சுக் கொடுத்தேன். இதுதான் அவர் சொன்ன கதை.

## II

சிவபிரகாசம் ஒரு குமாஸ்தா. உடனேயே எந்த இலாகா — எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்று கேட்பது எம்மவர் வழக்கமாயிற்றே! என்ன செய்வது எல்லாம் நம் சூழ்நிலைக் கோளாறுதான். அதற்கு யார் என்ன செய்ய முடியும்,—ஏதோ ஒரு காணிக்கந்தோரில் குமாஸ்தா — (புரியாத பதவியைச் சொல்லி, எனது மேதா விலாசத்தைக் காட்டுவதாக வாசகர்கள் குறைப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் எல்லா வகையான இடிகளையும், சுமைகளையும் தாங்கிக் கொள்ளும் இந்த சாசுவதப் பதவியை, நம் ஊர் வழக்கப்படி ''கிளார்க்கர்'' என்று அந்தஸ்தோடு அழைப்பார்கள். ஏனோ தெரியவில்லை சில ஏடுகள் இதைக் குழப்புகின்றன. எது சரியானது என்பதை அறிய அரசாங்கம் தீவிரமாக முயற்சி செய்வதாக அறிகிறேன். முடிவை வாசகர்கள் அறியும்படி விட்டு விடுகிறேன்). சிரமப்பட்டு தேடியும் சம்பளப் பட்டியல் கைக்கு எட்டவில்லை. தவிர இது ஒரு கௌரப் பிரச்சனையும்கூட. இருந்தும் என்ன பெரிசாகக் கொடுத்துவிடப் போகிறார்கள், வரவுக்கும் செலவுக்கும் திண்டாட்டமாகத்தான் இருந்திருக்கும். நகர வாழ்க்கை அப்படி என்ன லேசுப்பட்டதாகவா இருந்திருக்கும். பொருட்களின் அன்றாட விலையேற்றத்தால் ஏற்படும், நிஜமான பற்றாக் குறைக்கும், வளர்ந்து வரும் போலியான பகட்டுக்கும் இடையில் முன்னேறவும் முடியாமல் பின் வாங்கவும் முடியாமல், மூச்சு திணறி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கும் இந்த இடைநிலை அரசாங்க ஊழியர்கள், ஒரு சுமை தாங்கிதான் என்பதை சொல்லவும் வேண்டுமா! பிரகாசத்துக்கு புற நகர்ப் பகுதியில் சிறிய வீடு உண்டு. எல்லோருக்கும் அறிமுகமான கந்தசாமி கோவிலில் இருந்து கிழக்கே போகும் தெருவில் அரை மைல் போனால் ஒரு காளி கோவில் தென்படும். அதிலிருந்து வடக்காக ஓடும் கறுப்பு ரோட்டில் மூச்சுப் பிடித்துக் கொண்டு மூன்று பர்லாங்கு தாண்டியதும் ஒரு வீரபத்திரன் கோவில். அதையும் இரண்டு எட்டில் தாண்டிவிட்டால் அரசமரத்துக்கு கீழே சின்னதாக ஒரு பிள்ளையார் சிலை. அதற்கு எதிர்ப்புறமாக அதாவது பீச்சாங்கைப் பக்கமாக, குப்புற இறங்கி ஓடும் சந்தில் மூன்றாவது வீடு. நாற்சார் சதுர வீடு. வடக்குப் பார்த்த தலை வாசல். வீடு சுத்தமாகவும் பார்க்கும் படியாகவும் இருப்பதற்கு முக்கிய காரணம் அவர் மனைவி தான். மூன்று பிள்ளைகளைப் பெற்ற பின்பும் சுறுசுறுப்புக் குறையாமல் பம்பரமாக இயங்கிக் கொண்டிருப்பாள் என்பதைத் தவிர அவளைப் பற்றி யாதொன்றும் அறிய முடியவில்லை. இதில் ஆச்சரியப்படும்படியாக சொல்வதற்கு ஒன்றுமில்லை. பழகிப் போன ஊர் வழமைதான்.

சதா பற்றாக் குறையான வாழ்க்கைக்கு மத்தியில் மூன்று பிள்ளைகளையும் நகரத்துப் பள்ளியில் படிக்க வைப்பது எத்தகைய துயரமானது

என்பதை விளக்குவதற்கு வார்த்தைகளே இல்லை. அதுவும் இந்த நகரத்துப் பள்ளிக் கூடங்கள் இருக்கின்றனவே, இராட்சத குணம் படைத்தவைகள். அதைக் கொண்டு வா!— இதைக் கொண்டு வா! என சதா பிள்ளைகளிடம் இருந்து எதையாவது பிடுங்கிக் கொண்டேயிருக்கும் என்பது தான் உலகறிந்த விஷயமாயிற்றே! ஆனால், பட்டம் வாங்கி, அரசாங்க உத்தியோகம் பெற்று, நன்கொடை வாங்கி திருமணம் செய்து, பிள்ளைகளைப் பெற்று, ஓய்வூதியம் பெற்று, இன்னும் சொல்ல முடியாத இத்தியாதி சமாச்சாரங்களுக்கும் படிப்பு முக்கியமானதென்பது பாடசாலைகளுக்கு தெரியுமாகையால் அவை கொஞ்சமும் விட்டுக் கொடுக்க மனமில்லாது நடந்து கொள்கின்றன போலும். அதற்காக நாம் கவலைப்பட்டு ஆகப்போவதுதான் என்ன! மூத்த பையன் பதினெட்டு வயதைத் தாண்டி உயர் வகுப்புப் படிக்கிறான். அடுத்தவர்கள் இருவரும் பெண்கள்—கீழ் வகுப்பு படிக்கின்றார்கள். சாதாரண காலங்களிலேயே வாழ்க்கை கடினமாக இருக்குமென்றால் போராட்டம் அது இது என்று குழம்பிப் போயுள்ள காலத்தில் அதுவும் அரசாங்கமே எதிரியாக மாறிவிட்ட காலத்தில் மகா ஜனங்களின் கஷ்டத்தைப் பற்றி விளக்குவது கடினமானதுதான். ஆனால்கிடைத்ததைக் கொண்டு எல்லோரும் உயிரோடு வாழ்ந்து கொண்டுதான் இருந்தார்கள். சிலருக்கு அர்த்தமுள்ளதாகவும் சிலருக்கு அர்த்தமற்றதாகவும் ஒவ்வொரு நாளும் பயத்தையும் ஏக்கத்தையும் சுமந்து கொண்டு நடமாடினர்.

III

ஓய்! என்ன காணும் பிரகாசம் ஒரேயடியாக யோசித்துக் கொண்டிருக்கிறீர். கோப்புக்கள் எல்லாம் அப்படியே கிடக்கிறது!

என்ன ஐயா செய்கிறது எல்லாம் என் பையனைப் பற்றித்தான். எல்லாம் ஒரே பயமாக இருக்கிறது. கொஞ்ச காலமாகவே பிரகாசத்திற்கு பயம் அதிகரித்திருந்தது. அவருக்கு எட்டும் செய்திகள் நல்லனவாக இருப்பதில்லை. திடீர் திடீரென பையன்கள் காணாமல் போவதும், படைகள் வளைத்துப் பிடித்துக் கொண்டு போவதும், பாடசாலைக்குப் போன பையன்களின் சயிக்கிளும் புத்தகமும் மட்டுமே வீடு திரும்புவதும் பரவலாக நடந்து கொண்டிருந்தது. இத்தனை காலமும் அணு அணுவாக தன்னை உருக்கி வளர்த்த மகனுக்கு ஒன்றென்றால்,— நினைக்கும் போதெல்லாம் அவருக்கு அடி வயிற்றில் வலித்தது. இனம் புரியாத ஏதோ ஒன்று வந்து நெஞ்சை அடைப்பது மாதிரியிருக்கும். வாய் விட்டுக் கதற வேண்டும் போல் இருக்கும். தனக்கு மட்டுமல்ல ஒவ்வொரு பெற்றோருக்கும் இந்தப் பயம் இருப்பதும் அவரவர் தகுதிக்கேற்ப அங்கலாய்ப்பதும் அவருக்கு தெரியாததல்ல. இருந்தும் அவர் தன் மகனைப் பற்றி கற்பனையை அதிகமாகவே வளர்த்து வைத்திருந்தார். அதற்கேற்றாற் போல் அவனும் படிப்பில் மிகவும் புத்திசாலிப் பையன். துரு துரு என்று எதையாவது செய்து கொண்டேயிருப்பான். அவனைப் பெரிய படிப்பு படிக்க வைத்து பெரிய உத்தியோகத்தில் அமர்த்த வேண்டும் என்று அடிக்கடி மனைவியிடம் சொல்லிக் கொள்வார். அவனின் தலையில் தான் இரண்டு பெண் பிள்ளைகளின் எதிர்காலமும் தங்கியிருந்தது. இந்த மகனுக்கு ஏதாவதென்றால், அவர் மனதுக்குள் வேண்டாத தெய்வங்கள் இல்லை. அவர் அதிக ஆச்சாரமானவர். தெய்வ சிந்தனையுள்ளவர். மகனுடைய இப்போதய போக்கும் அவருக்கு அவ்வளவாக திருப்தி தரவில்லை. நண்பர்கள் என்று போவதும் வருவதும் ஏதோ குசு குசுப்பதுமாக இருக்கிறான் என தாய் வேறு முறையிடுகிறாள். என்ன ஏது என்று அவனைக் கண்டிக்கவும் அவருக்கு தயக்கமாக இருக்கின்றது. முன்னைப் போல் காலம் இல்லை இப்போது. ஏடா கூடமாக ஏதாவது சொல்லப் போய் அதுவே விபரீதமாகிவிடும். ஆனால் மகனில் அவருக்கு இன்னும் மலை போல் நம்பிக்கை இருந்து கொண்டுதான் இருந்தது. இருந்தாலும் எங்காவது வெளி நாட்டுக்கு அனுப்பி வைத்தால் எல்லாப் பயமும் அற்றுப் போய் விடும். அத்தோடு பணக் கஸ்டமும் தீர்ந்துவிடும் என்ற எண்ணம் கொஞ்ச நாட்களாகவே அவர் மனதை அரித்துக் கொண்டிருந்தது. ஆனால் அதற்கு ஏற்ற ரொக்கப்பணம் அவரிடம் இல்லாததால் எத்தனையோ பேரிடம் கேட்டுப் பார்த்தாயிற்று. தருகிறோம் என்கிறார்களேயொழிய கைக்கு வந்த பாடில்லை. யாராவது கொஞ்சம் வசதியானவர்களாக தெரிந்தவர்களைக் கண்டாலோ இவரிடம் இருக்குமா! தருவாரா? கேட்டுப் பார்க்கலாமா! என்று அவர் மனம் அடித்துக் கொள்ளும்.

உமக்கு சங்கதி தெரியாதோ! பிரகாசம்!

சொல்லுங்கள் ஐயா! எனக்கு ஒன்றும் தெரிந்த பாடாயில்லை. என் மூளை வேறு குழம்பிக் கிடக்கிறது. நீங்கள் தான் பலதையும் பத்தையும் வாசிக்கிறவர். சொன்னால்த்தானே தெரியும் சேதி!

இரவு ஒரு பொலீஸ் நிலயத்தை நொறுக்கித் தள்ளிவிட்டான்களாம் நம்ம பையன்கள்.

அப்படியா, சங்கதி! சந்தோஷமான செய்தி தான் ஐயா. அவன்களுக்கும் இப்போது தெரியும் எங்கள் பையன்களைப் பற்றி—எங்களை என்ன வேணுமானாலும் செய்யலாம் என்று எண்ணியிருந்தவர்களல்லவா அவர்கள், இப்போது புரிந்திருக்கும் அது, ஆக நமக்கு வெற்றிதானாக்கும். அது சரி பையன்களிடம் நீர் மூழ்கி கூட இருக்குதாமே! இருக்கும் இருக்கும். பக்கத்து நாடு கொடுத்தாலும் கொடுத்திருக்கும்,—அவருக்கு சந்தோஷத்தில் முகமெல்லாம் விரிந்து ஒரு முறை தலையைப் பலமாக ஆட்டிக் கொண்டார். எதிலோ இருந்து விடுதலை பெற்றது போல் கைகளை பல முறை சொடுக்கிக் கொண்டார்.

பிரகாசம் கொஞ்சம் மென்மையான சுபாவம் உடையவர். சில வேளைகளில் மட்டும் உற்சாகமாகக் கதைப்பார். நாற்பத்தாறு வயது பூர்த்தியாகிறது. எட்டி வயிற்றில் உதைத்தால் எப்படியோ அப்படி ஒரு உள்வாங்கின தோற்றம். கொஞ்சம் நீளமுகம், கொஞ்சம் வழுக்கை. அரசாங்க ஊழியத்துக்கு போதுமான தோற்றம். கடந்த இருபது வருடமாக சாசுவதமான இந்த பேனா ஓட்டும் தொழிலைத் தவிர வேறு எதுவும் கிடையாது. பதவி உயர்வைப் பற்றி தீவிரமாக சிந்தித்த காலம் ஒன்றிருந்தது. ஆனால் அவரின் எண்ணத்தை அறிந்தது போல் அரசாங்கம் மொழிக் கொள்கையைக் கொண்டுவந்து எல்லாவற்றையும் மறக்க அடித்து விட்டது. பலமுறை முயன்றுதான் பார்த்தார். ஒன்றும் பலனில்லாமல் போய்விட்டது. இந்த அநீதிக்கும் சேர்த்துத் தான் இப்போது அரசாங்கம் வாங்கிக் கட்டிக் கொண்டிருப்பதாக பொங்கிப் பொங்கி சந்தோஷப்படுவார். அரசாங்கத்துக்கு இன்னமும் வேண்டும், அப்போது தான் ஒரு வழிக்கு வருவார்கள். அதுவரைக்கும் பையன்கள் விட்டுக் கொடுக்கக் கூடாது என்று மனதுள் வைராக்கியப் பட்டுக் கொள்வார். ஆனால் அடுத்த கணம் மகனை நினைக்கும் போது வயிற்றைக் கலக்கும் சம்பவமாக மாறத் தொடங்கிவிடும். எதிரிக்கு துன்பம் வரும்போது, சந்தோஷிப்பதைப் போலவே இதுவும் இயலாமையின் வெளிப்பாடு தான். இருந்தும் சில வேளைகளில், பலமுள்ள அரசாங்கத்தோடு மோதி வெற்றி பெற முடியாது போனாலும் போய்விடலாம் என்று எண்ணவும் செய்வார். ஆனால் சகபாடிகள் மத்தியில் எந்தக் கருத்து வலுக்கிறதோ, அந்தக் கருத்துக்கு முரணாக ஒரு போதும் நிற்க மாட்டார். அதற்காக நாம் அவரை குற்றம் சொல்லுவது முறையாகாது. வலுத்தவன் கருத்துக்கு இசைந்து போவதென்பது பாட்டன் பூட்டன் காலத்திலிருந்தே வளர்ந்து வந்திருப்பது எல்லோருக்கும் தெரிந்தது தானே!

## IV

அன்று அலுவலகம் கொஞ்சம் பயத்துடனும் படபடப்புடனும் இயங்கத் தொடங்கியிருந்தது. இனம் புரியாத அமைதி அலுவலகமெங்கும் வியாபித்திருந்தது. வழமையாக உரக்க ஒலிக்கும் தட்டச்சு சத்தங்கள் கூட அன்று அமுங்கி—பயந்து பயந்து ஒலிப்பது மாதிரி இருந்தது. எங்கோ தூரத்தில் கத்தும் காக்கைகளின் குரல் காதுக்குள் புகுந்து அபஸ்வரமாக ஒலித்தது. ஒருவரை ஒருவர் சந்திப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் போல் ஒவ்வொருவருக்கும் தோன்றியது மாதிரி அவரவர் இருக்கைகளிலேயே இருக்கப் பிரியப்பட்டனர். எதேச்சையாக சந்திப்பவர்கள் கூட முகத்தை பக்க வாட்டுக்கு திருப்பி, எதையோ பார்க்க பயப்பட்டது மாதிரி நடந்து கொண்டனர். மனக் கண் முன் அந்த கோரமுகம் அடிக்கொரு தடவை வந்து—அழிய மறுத்து அலைக்கழித்தது. இது சரியா! இது சரியா! என்ற கேள்வி அலை அலையாக வந்து தாக்குவது மாதிரி ஒரு உணர்வு ஏற்பட்டது. மறு கணம் அப்படி எதுவும் இல்லை போல் மனது அடிப்பதை குறைத்துக் கொண்டது. இருந்தாலும் இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் இருந்த வன்ம உணர்வு "செய்ய வேண்டியதைத்தான் செய்திருப்பார்கள். சரியானதைத்தான் செய்திருப்பார்கள்" என்று இசைந்து கொண்டது. அது வேறு ஒன்றுமில்லை—அலுவலக முன் சந்தியில், விழி பிதுங்கி நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு, கோரமான முகத்தோடு, மின் கம்பத்தில் தொங்கவிடப்பட்டிருந்த இறந்த மனித

www.padippakam.com



னின் முகம்தான். சிகப்பு மையால் கோணல் மாணலாக எழுதி தொங்கவிடப்பட்ட அட்டை காரணத்தைச் சொல்லி விட்டு காற்றுக்கு ஆடிக் கொண்டிருந்தது. மக்கள் கூட்டம் மௌனமாக நின்று பார்த்துவிட்டு மௌனமாகவே கலைந்து போயினர். மனதில் நினைப்பதை வெளிக் காட்டுவது கூட அபத்தம் என்பது மாதிரி பிர யத்தனப்பட்டு முகத்தை நேராக வைத்துக் கொண்டனர். பிரகாசமும் முதலில் திடுக்குற் றாலும் அதை வெளியில் காட்டாதவாறு செய்து கொண்டார். ஆனால் அவர் பார்த்த மரணங் களையும் இதையும் ஒப்பிட்டுப் பார்க்காமல் அவரால் இருக்க முடியவில்லை. அவர் அறிந்த காலம் தொட்டு மரணத்துக்கு அதிக மரியாதை கொடுக்கப்பட்டு வந்துள்ளதாகவும் கண்களுக்கு சந்தணம் நிரப்பி மூக்குத் துவாரத்துக்கு பஞ்சு வைத்து பெருவிரல்களை இணைத்துக் கட்டி, பஞ்சு வைத்த பேழையில் வைத்து ... பார்ப்பவர் கள் மனம் விகாரப்பட்டு விடக் கூடாதே என கவனப் படுத்தப்பட்டிருக்கும். ஆனால் இது முற்றிலும் மாறாக. அந்த விகார முகம் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டது.

இவையெல்லாம் மதியத்துக்குள் மறக்கப்பட்டு அலுவலக சந்தடிக்குள் புதைக்கப்பட்டு, அன் றாட பிரச்சனைகள் கண் முன்னே வர அவர் வீடு வந்து சேர்ந்த போது அது வெறிச்சோடிக் கிடந்தது. மூலையில் மனைவி தலைவிரி கோல மாக சிதறிக் கிடந்தாள். அவரைக் கண்டதும் மண்ணிலும் வயிற்றிலுமாக மாறி மாறி அடித் துக் கொண்டு அழத் தொடங்கிவிட்டாள். என்ன, ஏது என்பதைக் கேட்பதற்குகூட திரா ணியில்லாமல் கைகால்கள் துவண்டு போக வார் த்தைகள் தொண்டைக் குழிக்குள்ளேயே சிக்கிக் கொள்ள தூணைப் பிடித்துக் கொண்டார்.

ஆயிற்று, அவர் பயந்தபடியே எல்லாம் நடந்து விட்டது. இருந்தும் ஆதங்கப்பட்ட மனதின் நப்பாசை வீதியில் கேட்கும் ஒவ்வொரு சயிக் கிள் சத்தத்தையும் நம்பி, ஏமாந்து, சலிப் படைந்தது. காலையில் விட்டேறியாக வந்த கடிதத் துண்டும் சயிக்கிளும் மகன் நாட்டுக்காக உழைக்கப் போய்விட்டான் என்பதை இறுதியா கக் கூறிவிட்டன.

## V

இப்போது மொத்தமும் வீடு களையிழந்து புகை போக்கி மாத்திரம் எப்போதாவது புகைவிட்டு சோம்பலை முறித்துக் கொண்டது. இடை யிடையே கேட்கும் வெடிச் சத்தங்களும், ஓட்ட சாட்டங்களும், அஞ்சலிகளும் இயல்பைக் குலைத்து, இருப்பை அச்சப் படுத்திக் கொண் டிருந்தன. இயற்கை ஊமையாகிப் போக செய்திகளும் வதந்திகளும் கைகால் உருப் பெற்று கிலியை இன்னும் கூட்டிக் கொண் டிருந்த காலம் அது. அடுத்து என்ன நடக்கும், யார் மரணிப்பார்கள் என்பது ஆண்டவனுக்கே அறிய முடியாதபடி மர்மமாகவே இருந்தது. ஒவ்வொருவரும் எதையும் பெரிது படுத்த விரும்பாமல் இருக்க பழகிக் கொண்டனர். ஆனால் பிரகாசம் ஒவ்வொரு முகத்தையும் ஆழ மாகப் பார்த்தார். மரணத்தைவிட மரணத்தின் தன்மை பற்றிய வடுக்கள், அந்த முகங்களில் கோரத் தாண்டவமாடியிருப்பதை விளங்கிக் கொண்டார். வலிந்து புகுத்தப்பட்ட ஒவ்வொரு மரணத்திலும் கேள்வியொன்று எழும்ப காத்துக் கொண்டிருப்பதாக அவருக்குப் பட்டது. அப் போது தான் ஏன் இந்த மரணங்கள் என்ற கேள்வி, எங்கோ ஒரு மூலையில் சிறு பொறி யாகத் தட்டி, மெல்ல மெல்ல வளர்ந்து, உள் ளத்தைச் சல்லடையாகக் குடைந்து இதை என் மகனும் செய்திருப்பானோ என்ற எண்ணம் புள்ளியிட்டதும் இதயத்தில் சுரீர் என்று வலித் தது. கண்கள் இருண்டு தலை கிறுகிறுத்தது. அப்படியென்றால் இந்தக் கொடூரத்தைச் செய்ய எங்கிருந்து கற்றுக் கொண்டிருப்பான், யார் கற்றுக் கொடுத்திருப்பார்கள், பூச்சி, பூரா னைக் கொல்லப் பயப்படுவானே! அவனுக்கு இப்படி ஒரு அரக்கத்தனமா, நான் என்ன பழி பாவம் செய்தேன், இவனைப் பெற்றதற்கு! எண்ணங்கள் கட்டு மீறிப் போக, ஈஸ்வரா என்று காதைப் பொத்திக் கொண்டார். மறு கணம், இருக்காது, ஒருக்காலும் இருக்காது, சிறு துன்பத்தைக்கூட தாங்க முடியாத அவ னைப் பற்றி எனக்குத் தெரியாதா என்ன! இவற்றையெல்லாம் வேறு யாரோ தான் செய் வார்கள்,—மறுபடியும் அவரின் நினைவு நிதா னத்துக்கு திரும்பியது. அவனை வளர்க்க அவர் பட்ட கஸ்டங்களையெல்லாம் நினைவு படுத்திப் பார்ப்பார். பத்துப் பன்னிரண்டு வயது வரை ஆஸ்துமா வியாதி அவனைப் பாடாய்ப் படுத் தியது. நேரம் காலம் இல்லாமல் ஆஸ்பத்திரி யும், பரியாரி வீடும், கோயில் வாசலுமாக — இருந்தும் அவர் கொஞ்சமும் சலிக்கவில்லை. ஆனால் இப்போது ஏதோ இனம் புரியாத சலிப் பும் வெறுப்புமாக மனம் ஓஹோ! வென்று நிச்சி ராந்தியாகக் கிடந்தது.

www.padippakam.com



கால்கள் செயலற்றது மாதிரி ஒரே இடத்தில் நெடு நேரம் நின்று போவோர் வருவோரை யெல்லாம் கூர்ந்து பார்ப்பார். ஒவ்வொரு முகத்திலும் மின் கம்ப மனிதனின் முகச் சாயல் தெரிவது மாதிரியிருக்கும். அதற்குப் பிறகு எத்தனையோ மரணங்களைக் கண்டு விட்டாலும் ஆரம்பத்தில் பார்த்த மின் கம்ப மனிதனின் முகம் அழிச்சாட்டியமாக அழிய மறுத்து திரும்பத் திரும்ப நினைவுக்கு வந்தது. மேல் துண்டைப் போர்த்துக் கொண்டு வீதியோரமாக நடப்பார். எங்காவது நடக்க வேண்டும் போல் கால்கள் துரிதப்படும். வீதியில் நடக்கும் எந்த சம்பவங்களிலும் சுரணை இருக்காது. சுடு மணல் கூட காலுக்கு உறைக்காது. ஆனால் ஒவ்வொரு மின்கம்பத்தைக் கடக்கும் போதும் கால்கள் தானாக சோர்வடைவது மாதிரியிருக்கும். பார்க்கக் கூடாது என்று மனது பிடிவாதமாக மறுத்தாலும், கண்களைக் கட்டுப் படுத்த முடியாமல் அபாயம் என்ற எழுத்துக்குக் கீழே இலக்கங்களுடன் நேராக நிமிர்ந்து நிற்கும். போய்விடும். அது வெறுமையாக, அபாயம் தெரிந்திருந்தாலும் கூட அந்த இலக்கங்கள் ஒரு முறை திடுக்கிட வைக்கும். மறுபடி மனசு லேசாகி மீண்டும் நடக்க தொடங்குவார். அப்படித்தான் ஒரு கம்பத்தில் நிமிர்ந்த போது வெள்ளைப் பூனை ஒன்று கட்டி தொங்க விடப் பட்டிருந்தது. பள பளப்பு மாறி அதன் கண்கள் பழுப்பேறியிருந்தன. அதன் கழுத்திலும் ஒரு அட்டை தொங்கிக் கொண்டிருந்தது. "துரோகிக்கு தண்டனை-எலிகள் சங்கம்" என்று குழந்தைத் தனமாக கிறுக்கியிருந்தது. எதிரே சிறுவர்கள் கலகலப்பாக விளையாடிக் கொண்டிருந்தனர். கால் வலிக்க வலிக்க நெடு நேரம் நின்று மாறி மாறிப் பார்த்தார். ஏதோ சொல்லி ஆதங்கப்பட வேண்டும் என்று மனது அங்கலாய்த்தது. ஆனால் சொல்ல முடியாத தவிப்பாய், வார்த்தைகள் தெரியாத தவிப்பாய், அகன்று விட்டார். பெரும்பாலும் அவருக்கு தனிமை வேண்டியிருந்தது. மௌனம் இனித்தது. அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் மகனின் பிரிவு தான் இப்படி ஆக்கிவிட்டது என்று கூறுவது காதில் விழுந்தாலும், மௌனமாகவே இருப்பார்.

அவரின் மௌனத்தைப் போலவே நகரமும் அதன் மேல் திணிக்கப்பட்ட சந்தடியைத் தவிர சோகமாகிக் கிடந்தது. தனக்குப் பரிச்சயமான ஒவ்வொரு முகத்தையும் பறி கொடுக்கும் போது, கூடவே இரத்தத்தையும் நிண நீரையும் வாஞ்சையோடு உள் வாங்கி, மறுபடியும் மௌனித்துக் கொண்டது.

## VI

இப்போது பிரகாசத்தின் மகன் எப்போதாவது வீடு வந்து போகிறான். அவன் தோற்றமும் மாறுபட்டிருந்தது. மொழு மொழுவென்ற குழந்தைத்தனம் முகத்திலிருந்து மறைந்து காய்ந்து கறுத்து லேசான முரட்டுத்தனம் அப்பியிருந்தது. பட படத்த புருவங்களுக்கிடையில் துரு துருத்த கண்கள் போய், ஏகாந்தமும் வன்மமும் கொண்ட கண்களாக இருந்தன அவை. கைகளில் நரம்புகள் புடைத்து கட்டு மீறிக் கொண்டிருந்தன. கொஞ்சலும் சிரிப்புமாயிருந்த அவன் பேச்சுக்கூட கர கரத்துப் போயிருந்தது, இருந்தாலும் அவன் வரவு பெண் பிள்ளைகளுக்கும் தாய்க்கும் சந்தோசமாகவேயிருந்தது. பெண் பிள்ளைகள் அவனிடம் எதை எதையெல்லாமோ கேட்டு வைத்தனர்.

விக்கி விழுங்கி அவன் சொல்லும் பதில்கள் கூட அவர்களுக்கு திருப்தியாயிருந்தன. அவர்கள் மனதில், எண்ணத்தில் அவன் ஒரு பிரம்மாண்டமான விருட்சமாக யாரும் வெற்றி கொள்ள முடியாத ஒருவனாகத் தெரிந்தான். வெகு விரைவில் கிடைத்தற்கரிய பொருள் ஒன்று கிடைத்துவிடப் போவதாகவும், அந்த சாசுவதமான பொருளுக்கு அண்ணா தான் சூத்திரதாரி என்றும் அவர்களது கற்பனைக் கடல் பரந்து விரிந்தது. மெச்சப்படும் காரியங்களெல்லாம் அவன் குழுவுக்கு சொந்தமானதுதான் என அக்கம் பக்கத்தில் உள்ள ஒத்த வயதினருடன் வாதிட்டனர். ஆனால் அவர்களோ பல பிரிவாகி, கண் காணாதவர்களுக்காகக் கூட சச்சரவிட்டுக் கொண்டனர். கூச்சலும், வாதாட்டுமாய் விளையாட்டு மைதானம். குழம்பிக் கிடந்தது.

(வாசகர்களிடம் மன்னிப்புக் கோருகிறேன். அவன் எந்தக் குழுவில் இருந்தான் என்பதைப் பற்றி எவ்வளவோ நினைவு படுத்தியும் நினைவுக்கு வர மறுக்கிறது. அண்மைக் காலமாக

www.padippakam.com



எனது ஞாபக சக்தி தீவிரமாக பிசகத் தொடங்கி யிருப்பது தான் காரணமா! அல்லது ஏகப்பட்ட குழுக்கள் இருந்ததுதான் காரணமா! என்பதை அறுதியிட்டு சொல்ல முடியாதுள்ளது. இது ஒரு புறமிருக்க ஏதேதோ அந்நிய எழுத்துக்கள் எல் லாம் மாறி மாறி வந்து என்னைக் குழப்புவது என்னவோ உண்மைதான். அதோடு இதற்கு அதி முக்கியத்துவம் கொடுத்து ஆராய்ந்தால் தங்கள் புனிதத் திருப்பெயர் திட்டமிட்டே கொச்சைப் படுத்தப்படுவதாக ஏதாவது ஒரு குழு நம்மேல் பாரம் சுமத்த வாய்ப்புண்டான படியால், ஏதோ ஒரு குழுவில் இருந்தான் என் பது இப்போதைக்கு, எல்லோருக்கும் சௌகரிய மாக இருக்கும்.)

நல்லது, நிலைமையின் கடுமையும், இருப்புக்கு இருக்கும் சவாலும் ஒவ்வொருவர் மனதிலும் ஒவ்வொரு விதமான சலனத்தை ஏற்படுத்தினா லும், யாராவது பதில் காணுவார்களென்றோ அல்லது எப்படியாவது பதில் காணப்படும் என்றோ மனத்தை அடித்து முடக்கி நம்பிக்கை யோடு அடுத்த நாளை எதிர் நோக்கினர். இதி லெல்லாம் பிரகாசம் தனித்தே இருந்தார். ஏதோ ஒரு குற்ற உணர்வுக்கு ஆட்பட்டவராக, மனிதர்களின் முகத்தை நிமிர்ந்து பார்க்கக் கூச் சப் பட்டார். அதைவிட அது ஒரு பயமாகக் கூட இருந்தது. ஊரில் உள்ள எல்லா மனிதர்களுக் கும் திடீரென கரிய கொம்புகள் முளைத்து விட்டதாகவும் ஒருவரை ஒருவர் துரத்திக் கொண்டு முடிவேயில்லாத தூரத்துக்கு ஓடுவதா கவும் அவர் கண்ட கனவும் திரும்ப திரும்ப நினைவுக்கு வந்து அச்ச மூட்டியது. மனது கஷ்டமாகி ஒரு நிலைப்பட மறுக்கும் வேளை களில் 'காக்க! காக்க! கதிரவேல் காக்க! .' என்று அட்சரம் பிசகாமல் ஒற்றைத் துண்டைப் போர்த் திக் கொண்டு காண்டாமணியை நோக்கி வாஞ்சையோடு நடந்த அந்த நாட்களை, அந்த வீதிகளை ஒப்பிட்டுப் பார்ப்பார். வீதிகளில் சூனியம் கவ்விக் கொண்டுள்ளதாக உணர்வார். தன்னைப் பழி வாங்குவதற்குத்தான் வீதியோ ரங்களில் முகங்கள் வீசியெறியப்பட்டிருப்பதாக துடித்துப் போவார். மரணத்தின் வேதனையை வாங்கிக் கொண்ட அந்த முகங்களோடு தன்னு டைய முகத்தைப் பொருத்திப் பார்ப்பார். அது பரந்து விரிந்து சூரபத்மனாகி......ஐயோ என்று அலறுவார். சத்தம் தொண்டைக்குள்ளேயே சிக்கிக் கொள்ளும். சம்பந்தா சம்ந்தமில்லாமல் மகனின் முகமும் திடீரென ஞாபகத்துக்கு வரும். அதுவும் விகாரமாகி, கோரமாகி, கண்களை இறுக மூடிக் கொள்வார். கருவண்டு போன்ற கண்களும் சிகப்பு கோடிழுத்த இதழுமாக அவன் தொட்டிலில் கிடந்த முகம் நினைவுக்கு வரும். மறு கணத்தில் அதுவே மெல்ல மெல்ல அகன்று பரந்து மின் கம்ப மனிதனின் சாயலை ஒத்த தாகி...வானத்தை வெறித்துப் பார்ப்பார், குருவி கள் புள்ளி புள்ளியாகி தேய்ந்து மறையும்.

## VII

அன்று இரவு கேட்ட குண்டுச் சத்தங்கள் அவரை படுக்கையை விட்டு எழுந்திருக்க விடா மல் ஒரேயடியாக உறைய வைத்திருந்தன. அவை வழக்கத்துக்கு மாறாக அருகாமையில் வெகு அருகாமையில் கேட்டிருந்தன. பூமி தாங்க மாட்டாமல் வீட்டையும் வீட்டுக் கூரை யையும் உலுப்பி எடுத்து நியாயம் கேட்டிருந் தது.

கூக்குரல்களுக்கும் ஒப்பாரிகளுக்கும் நடுவில் இரத்த விலாறாக அடிக்கப்பட்ட மகனது உடல் முற்றத்தில் கிடந்தப்பட்டிருந்தது. அதில் மர ணத்தின் வேதனை கோடுகளாகி வழிந்திருந் தது. மறுபடியும் மறுபடியும் காரணமில்லாமல் மின்கம்ப மனிதனின் முகமும் நினைவுக்கு வந்து அழிய மறுத்தது. வலுக்கட்டாயமாக மகனின் உண்மையான முகத்தைப் பார்ப்பதற்காக மீண் டும், மீண்டும் உற்றுப் பார்த்துக் கொண்டே யிருந்தார்.

இப்போது அவர் சுவரொட்டிகளில் மகனின் முகத்தைத் தேடுகிறார்.

ㅇ ㅇ ㅇ

www.padippakam.com

# இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயம் : ஒரு நோக்கு

*செ. லோகநாதன்*

(சுதந்திர வர்த்தக வலயம் தொடர்பாக வெளிவரும் ''தா விந்து'' பத்திரிகையிலிருந்தும், அனைத்துலக மன்னிப்புச் சபையால் 1990 செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்ட பிரசுரத்திலிருந்தும், யுக்திய என்னும் பத்திரிகையில் நிர்மல் ரஞ்சித், சீதா ரஞ்சனி ஆகியோரால் எழுதப்பட்ட கட்டுரைகளிலிருந்தும் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தொகுத்து எழுதப்பட்ட கட்டுரை)

1977ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்த நாள் தொடக்கம், அதற்கு முன் பதவி வகித்த அரசாங்கத்தால் கடைப் பிடிக்கப்பட்டு வந்த பொருளாதாரக் கொள்கைகளில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படுத்தப் பட்டன. 1977க்கு முன்னர் பதவி வகித்த அரசாங்கம் இறக்குமதிக் கட்டுப்பாட்டுடன் கூடிய மூடிய பொருளாதாரக் கொள்கையை அறிமுகப் படுத்தியது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள திறந்த பொருளாதாரக் கொள்கையானது எமது நாட்டு தொழிலாளி வர்க்கத்திற்கு பல விதமான தாக்கங்களை ஏற்படுத்தியது மட்டுமின்றி எண்ணிக்கை ரீதியிலான மாற்றங்களையும் குணாம்ச ரீதியான அனேக மாற்றங்களையும் ஏற்படுத்தியது.

சுதந்திர வர்த்தக வலயம் என இன்று வழக்கில் ஜன ரஞ்சகமடைந்துள்ள 'முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்' என்னும் உத்தியோக பூர்வ பெயரைக் கொண்டுள்ள தொழிற் துறைப் போக்கானது ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளில் ஒரு முக்கிய அம்சமாகும்.

எமது நாடும் எமது மக்களும் முகங் கொடுக்கும் பொருளாதாரப் பிரச்சனைக்கு வெளி நாட்டு மூலதனத்தை இலங்கைக்கு வரவழைப்பதும் அதன் மூலம் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட மென்ரக தொழில்களை ஆரம்பிப்பதை ஊக்குவித்தல் என்னும் பொருளாதாரக் கொள்கையை ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்தவுடனேயே செயற்படுத்தினாலும், இக் கொள்கையானது, அதற்கு முன் பதவி வகித்த அரசாங்கத்தின் இறுதிக் கால நிதி அமைச்சராக இருந்த, காலம் சென்ற திரு பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக அவர்களால் பிரேரிக்கப் பட்டது. ஆனால் ஸ்தாபனமயப்பட்டிருந்த தொழிலாளி வர்க்கத்தின் எதிர்ப்பும் அரசாங்கத்துக்குள்ளேயே இருந்த முற்போக்கு சக்திகளின் எதிர்ப்பினாலும் இப் பிரேரணையை செயற்படுத்த அன்றைய அரசாங்கத்தினால் முடியவில்லை. இது தவிர, அன்றைய ஆளும் கட்சியினரின் கடந்த கால நடவடிக்கைகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தமது மூலதனத்துக்கு பாதுகாப்பு உண்டு என்னும் நம்பிக்கையை ஊட்டுவதாகவும் இருக்கவில்லை.

இத் தடைகளை விளங்கிக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, வெளி நாட்டு முதலீட்டாளர்களை கவர்வதற்காகவும், அவர்களது மூலதனத்தின் பாதுகாப்பு தொடர்பாக நம்பிக்கை அளிப்பதற்காகவும், தாம் பதவிக்கு வந்தவுடனேயே எமது நாட்டு தொழிலாளி வர்க்க ஸ்தாபனங்கள் மீதும், தொழிற் சங்கங்கள் மீதும் அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்டனர். இதன் மூலம் தமது எஜமானர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாயினர்.

இலங்கையின் முதலாவது முதலீட்டு ஊக்குவிப்பு வலயமான 'கட்டு நாயக சுதந்திர வர்த்தக வலயம்' 1979ல் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 1985ல் பியகம (Biyakama) சுதந்திர வர்த்தக வலயம் ஏற்படுத்தப்பட்டதோடு, 'கொக்கலை சுதந்திர வர்த்தக வலயம்' அமைப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

சுதந்திர வர்த்தக வலயத்தில் பிரதானமாக உடை வகைகளே உற்பத்தி செய்யப்படுகின்

www.padippakam.com



றன. உடை வகைகள் உற்பத்தியில் தற்போது இலங்கைக்குக் கிடைக்கும் வருமானம் சம்பிர தாய ரீதியான ஏற்றுமதிப் பெறுமானத்தையும் தாண்டிச் செல்லும் அளவிற்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் 1985ம் ஆண்டுக்கான ஏற்றுமதி வருமானம் 38,016 இலட்சம் ரூபாய்களாகும். 1986ம் ஆண்டு இவ் வருமானமே 54,492 இலட்சம் ரூபாய்களாக அதிகரித்தது. 1989ம் ஆண்டு வரையான முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் ஏற்றுமதி வருமானம் 1,79,000 இலட்சம் ரூபாய்களாகும். இவற்றை நாம் நோக்கும் போது இலங்கையின் ஏற்றுமதி வருமானம் தொடர்பாக மட்டுமின்றி, இலங்கையின் பொருளாதாரம் தொடர்பாகவும் இது முக்கிய ஸ்தானத்தை வகிக்கிறது.

இச்சுதந்திர வர்த்தக வலயங்களில் வெளி நாட்டவர்களே பிரதானமாக முதலீடு செய்துள்ளனர். இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் இலாபகரமான உழைப்புச் சக்தி தேவைக்கும் அதிகமாக பெற முடிவதே, அவர்கள் இந் நாடுகளில் தமது மூலதனத்தை முதலீடு செய்வதற்கான பிரதான காரணமாகும். உழைப்புச் சக்தியை மிகவும் சூட்சமமான முறையில் உறிஞ்சுகின்ற உடை வகைகள் உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பு, தொழிலற்ற பெருந்திரளான உழைப்புப் படை உள்ள இலங்கை போன்ற நாடுகளில் இருப்பது இம் முதலீட்டாளர்கள் முண்டி அடித்துக் கொண்டு வந்திறங்குவதற்கான பிரதான இரகசியமாகும். இன்று இலங்கை உட்பட ஏனைய மூன்றாம் உலக நாடுகளில் உள்ள சுதந்திர வர்த்தக வலயங்களில் அமெரிக்கா, பிரித்தானியா, ஜெர்மனி, பெல்ஜியம், தென் கொரியா, ஹொங் கோங், சிங்கப்பூர், தாய்வான், இந்தியா, நோர்வே, நெகர்லாந்து போன்ற நாடுகளைச் சார்ந்த பெரும் முதலீட்டாளர்கள் முதலீடு செய்கின்றனர்.

இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் புரிபவர்களின் ஊதியமும் சேவை நிலைமைகளும் மிகவும் கீழ்த்தரமானவையாகும். ஆரம்ப காலத்தில் இங்கு வேலை செய்த தொழிலாளர்களுக்கு ஒழுங்கான முறையில் சம்பளம் வழங்கப்படவுமில்லை.

நாட்டின் ஏனைய தொழிலாளர்கள் அனுபவித்து வரும் சம்பள அலகோ, சேவை உரிமைகளோ இவர்களுக்கு வழங்கப்படவில்லை. இத்தொழிலாளர்களுக்கு சட்ட பூர்வமான பாதுகாப்புக்கூட இல்லை.

சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் செய்யும் தொழிலாளர்களின் ஆகக் குறைந்த மாதச் சம்பளம் 1,000 ரூபாயாக இருக்க வேண்டுமென 'சம்பள நிர்ணய சபை'யால் 1989ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் தேதி நிர்ணயிக்கப்பட்டது. இதற்கமைய Iம்தர A வகுப்பு தொழிலாளர்களின் சம்பளம் ரூபா 980/- லிருந்து ரூபா 1200/- ஆகவும், B வகுப்பு தொழிலாளர்களின் சம்பளம் ரூபா 950/-லிருந்து ரூபா 1,175 ஆகவும் IIம் தர தொழிலாளியின் ஆகக் குறைந்த சம்பளம் 830 ரூபாவிலிருந்து 1075/- ரூபாவாகவும், IIIம் தர தொழிலாளியின் ஆகக் குறைந்த சம்பளம் 810 ரூபாவிலிருந்து 1050 ரூபாவாகவும், IVம் தர தொழிலாளர்களின் சம்பளம் 800 ரூபாவிலிருந்து ரூபா 1000 ஆகவும் என விதிக்கப்பட்டது. அவ்வாறே 1990ம் ஆண்டு ஜுலை மாதம் அரசாங்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்ட சம்பள உயர்வு சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள தொழிலாளர்களுக்கும் செயல் படுத்தப்படுவதாக கூறப்பட்டது.

ஆனால் உண்மை நிலமைகளை அவதானிக்கும் போது இச் சம்பள தரப்படுத்தலானது எல்லாத் தொழிற்சாலைகளிலும் சரியான முறையில் செயல்படுத்தப் படாததை காண முடிகிறது. விசேடமாக 1990 ஜுலை மாதம் பிரகடனப் படுத்தப்பட்ட சம்பள உயர்வு சுதந்திர வர்த்தக வலயத்தின் அனேக தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. இன்னும் அநேக இடங்களில் சம்பளத்தோடு ரூபா 150 வரையான பணத்தை கூட்டி தொழிலாளர்களுக்கு வழங்குவதன் மூலம் நிருவாகத்தினர் தப்பித்துக் கொள்கின்றனர். நாளொன்றுக்கு 14, 15 மணித்தியாலம் வேலை செய்யும் இளம் பெண் தொழிலாளர்கள் ரூபா 1,050 தொடக்கம் ரூபா 1250 வரையான தொகையை மாதச் சம்பளமாக பெறுவதையும் காண முடிகிறது.

சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள தொழிற்சாலைகளின் உழைப்புப் படையில் 90% ஆனோர் பெண் தொழிலாளர் ஆவர். இது அங்குள்ள விசேட அம்சமாகும். இவ்வாறு

www.padippakam.com



பெண் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதன் மூலம் முதலீட்டாளர் இரு விதமான நன்மைகளைப் பெறுகின்றனர். முதலாவதாக பெண் உழைப்பானது ஒப்பு நோக்கில் ஆண் உழைப்பைவிட இலாபகரமானது என்பதால் முதலீட்டாளர்கள் பொருளாதார ரீதியாக பெரும் லாபத்தை சம்பாதிக்கின்றனர். இரண்டாவதாக ஆசியாவில் உள்ள பெண்கள் சமூக ரீதியில் இன்னும் பின் தங்கிய நிலையில் இருப்பதால் அவர்களை நிருவாகம் செய்வதும், தாம் விரும்பியவாறான சேவை நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிய வைப்பதும் தொழிற்சாலை நிருவாகிகளுக்கு மிகவும் இலகுவானது.

சுதந்திர வர்த்தக வலயத்தின் பெண் தொழிலாளர்களது வாழ்க்கை முறையானது 19ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இங்கிலாந்து தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளர்களது வாழ்க்கை நிலையையே எமக்கு நினைவு படுத்துகிறது. அக்கால கட்டத்தில் அவ் ஆலைத் தொழிலாளி வர்க்கம் எவ்வித தொழில் உரிமைகளும் அற்றவர்களாய், மிகத் துயரமான சேவை நிபந்தனைகளின் கீழ், மிகக் குறைவான சம்பளத்துக்கு நாளொன்றுக்கு 15-16 மணித்திலாயம் ஆலை முதலாளிகளுக்காக வேலை செய்தனர். மிகச் சிறிய 'தொழிலாளர் குடியிருப்பு மனை' களில் வசித்த இவர்கள், பொழுது விடிவதற்கு முன்னரே அரை இருளில் தமது குழந்தைகளையும் சுமந்து கொண்டு ஆலையை நோக்கிச் சென்று முழு உலகையும் இருள் கவ்விய பின்னர் பசியுடன் தமது வீடுகளை நோக்கித் திரும்புவர். சுதந்திர வர்த்தக வலயத்தின் பெண் தொழிலாளர்களையும் ஐரோப்பாவின் 19ம் நூற்றாண்டு பெண் தொழிலாளர்களையும் ஒப்பு நோக்கும் போது ஒரே ஒரு வேறுபாட்டையே காண முடிகிறது. அதாவது எமது பெண் தொழிலாளர்களுக்கு குழந்தைகள் இல்லை என்பது மட்டுமேயாகும்.

வாழ்க்கையை நகர்த்துவதற்கு போதிய அளவு சம்பளம் கிடைக்காத காரணத்தால் தொழிற்சாலை உடமையாளர்களுக்கு அவசியமான அளவு மேலதிக நேரம் வேலை செய்ய வேண்டிய கட்டாய நிலை இப் பெண் தொழிலாளர்களுக்கு ஏற்படுகிறது. அடைய முடியாத உற்பத்தி இலக்குகளை நோக்கி, உடல் நலத்திற்கு மிகுந்த தீங்கை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு தொடர்ச்சியாக கஷ்டப்பட்டு வேலை செய்கின்றனர். விடுமுறை நாட்களில் வேலை செய்யும் போது அதற்காக மேலதிக நேரத்துக்கான ஊதியம் வழங்கப்பட வேண்டுமென சாதாரண சட்டத்தில் காணப்பட்டாலும் சுதந்திர வர்த்தக வலயத்தில் இச் சட்டம் செயல்படுவதில்லை. வாழ்க்கைச் செலவு றொகட் வேகத்தில் அதிகரிக்கும் இக்கால கட்டத்தில் இப் பெண் தொழிலாளர்களின் உழைப்பை செப்புக் காசுக்காகச் சுரண்டும் இன்னுமொரு மிருகத்தனமான ஆயுதம் வருடாந்த விடுமுறைக்கான படியாகும். இவ் விடுமுறைப் படியை இத்தொழிலாளர்கள் பெற வேண்டுமாயின் அவர்களுக்கு உரித்தான 14 நாட்கள் வருடாந்த விடுமுறையில் எந்தவொரு நாளும் எக்காரணம் கொண்டும் — சுகயீனம் காரணமாகக் கூட விடுமுறையாக பெற்றிருக்கக் கூடாது. அது மட்டுமின்றி அவ் வருடத்திற்கான வேலை நாட்களில் ஒரு நாள் கூட ஒரு நிமிடமேனும் வேலைக்கு பிந்தி இருக்கக் கூடாது.

'விக்டரி காமன்ட்ஸ்' என்னும் தொழிற்சாலையில் பணியாற்றும் ஒரு பெண் தொழிலாளி "தாவிந்து" பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் பகல் நேர வேலையை முடித்த பின்னர் இரவு நேர வேலைக்காக நிறுத்தப்படுபவர்களுக்கு இரவு உணவாக ரோஸ் பாண் ஒரு துண்டும் கொஞ்சம் வெறும் தேனீரும் மட்டுமே வழங்கப்படுவதாக எழுதியுள்ளார்.

சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்களில் மிகவும் அதிகமானவர்கள் தூரத்து பிரதேசங்களின் கிராமங்களிலுள்ள மிக வறிய குடும்பங்களைச் சார்ந்த இளம் யுவதிகளாவர். தமது வயதான பெற்றோரைப் பராமரிக்கும் பொறுப்பும் கடமையும் இவர்களுக்குண்டு. எமது நாட்டு கிராமிய சமூகத்தின் நெருக்கடியான வேலை இல்லாத் திண்டாட்டம் காரணமாக மிகவும் குறைந்த சம்பளத்துக்கு மிகவும் பாதகமான சேவை நிபந்தனைகளின் கீழ் சுதந்திர வர்த்தக வலயத்தின் கம்பனிக்காரர்களுக்கு தமது உழைப்புச் சக்தியை தாரை வாரத்துக் கொடுக்க இவ் இளம் பெண்களுக்கு நேரிட்டுள்ளது.

மிகக் குறைந்த சம்பளத்திற்கு அவர்களது உழைப்பு எவ்வித ஈவு இரக்கமும் அற்ற முறையில் சுரண்டப்படுவதால் பொருளாதார ஒடுக்கு முறைகளுக்கு முகம் கொடுப்பதோடு, கிராமிய

www.padippakam.com



சமூகத் தொடர்புகளிலிருந்து பிரிக்கப்பட்டு மிக வும் கஷ்டமானதும், விருப்பமற்றதும், பழக்க மற்றதுமான சமூகத் தொடர்புகள் பலவற்றுக்கு மத்தியில் வீசப்படுவதால் ஏற்படும் மிகக் கொடூர மானதும் வேதனைக்குரியதுமான சமூக ஒடுக்கு முறைகளுக்கும் முகம் கொடுக்கின்றனர். அத் துடன் ஆண் ஆதிக்க சமுதாயத்தில் பெண் என்ற காரணத்தால் அவர்களுக்கே உரித்தான ஒடுக்கு முறைகளும் சமூக பாதுகாப்பற்ற தன் மையும் இத்துயரங்களை மேலும் பன் மடங்காக அதிகரிக்கச் செய்கிறது.

சமூக ரீதியாக இப் பெண் தொழிலாளர் முகங் கொடுக்கும் பாரதூரமான பிரச்சனை, தங்கு மிடம் தொடர்பான பிரச்சனையாகும். பெரும் பாலும் இவர்கள் 50-60 பேர் அல்லது சுமார் 100 பேர் தங்கி வாழ்கின்ற பிரத்தியோக ''போடிங் ஹவுஸ்'' களிலேயே வாழ்கின்றனர். தொழிற்சாலை நிருவாகிகளது சட்டங்களுக்கு நாள் பூராவும் கட்டுப்படும் இவர்களுக்கு தமது மிகுதி நேரத்தில் இவ் ''போடிங் ஹவுஸ்'' நிருவாகிகளது கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய நேரிடுகிறது. உணவு தயாரிப்பதற்காக மின் அடுப்பு பாவிப்பது (Hot Plates) தடை செய்யப் பட்டுள்ளது; •குறிப்பிட்ட நேரத்துடன் மின் விளக்குகள் அணைக்கப்படல் வேண்டும் ஆகிய சட்டங்கள் இவ் ''போடிங் ஹவுஸ்'' களில் செயல் படுத்தப்படுகின்றன. அநேகமான போடிங் ஹவுஸ்களில் ஒரு கிணறு, ஒரு மலசல கூடம் மட்டுமே இருப்பதால் சுகாதாரத்தைப் பேணுதல் கஷ்டமானதாகும்.

களி மண்ணினால் கட்டபபட்ட ஓலைக் கொட் டில்களிலேயே குழுக் குழுவாக தமது உணவு களைச் சமைக்கின்றனர். கோழிக் கூடுகள் போன்ற இவ் ''போடிங் ஹவுஸ்'' களுக்காக வும் உணவுக்காகவும் தமது சம்பளத்தில் பெரும் பகுதியை செலவழிக்கும் இவர்களுக்கு தமது ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்காகவும், தமது குடும்பங்களை பராமரிப்பதற்காகவும் மிஞ்சுவது மிகச் சிறிய தொகையே ஆகும்.

கட்டு நாயக, பியகம சுதந்திர வர்த்தக வலயத் திலிருந்து 30, 40 மைல்களுக்கு அப்பாலுள்ள கிராமங்களையும் நகரங்களையும் சார்ந்த 'வல யத்தின்' பெண் தொழிலாளர்கள் தினமும் தமது வீடுகளிலிருந்தே வேலைக்கு வருகின்றனர். இவர்களது போக்கு வரத்து முறையை ஆராய்ந்து பார்ப்போமாயின் அது மிகவும் துக்கமானது என்பதைக் காண முடியும். அத்தியாவசிய உடற் தேவையான நித்திரைக் காக, அநேக நாட்களில் மிஞ்சுவது 3-4 மணித் திலாயம் மட்டுமேயாகும். அவர்களது நாட்களில் மிகவும் கணிசமான பகுதியை பஸ் தரிப்பு நிலையங்களிலும் பஸ்களிலுமே செலவழிக்கின்றனர். அதிகாலையிலும் இரவி லும் கம்பஹா மாவட்டத்தின் நகர்களுக்கூடாக பஸ் ஒன்றில் பயணம் செய்யும் ஒருவரால் நித்தி ரைத் தூக்கத்துடன் நெரிசலுக்குள் பயணம் செய்யும் இவ் இளம் பெண் தொழிலாளர்களின் வேதனைக்குரிய காட்சிகளை இலகுவாகக் காண முடியும்.

இவ் இளம் பெண்கள் துயரம் நிறைந்த தமது வாழ்க்கை காரணமாக துரதிர்ஸ்டவசமான சமூகப் பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்கின்ற னர். தமது பாலியல் தேவைகளுக்காக துணை ஒருத்தியைத் தேடி சுற்றுலாவும் காமுகர்களின் வலைக்குள் இவ் இளம் பெண்கள் அகப்பட்டுக் கொள்ளும் துர்பாக்கிய நிலை எமது இன்றைய சமூகத்தின் தலைவிதியாகும். சுதந்திர வர்த் தக வலய சுற்றாடலில் முறைகேடாக உலாவும் சோடிகள் பொலீசாரிடம் சிக்கிக் கொள்வதை நாம் எப்பொழுதும் காண முடியும். ஆனால் இவ்வாறான பாதிப்புகளிலிருந்து இவர்களை மீட்டு சரியான சமூக பாதுகாப்பை பெற்றுக் கொடுப்பதற்கு இவ் இளம் பெண்கள் தொழில் புரியும் நிறுவனங்களிடமோ அல்லது எல்லாம் வல்ல அரசாங்கத்திடமோ எவ்வித வேலைத் திட்டங்களும் இல்லை.

இப் பெரும் உழைப்புப் படை இத்தகைய ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாகிய போதிலும், எமது நாட்டு தொழிலாளி வர்க்கம் தாம் நடத் திய போராட்டங்கள் மூலமாக வென்றெடுத்த அடிப்படை உரிமைகள் அனைத்தும் இவர் களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழு வின் சட்டங்களின்படி தொழிற்சங்க ஊழியர் கள் எவரும் சுதந்திர வர்த்தக வலய பிரதேசத் துக்குள் நடமாட முடியாது. இத்தொழிலாளர் கள் தமது உரிமைகளுக்காக ஆர்ப்பாட்டம் செய் வதும் சட்ட விரோதமாகும். அது மட்டுமின்றி தொழிற்சாலைக்குள் தமது தொழிற் பிரச்சனை கள் தொடர்பாக நிருவாகிகளுக்கு முறையீடு

படிப்பகம்

செய்பவர்கள் கூட தண்டனைக்குள்ளாகின்றனர்.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளரான சுதந்திர வர்த்தக வலய தொழிலாளி எச்.எம். ரஞ்சித் என்பவர் தனது தொழிற்சாலையின் இயந்திரம் ஒன்றினால் காயமுற்ற தொழிலாளர்களின் பிரச்சனை தொடர்பாக நிருவாகிகளுக்கு முறைப்பாடு செய்த காரணத்தால் வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டதோடு இது சம்பந்தமான விசாரணையை 1989ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ம் திகதி முடித்துக் கொண்டு தனது சட்ட ஆலோசகர் லயனல் என்பவருடன் வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் பொலீசாரால் கைது செய்யப்பட்டார். அவர்கள் பற்றிய தகவல் எதுவுமே இல்லை. ஆனால் கைது செய்யப்பட்ட மறுதினம் எரிக்கப்பட்ட நிலையில் இரு சடலங்கள் அண்மைப் பிரதேசத்தில் காணப்பட்டன. இது இவ் இருவரதும் சடலங்களே என சக தொழிலாளர்கள் சந்தேகப்படுகின்றனர். ஆளும் கட்சி ஆதரவாளரது நிலையே இதுவென்றால் ஏனைய தொழிலாளர்களின் நிலை கேள்விக் குறியேயாகும்.

இத்தகைய அச்சுறுத்தல்கள் சட்டத் தடைகள் மத்தியிலும் அவற்றை தகர்த்துக் கொண்டு சில சந்தர்ப்பங்களில் வேறுபட்ட சுயரூபங்களில் போராட்டங்கள் ஏற்படுவதை நாம் காண முடிகிறது.

1987ம் ஆண்டு சக தொழிலாளர்கள் சிலருக்கு தண்டனை வழங்கியதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக 'சிலோன் கறியர் அப்பரல்' நிறுவனத்தின் தொழிலாளர் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஏ.ஜே. மில்டன் நிறுவனத்தின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்ததால் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழு தலையிடும் நிலை ஏற்பட்டது. அட்லஸ் கிளவுஸ், இசபெலா, ப்ராடெக்ஸ் மாக் பென், ஜரோல் கிரீன்ஸ் ஆகிய நிறுவனங்களின் தொழிலாளர்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். 1989ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் திகதி ஒரு தொழிலாளியை வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்ததற்கு எதிராக அத் தொழிற்சாலையில், தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இப்போராட்டத்தில் செயலூக்கத்துடன் ஈடுபட்ட காரணத்திற்காக 17 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இதற்கு எதிராக தொழிலாளர் போராடியதோடு அதனை அடக்குவதற்கு பொலீசார் வரவழைக்கப்பட்டனர். எவ்வாறாயினும் நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கமர்த்த நிருவாகிகளுக்கு நேரிட்டது. 1987 நவம்பர் மாதம் ''ஸ்மாட் சேட்'' நிறுவனத்தில் தொழில் செய்யும் ரணதுங்க மெனிக்கே என்னும் பெண் தொழிலாளியின் கண்ணில் தையல் ஊசி ஏறிய சம்பவத்தை முதன்மைப் படுத்தி ஏற்பட்ட போராட்டம் வெற்றிகரமாக முடிவு பெற்றது. ''ஸ்டார் கார்மன்ட்'' நிறுவனத்தில் வேலை செய்யும் அம்பாரை மெனிக்கே என்னும் இளம் யுவதி தனது தொழிலின் துயரங்கள் பற்றி ''தாவிந்து'' பத்திரிகைக்கு கவிதை எழுதிய காரணத்திற்காக அவரை வேலையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கையில் நிருவாகம் ஈடுபட்ட போது அதற்கு எதிராக சக தொழிலாளர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் காரணமாக அவரை மீண்டும் வேலைக்கமர்த்த நேரிட்டது. 1989ம் ஆண்டு டிசம்பர் மாதம் கிறிஸ்மஸ் விடுமுறைக்காக போனஸ் கோரி சேட் தொழிற்சாலை ஒன்றின் தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக அவர்களது ஒரு மாதச் சம்பளத்தின் 3/8 பகுதியை நிருவாகம் தொழிலாளருக்கு வழங்கியது.

இவ்வாறு அவ்வப்போது அங்கும் இங்குமாக ஒருமுகப் படுத்தாத முறையில் ஆர்ப்பாட்டங்கள் தன்னியல்பாக வெடித்துக் கிளம்பிய போதிலும் ஒருமுகப் படுத்தப்பட்ட தொடர்ச்சியாகப் பரவிச் செல்கின்ற போராட்டத்தைக் காண முடிவதில்லை.

இவ் இளம் பெண் தொழிலாளர்களது மனத் தாக்கங்களை சாதகமாகப் பயன்படுத்தி தமது மடியை வளர்த்துக் கொள்ள அனேகர் முயல்கின்றனர். காளான் பூப்பது போல் பரவி வரும் கீழ்த்தரமான குறும்புச் சித்திரக் கதைகளுக்கும், 'பாலுறவுக்கு' என தமக்குத் தாமே முத்திரை குத்திக் கொண்டு வெளிவரும் கீழ்த்தரமான வெளியீடுகளுக்கும் சுதந்திர வர்த்தக வலயத்தின் இவ் இளம் யுவதிகள் பெரும் சந்தையாக அமைகின்றனர். கலாச்சார ரீதியாக கீழ் மட்டத்திலிருப்பதும், அறிவு பூர்வமான பொழுது போக்கு நிகழ்ச்சிகளை தேடிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் மிகவும் மட்டுப் பட்டிருப்பதும் சுல

www.padippakam.com



பமாக ரசிக்கக் கூடியவற்றை நோக்கி இவர்கள் தள்ளப்படுவதற்குக் காரணமாகும். இவ் இளம் யுவதிகள் தொழில் ரீதியாக முகங் கொடுக்கும் ஒடுக்கு முறைகளையும் ஏனைய மானசீக பிரச்சனைகளையும் பற்றி மேலெழுந்த வாரியாக விபரிப்பதன் மூலம் இவ் இளம் பெண் தொழிலாளர்களின் உள்ளத்தை வெற்றி கொள்வதில் இவ் வெளியீட்டாளர்கள் திறமை பெற்றுள்ளனர்.

இவ் இளம் பெண் தொழிலாளர்கள் எமது நாட்டு தொழிலாளி வர்க்கத்தின் குறிப்பிடத்தக்க விகிதாசாரத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். இத் தொழிலாளர்களை ஸ்தாபன மயப்படுத்தலுக்கு இன்றைய சட்டங்கள் எவ்வளவு தடையாக அமைந்தாலும் அவற்றை உடைத்துக் கொண்டு செய்யக்கூடிய அக நிலைக் காரணிகள் உருவாகியுள்ளன. ஒரு புறத்தில் இப் பெண் தொழிலாளர்கள் வர்க்க ரீதியாக ஸ்தாபன மயமாவதற்கு பொருத்தமான தகமைகளைக் கொண்டுள்ளனர். அதாவது இலங்கையின் வேறு எந்தத் தொழிலாளர் பிரிவினரையும் விட மையப்படுத்தப் பட்டுள்ளனர். தொழிற்சாலைகளில் பெருமளவில் குவியலாக உள்ளனர்; மறு புறத்தில் தங்குமிடங்களைப் பொறுத்த வரையிலும் பிரதேசத்துள் குவியலாக உள்ளனர். அவர்களது உழைப்பின் உபரி ஆலை உடமையாளர்களின் சுரண்டலுக்கு உள்ளாவதும் மிகவும் வேதனை மிக்க சமூகச் சூழலில் முகங் கொடுக்கும் ஒடுக்கு முறைகளும், அதற்கும் மேலாக பெண் என்ற காரணத்துக்காக அனுபவிக்கும் ஒடுக்கு முறைகளும் ஸ்தாபன மயப்படுதலுக்கு அவசியமான அகநிலைக் காரணிகளாகும்.

கிராமிய வேர்களைக் கொண்ட முதிர்ச்சியற்ற இவ் இளம் யுவதிகள், சுரண்டப் படுகின்ற ஆலைத் தொழிலாளர்கள் என்ற ரீதியில் ஸ்தாபன மயப்படுதலுக்கு அவசியமான அகநிலைக் காரணிகளைக் கொண்டிருந்த போதிலும், சிந்தனை ரீதியாக கிராமிய நிலப்பிரபுத்துவ கருத்தமைவையே கொண்டுள்ளனர். பாரிய ஒடுக்கு முறைகளுக்கு முகங் கொடுத்தாலும் உட்புற நெரிசல்களால் மட்டும் அவர்கள் பலம் பொருந்திய ஸ்தாபனமாக மாறுவர் என எதிர்பார்ப்பது தவறாகும். அவர்கள் ஸ்தாபனமயமாவதற்கு அவசிய புறநிலைக் காரணியான எமது நாட்டு தொழிலாளி வர்க்க இயக்கமும் அதனுடன் பின்னிப் பிணைந்த ஜன நாயக சக்திகளும் சிதைவு பட்டுள்ளமை நாம் அனைவரும் இன்று முகங் கொடுக்கும் துர்பாக்கிய நிலையாகும்.

○ ○ ○

www.padippakam.com

TORONTOவில் வாசகசாலையுடன் கூடிய நூலகம்

# "தேடகம்"

விரைவில் வெளிவருகிறது

**வ. ஐ. ச. ஜெயபாலனின்**

**'ஒரு அகதியின் பாடல்'**

வெளியிடுவோர் : தேடல் பதிப்பகம்

□ □ □

சேரனின் "எலும்புக் கூடுகளின் ஊர்வலம்"

கவிதைத் தொகுப்பு பெற்றுக் கொள்ள,

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**தேடல் பதிப்பகம்**

**566 Parliament St**

**TORONTO-ONTARIO M4X 1P8**

படிப்பகம்

www.padippakam.com



## ● இருப்பு

### ○ ஹம்சத்வனி

இலைகளும் கிளைகளுமாய்
இருப்பை உணர்த்தும்
மரத்தின் மகத்துவம் போன்றதுதான்
வாழ்க்கை—அதற்காகவே
அட்டையாய் கவ்வும் உணர்வுகளின்
இரத்த உறிஞ்சல்களை சகித்துக்கொள்.

அலைகளும் ஆர்ப்பரித்தென்ன ?
ஒரு கையிலேனும் அள்ளித்
தாகம் தணிக்க முடியாதபடி.
சுனைகளின் ஊற்றுகள்
சங்கமிப்பதும் அதனோடுதானே.
வார்த்தைச் சுனையின்
குளிர்மையைப் பருகியிரு.

உறவுப் பூக்களின் வாசனையை
பிடுங்கிக் கொண்ட காற்றும்
சுவாசத்திற்கு ஆகா நஞ்சு இப்போது,
திணறலிலும் நம்பியிரு !
வாழ்வு எப்படியாயினும் முகிழ்க்குமென்று.

வார்த்தைகளுக்குச் சளைக்காமல்
கொள்ளி சொருகும் வெயில்
எனினும்—
தண்ணென்றிருக்கும் குழந்தையின்
கன்னங்களை எண்ணியிரு.

அத்தனையும் அறியத் துடித்து
தவழும் சின்னக் கால்கள்
மனதில் தவழ
மகிழ்ந்திரு.

---

## ● அகதி

### ○ ஆனந்த பிரசாத்

கிழித்துப் போடுவதற்கு
திகதிகள் இல்லாத—
கழிந்து போவதற்கு
நாட்களில்லாத—
ஒரு பொழுதில் நானிருப்பேன் !
வரைபடமே இல்லாத
தேசத்தை நான்
ஆண்டு கொண்டிருப்பேன் !
நிற்பதற்கும், நடப்பதற்கும்,
நித்திரைக்கும், பதுங்கவும்
பூமிப்பரப்பில் நான்
உபயோகிக்கும் நிலமெல்லாம்
அவ்வப்போதில் எனது
ஆளுகைக்கு உட்படுகிறது.
என் வரையில் மாறுவது
ஆட்சியல்ல, தேசமே.
பேச்சு வழக்கிலுள்ள
அத்தனை மொழிகளிலும்
மழலையையே பயிலுவதால்
ஆட்சி மொழியாக
அதுவே அரசோச்சும்.
பருவ்காலங்கள்
பலவாறு மாறும்,
வாழ்வின் பருவங்கள்
வலுவிழந்து போகும்.
எப்போதாகிலும்
இரத்த புஷ்டியோடு
மனித நாதத்தை
மீட்டிக் கொண்டிருப்பேன்,
பெரும்பாலான கணங்கள்
இயந்திரமானாலும்கூட.
இலைகளைத் தூக்கிக்கொண்டு
மரம் மட்டும் புலம்பெயர்கிறது
உதிர்வதற்குப் பயந்துபோய் !

www.padippakam.com



## ● ஒன்றோடு ஒன்று

○ பா. அ. ஜயகரன்

என் புலனோடு புதிதாய் புணர்வதும்
பின்னோர்கால் மடிவதுமாய்
காலத்தின் பின்புற மறைவில்
ஒளிபுகா குடிசைக்குள் நான்.

கற்பனைகளோடு திரிவது வரையறுக்கப்பட்டு
புதுப் பக்குவத்தோடு வெளிக் கிளம்பி
அரைகுறை மாதத்துள் மணம் கிளம்ப
மீளப் பதுங்கி இன்னோர் முகத்தை செதுக்கு
கிறேன்.

விரைந்து சென்ற விளைவில்
முட்டி மோதிப் படிந்துணர்ந்ததில்
படர்ந்திருக்கும் முற்களுக்குள்
பவுத்திரம் தேடும் கால்கள்.

வாசல்களை இடித்து வானத்தின் கீழ்
சந்திக்கும் வரை
முன் கதவுகளை இறுக மூடி
பின் கதவுகளை மெல்லிதாய் திறந்து
வரவேற்கக் கற்றுக் கொண்டேன்.

புறப்பாட்டுக்காய் அதீத எண்ணங்களோடு
தந்திரமான காலங்களை அடித்து
நொருக்கி
மறைந்த காரணங்களை வெளிக் கொட்டி
பாதையை செப்பனிட்டு
நம்பிக்கை எச்சரிக்க
நம்பிக்கையை எச்சரித்தும்
மீண்டும் பாதங்களை
அவ்வெல்லை நோக்கி நகர்த்துகிறேன்.

---

## ● SEX

○ அ. கந்தசாமி

அதுதான்
அதுக்குத்தான்
இதுதான்
இதுக்குத்தான்.
பின்னணியின் அதிர்விலோர்
புகைவண்டியின் நகர்வு

இதய நாளங்களின்
கேந்திர முனைகளில்
பின்னலாய் படரும்
மின்னலின் இழைகள்.

கோடுகள் நிமிர்ந்து
வளைவுகள் உடைய

நவீன ஓவியம்
நட்டாற்றில் கலங்க

யன்னல் வெளிக்குள்
நீந்திய வானில்
பஞ்சுப் பொதிகளுடன்
பால் நிலாவின் புணர்ச்சி

ஏற்றிய நாணோ
இறுக்கத்தில் விம்ம
ஏறிய அம்புகள்
இலக்குகள் தேடின

மாதவளைப் பார்த்தேன்
அவளோ
மாத நோய் என்றாள்.

# கார்கோடன் குறிப்புகள்

□ □ □

'இலங்கையின் அரசியல் வன்முறைகள்—இன்றைய நெருக்கடிகளும் அதன் வேர்களும்' பற்றிய ஓவியப் புகைப்படக் கண்காட்சி ஒன்று மனித உரிமைகளுக்கான இலங்கையர் அமைப்பினால் ரொறன்றோவில் (கனடா) மார்ச் 30, 31 திகதிகளில் நடத்தப்பட்டது.

தேசிய இனப்பிரச்சனையின் தோற்றம் அதன் வளர்ச்சி, 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர் மாறி மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தேசிய இனப் பிரச்சனையைத் தீர்க்கத் தவறியதால் ஏற்பட்ட விளைவுகளையும் இக்கண்காட்சி எடுத்துக் காட்டியது. இலங்கை இன்று மிகவும் ஆழமான அரசியல் நெருக்கடிகளின் மத்தியில் பயணம் செய்து கொண்டிருககிறது. சகல இன மக்களும் துப்பாக்கிகளின் நீண்ட நிழல்களுக்குக் கீழ் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

உயிர் வாழ்தல், தனது கருத்தை சுதந்திரமாக வெளியிடுதல், தனது கருத்துக்கு ஏற்ப ஸ்தாபனம் ஒன்றை அமைத்தல் ஆகிய அடிப்படை மனித உரிமைகளை இழந்த நிலையிலேயே எமது மக்கள் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இலங்கையின் இன்றைய வன்முறை அரசியல் காரணமாக கடந்த எட்டு வருட காலத்தில் கொல்லப்பட்டு காணாமற் போன பொது மக்கள் தொகை 80,000க்கும் அதிகமாகும். அரசின் புள்ளி விவரப்படி 11 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் நாட்டுக்குள்ளேயே அகதிகளாக்கப் பட்டுள்ளனர். இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். பெருமளவில் உடமைகளும் அழிக்கப்பட்டுள்ளன.

பாரிய அளவிலான மனித உரிமை மீறல்களதும் இன்றைய அரசியலினதும் வேர்கள் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையுடன் தொடர்புள்ளவை.

''இலங்கையின் ஜனநாயகம், சமூக நீதி, நிலையான சமாதானம் ஆகியவற்றை நோக்கிய எமது பயணத்தின் ஒரு படியாக இக் கண்காட்சியை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்'' மனித உரிமைகளுக்கான இலங்கையர் வெளியிட்ட குறிப்பு இவ்வாறு கூறுகின்றது.

ஜெர்மன் புகைப்படக் கலைஞர் வால்டர் மற்றும் பெயர் குறிப்பிடா இலங்கைப் புகைப்படக் கலைஞர்களினதும் 119 புகைப்படங்கள் புகைப்படக் கண்காட்சியில் இடம் பெற்றன.

சாத்வீகப் போராட்டங்கள், யூலை 83 நிகழ்வு, தமிழ் பிரதேசங்களில் இராணுவ நடமாட்டம், இராணுவத்தின் தொடரும் அழிவு நடவடிக்கைகள், அகதிகள் நிலை, இந்திய இராணுவத்தின் வருகை, இந்திய இராணுவத்தின் அழிவு நடவடிக்கைகள், இந்திய இராணுவத்தின் வெளியேற்றம், மீண்டும் யுத்தம், தென் இலங்கையில் பதட்டநிலை என்று வகைப்படுத்தப்பட்டு புகைப் படங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. இவற்றோடு தமிழ் ஆயுதக் குழுக்களினால் சிங்கள மக்கள் கொல்லப்பட்டமை, தனியாதிக்க நடவடிக்கை, முஸ்லீம் மக்களின் வெளியேற்றம் போன்ற காட்சிகளை சித்தரிக்கும் புகைப் படங்களும் இடம் பெற்றன.

புகைப்படம், பாஸ்போட்டு, அடையாள அட்டை எடுப்பதற்கும் திருமண வீட்டிலும் பிறந்த நாளிலும் எடுத்து ஆல்பங்களில் ஒட்டுவதற்கும் என்ற அளவிலேயே நாம் தெரிந்து வைத்திருக்கின்றோம். இதற்கு மாறாக, புகைப்படம் ஒரு நுட்பமான கலை. ஓவியத்தைப் போலவே ஆயிரம் வார்த்தைகளில் எழுதியும் ஏற்படுத்த முடியாத உணர்வை சந்தர்ப்பங்களில் கவிதை கூட ஏற்படுத்த முடியாத தாக்கத்தை நல்ல புகைப்படம் ஏற்படுத்திவிடுகின்றது.

கண்காட்சியில் இடம் பெற்ற ஓவியங்கள் புகைப் படங்களுக்கு மேலாக அனைவரது கவனங்களையும் ஈர்த்துவிட்டன என்றே சொல்ல வேண்டும்.

www.padippakam.com



யுத்தத்தின் அழிவு, அகதி, தேடுதல் வேட்டை, ஆகாயத் தாக்குதல், யுத்தம், பெண்கள்—மரணங்கள், சிறுவர்களிடம் ஏற்படுத்திய தாக்கம், மீன்பிடி, இந்திய-இலங்கை ஒப்பந்தம், இந்திய இராணுவத்தின் வருகையும் வெளியேற்றமும், வதை வைத்திய சாலை, பதுங்கு குழி வாழ்வு, ஜனநாயகக் கருத்து வெளிப்பாட்டின் பின் விளைவு, எதிர் காலம் எனப் பல பொருள்களை ஓவியங்கள் சித்தரித்தன.

எம் மண்ணின் அவலங்களை, மக்களின் வாழ்வை தத்ரூபமாக இவை சித்தரித்தன.

எம் மக்களோடு வாழ்ந்து மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அந்த நிலைமைகளை உயிரோவியங்களாக சிருஸ்டித்த ஓவியர்கள் மிகவும் பாராட்டுக்குரியவர்கள். இவர்களின் பெயர்கள் வெளிப்படுத்தப்படவில்லை. நமது நாட்டின் ஜனநாயகத் தன்மையையே இதுவும் சுட்டிக் காட்டுகிறது.

சிதைந்து சீர் குலைந்து போன நமது தேசத்தின் மனித உரிமைகள் அடிப்படைச் சுதந்திரங்களின் கறை படிந்த முகத்தை மீட்டுச் சீர்படுத்தும் முயற்சியில் இந்த ஓவியப் புகைப்படக் கண்காட்சி காத்திரமான ஒரு நிகழ்வு.

நூற்றுக் கணக்கானவர்கள் இதனை பார்வை இட்டுச் சென்றனர். இதில் பெரும் பகுதியினர் தமிழர் அல்லாதவர்கள் என்பதை குறிப்பிட்டு ஆக வேண்டும். "இலங்கையைப் பற்றி தெரியாமல் வந்தேன் தெரிந்து கொண்டு செல்கின்றேன்" என்று ஒரு ஆங்கிலேயர் குறிப்பிட்டார்; இக் கண்காட்சி இலங்கையின் நிலைமைகளை தமிழர் அல்லாதவர்களுக்கு எளிமையாகவும் ஓரளவிற்கு பிரதானமான பகுதிகளையும் புரிய வைப்பதற்கு நல்லதொரு கருவியாக செயற்படுகின்றது. கனடாவின் பல பகுதிகளிலும் இவ் ஓவியப் புகைப்படக் கண்காட்சியை நடத்த அமைப்பாளர்கள் திட்டமிடுவதாக தெரிகிறது.

○ ○ ○

காலம் இதழ்களுக்கிடையே உள்ள இடைவெளி அக்கால கட்டத்தில் இடம் பெறும் முக்கிய நிகழ்வுகளைப் பற்றியும் காலம் தாழ்த்தியே கருத்துச் சொல்ல வேண்டிய நிலமையுள்ளது... இலங்கையில் இருந்து வந்த ஒரு கடிதத்தினை இங்கு முன்வைக்கின்றேன் :

......நாட்டில் பல விடயங்கள் நடந்துவிட்டன. எதையெல்லாம் எழுதுவது, எதையெல்லாம் விடுவது ஒன்றுமே தெரியவில்லை. எமது குடும்பம் உங்கள் அம்மா ஆகியோர் உயிராக நலமாக இருக்கின்றோம். நாளை எதுவும் நிகழலாம். எதையும் வெளியில் சொல்ல முடியாது. எங்கும் பூதங்கள் உண்மையை விழுங்க தயாராக இருக்கின்றன. வாய் உண்ண மட்டுமே. எங்கே போவது என்ன செய்வது என்று ஒன்றுமே தெரியவில்லை. பிள்ளைகளின் கல்வி நாசமாய் போகிறதே என்பதுதான் மனதை வருத்தும் விடயம். அடுத்த வருடம் மகனும் போருக்கு தீனியாய் போய்விடக் கூடுமோ என்ற அச்சம், வயது அப்படி. யாழ்ப் பாணத்தில் உண்மை, மனச்சாட்சி உட்பட எதுவுமே இல்லை. எல்லாவற்றையும் குண்டுகள் தாக்கி அழித்துவிட்டன. கொழும்பு வழக்கமாகவே நரகம், இப்போது எப்படியோ. பட்டினியால் சாகாமல், குண்டுகளுக்கு தப்பி ஓடி அலைந்து மீண்டும் வந்து தங்கி உண்டு வாழ்ந்து வருகிறோம். நம்பிக்கை ஒளிக்கீற்று ஏதும் தென்படவில்லை. குகமூர்த்தியின் விடயம் நிம்மதியாய் நித்திரை கொள்ளக் கூட முடியாமல் இருக்கிறது. இதுவரை எவ்வித தகவலும் இல்லை.

காணக் கூடாத எல்லாக் காட்சிகளையும் காண்கிறோம். எல்லாவற்றிற்கும் சாட்சியாக மரமாக நின்று வாழ்கிறோம். 24 மணி நேரத்தில் வடபகுதி முஸ்லீம் மக்கள் அனுப்பப்பட்டு விட்டார்கள். நிலை மிகமிக மோசம். கொலைகள் கற்பழிப்புகள் தினமும். உடைந்த வீடுகளிலிருந்து மரங்களை விறகுக்காக களவெடுத்துக் கொண்டு ஒரு குடிகாரன் மழையில் நனைந்தபடி "ஐயா எல்லோரும் கள்ளன், நானும் கள்ளன்" என்று பாடிக் கொண்டு போகிறான். அவனுடைய வாக்கியமே உண்மையான தேவ வாக்கியம்...........கப்பலினூடாகத்தான் கடிதங்கள் போகின்றன. அதுவும் மாதம் ஒரு தடவை ஒழுங்காக இல்லை. மின்சாரம் எரிபொருள் எதுவும் இல்லை. இங்கும் கடிதங்கள் உடைக்கப்பட்டு வாசிக்கப்படும் காலம் இது. கடையில் முத்திரை இல்லை. கடிதங்கள் போய் சேர்வதும் வருவதும் அதிர்ஸ்டங்களைப்பொருத்

www.padippakam.com



தது. உலகம் பெரிய சிறை. யாழ்ப்பாணம் ஒரு சிறிய சிறை. புரிந்தால் சரி. என் குழந்தைகள் உங்களை விசாரிப்பார்கள். எனது 2வது மகன் பதுங்கு குழிக்குள் இருந்து கொண்டு விமானம் குண்டு வீசும் போது பாடுவான்: ''வானம் இடிந்து விழுந்திடலாம் பெரும் பிரச்சனைகள் வந்திடலாம்'' என்று.

○ ○ ○

நவீன கலை-இலக்கியம்
குறித்த அனைத்துப்
புத்தகங்களையும் பெற
தொடர்பு கொள்ளுங்கள் :

வயல்

பதிப்பாளர்—புத்தக விற்பனையாளர்

5 கச்சேரி சந்து
மயிலாப்பூர்
சென்னை
600 004

□ □ □

நாடகக் கலைக்கான ஓர் இதழ்

'வெளி'

○ ○ ○

இதுவரை
ஐந்து இதழ்கள்
வெளிவந்திருக்கின்றன.

○ ○ ○

முகவரி :
ரெங்கராஜன்
1415, 2வது தெரு
முதல் செக்டார்
கே. கே. நகர்
சென்னை 600 078

www.padippakam.com


★ சுடு சுடு அப்பம், தோசை எங்களது காலே SPECIAL

★ வட அமெரிக்காவில் மிகப்பெரிய இலங்கை உணவு விற்பனே நிலேயம்

★ சகலவிதமான உணவுவகைகளிற்கும்

★ உங்களது திருமண வைபவங்களிற்கு தேவையான மணவறை தலேப்பாகை, குத்துவிளக்கு போன்றவற்றை எங்களிடம் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.

★ விமானச் சீட்டுகளிற்கு சுந்தரியைத் தொடர்பு கொள்ளுங்கள்

# சிவாஸ் ரேடிங் கம்பனி

# SIVA'S TRADING CO. LTD.

3852 FINCH AVE. E. KENNEDY/FINCH, SCARBOROUGH

TEL : **321-2739**

---

# ARUNA VIDEO CENTRE

PROFESSIONAL TRANSFER OF VIDEOS THROUGH DIGITAL SYSTEMS AT TELEVISION STANDARD LEVEL

VIDEO RECORDING & SOUND SYSTEM ● WEDDING & PARTYS

A. BALAN

Tel : (416) 467-0806 or 467-9916

31st Dennis Drive, 914 Donmills, Ontario M3C 1G7

# அருணா வீடியோ

திருமண பிறந்ததின விழாக்கள் மற்றும் பொது வைபவங்களையும் சிறந்த முறையில் வீடியோவில் படம் பிடிக்க நாடுங்கள்

**அ. பாலன்**

*(416) 467-0806; (416) 467-9916*


படிப்பகம்

## இந்தோ சிலோன் சினக் அன்ட் ஸ்பைஸ்

இலங்கை இந்திய மக்களின் நன்மை கருதி சகல வைபவங்களுக்குமான உணவுப் பொருட்கள் எங்களினால் தயாரித்து குறித்த நேரத்தில் வழங்கப்படும். இடியாப்பம், பிறியாணி, கொத்து ரொட்டி, தோசை, அப்பம், இறைச்சி, மீன், நண்டு, இறால், கறி வகைகள், வடை, றோல்ஸ், பற்றிஸ், கட்லட், சமுசா, கேக் வகைகள், லட்டு மற்றும் இனிப்பு வகைகள்.

மேலதிக விபரங்களுக்கு

292-2272-298-7255

4800 SHEPPARD AVE. EAST., UNIT 201,
SCARBOROUGH, ONT. MIS-4N2

---

## ஈழம் ஸ்டோர்ஸ்

- உங்களுக்கு தேவையான சகல இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், இறைச்சி, இருல், மீன் கணவாய் உடன் மரக்கறி வகை, பால் பழ வகைகளை பெற்றுக் கொள்ளலாம்.
- மேலும் பிறந்த நாள், திருமண நாள் மற்றும் பண்டிகை நாட்களுக்கு தேவையான பரிசுப் பொருட்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.
- உங்களது திருமண வைபவங்களுக்கு தேவையான மணவறை, தலைப்பாகை, குத்து விளக்கு போன்றவற்றை எங்களிடம் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

T.P. (416)-298-7255

## V. P. ENTERTAINMENT

- தமிழ், மலையாள, சிங்கள வீடியோக்கள் வாடகைக்கும் விற்பனைக்கும் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.
- ECHO (Original) ஒலிப்பதிவு நாடாக்கள் C.D. இசை லேசர் இசைத்தட்டுக்கள், சகல விதமான "தமிழ் சஞ்சிகைகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
- குறைந்த செலவில் FAX சேவை
- TAMIL VEDIO MOVIE RENT FOR DAY 99
- திருமண வைபவங்களை மனதைக் கவரும் வண்ணம் வீடியோவில் படம் பிடித்துத் தரப்படும்.

T.P. 609-1744 FHX :- 609-3395

**4565 SHEPPARD AVE. E.**
**SCARBOROUGH. ONT. MIS-IV3**

---

## இந்தோ சிலோன் ஃபுட்ஸ்

இலங்கை இந்திய தானிய வகைகள், கடல் உணவு, ஆட்டிறைச்சி, வகைகள்

மங்கள வைபவங்களுக்கான பரிசு வகைகள்

தமிழ் ஓடியோ, வீடியோ, C. D. லேசர் இசைத் தட்டுக்கள் போன்ற வைக்கு மிசுசாகாவில் நாட வேண்டிய இடம்.

இந்தோ சிலோன் ஃபுட்ஸ்

**25 AGNES. ST – MISSISSAUGA. T·P. 896–0865**

www.padippakam.com

For Private Circulation only

Kaalam Tamil Quarterly 3 & 4



ஸ்ரீ சிவா ஜுவலறி

SRI SIVA JEWELLERY

721 Bloor St. W, Suite 2C, Toronto, Ontario

(416) 531 – 4867

Printed at Mithila Achchagam, Mylapore, Madras-600 004.

படிப்பகம்